Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 242 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 10, வெள்ளி 26.07.2013



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

**இந்தியா**



பக். 06

ஆதரிக்கும் கட்சிகள் தேர்தலில் புறக்கணிப்பு

**உலகம்**



பக். 07

தடம்புரண்டது ரயில்

**விளையாட்டு**



பக். 23

சாதித்தது பாகிஸ்தான் தொடரை இழந்தது தீவுகள்

# இணக்க அரசியலுக்கு விக்கியே பொருத்தம்

## கூட்டமைப்பின் முடிவு தமக்கு சாதகம் என்கிறார் பஸில்

கொழும்பு, ஜூலை 26

''அரசுடன் இணக்க அரசியல் நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சி.வி.விக்னேஸ்வரனே பொருத்தமானவர். ஏனெனில் அவர் எமது அமைச்சர் ஒருவரின் உறவினர். இவரின் நியமனத்தை நாம் வரவேற்கிறோம். இந்த விடயத்தில் கூட்டமைப்பின் முடிவு எமக்குச் சாதகமானது.''

– இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ்ப் பத்திரிகை ஊடகவியலாளர்களுடன் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று விசேட கலந்துரையாடலொன்றை நடத்தினார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் கருத்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக நியமித்துள்ளமை எமக்குச் சாதகம்தான். இவரது நியமனத்தை 'நாம் வரவேற்கிறோம். ஏனெனில் அவர் எமது அமைச்சர் ஒருவரின் உறவினர். அத்துடன், எம்முடன் இணைந்து செயற்படக் கூடியவர்.

தமிழ்க் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் வேட்பாளர் விடயத்தில் வடக்குத் தமிழர்களை அவமதித்து விட்டது என்று சொல்லலாம். ஏனெனில், நாடாளுமன்றம் என்பது தேசிய இடம். அங்கு எவரும் பிரதிநிதித்துவப் படுத்தலாம். ஆனால் மாகாண சபை எனும்போது குறித்த மாகாணத்தைச் சேர்ந்தவரே அதைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். முதலமைச்சர் வேட்பாளராகவும் அந்த மாகாணத்தைச் சேர்ந்தவரையே நியமிக்க வேண்டும். இந்த விடயத்திலேயே வடக்குத் தமிழர்களை கூட்டமைப்பு அவமதித்து விட்டது.

விக்னேஸ்வரனை தேசிய அரசியலில் களமிறக்கலாம். கூட்டமைப்புக்குத் தேவையாயின் சுமந்திரனின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விக்னேஸ்வரனுக்கு வழங்கலாம்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில், நான்கு மாவட்டங்களில் நாம் முன்னணியில் இருக்கின்றோம். எமக்கான வெற்றிவாய்ப்புகள் அங்கு அதிகமாக இருக்கின்றன. அந்த வெற்றியை நாம் எதிர்பார்க்கிறோம். வடக்குத் தேர்தலுக்கு நாம் ஏற்கனவே தயாராகிவிட்டோம் – என்றார் அமைச்சர் பஸில். (ஜ-சி)

## வடக்குத் தேர்தல் 4 மாவட்டங்களில் வேட்பு மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியது. இதில் முல்லைத்தீவு மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் ஒவ்வொரு கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

பௌத்த பிக்குவைச் செயலாளராகக் கொண்ட ஜன செத பெரமுன கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் செல்வி கௌரி லியனகே என்பவரைச் செயலாளராகக் கொண்ட ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி நேற்று மதியம் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழு ஒன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று எந்தக் கட்சியும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை. (ஒ-5)

## 85 கிலோ கஞ்சாவுடன் ஐவர் மாட்டினர்



மன்னார், ஜூலை 26

மன்னார், சவுத்பார் கிராமத்தில் 85 கிலோ கஞ்சாவுடன் ஐந்து பேர் நேற்று மாட்டிக் கொண்டனர்.

சிறப்பு அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, குறித்த நபர்களைக் கைது செய்த இராணுவத்தினர் அவர்களிடம் இருந்த 85 கிலோ கஞ்சாவையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் பின்னர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஈழத்தமிழர் தொடர்பான இந்தியக் கரிசனை மாறா

## மன்மோகன்சிங் உறுதி

சென்னை, ஜூலை 26

ஈழத் தமிழர்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிப்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா தொடர்ந்து முயற்சிக்கும். இந்த நிலைப்பாட்டிலிருந்து இந்தியா ஒரு போதும் மாறாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தும் இலங்கை அரசின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக் கோரி, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கடிதம் எழுதியிருந்தார்.

அதற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே மன்மோகன் சிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல்

தொடர்ச்சி: பக்கம் 21

# மருத்துவ பீட மாணவன் நிரபராதி என விடுதலை

## நான்கு வருடத்தின் பின்

யாழ்ப்பாணம், ஜூலை 26

பயங்கரவாதத் தடைச்சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டு நான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவனின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டு நிரபராதி என இனங்கண்டு நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி அ. பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ராஜன்குமார் என்ற மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் 2009 ஒக்ரோபர் மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி இரணைமடுக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் வன்செயலுக்கு உதவியமை, ஆயுதப் பயிற்சி பெற்றமை உட்பட அவருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நான்கு வருடங்களாக தடுப்பில் வைக்கப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி: பக்கம் 21

# வாதரவத்தையில் இளம் பெண்ணின் எலும்புக்கூடு, எச்சங்கள் நேற்று மீட்பு

## வன்புணர்வின் பின் கொலை எனச் சந்தேகம்



யாழ்ப்பாணம், ஜூலை 26

வாதரவத்தை சந்தியில் இராணுவ காவலரணை அண்மித்து கடற்கரைக்குச் செல்லும் ஒழுங்கையில் பற்றைக்குள் இருந்து இளம் பெண்ணின் எலும்புக்கூடு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் குறித்த பெண்ணின் ஆடைகள், அணிகலன்கள் சிதறிக் காணப்படுவதனை அடிப்படையாகக் கொண்டு அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

மண்டை ஓடு, உடற்பாக எலும்புகள் அங்கு பரவிக் காணப்படுகின்றன.

வாதரவத்தைச் சந்தியிலிருந்து குறித்த ஒழுங்கையூடாகச் செல்லும்போது கோயில் ஒன்று காணப்படுகின்றது. அதிலிருந்து

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பு திங்களன்று வேட்புமனு

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை எதிர்வரும் திங்கள் கிழமை தாக்கல் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக வேட்பாளர் பெயர்ப் பட்டியலை தயாரிப்பதற்காக இரா. சம்பந்தன் நாளை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி: பக்கம் 21

# ஆஸ்திரேலியப் படகு விபத்து; நேற்றுவரை 11 உடல்கள் மீட்பு

## 8 பேரைக் காணோம்; தேடும் பணி தொடர்கிறது



யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆஸ்திரேலியப் படகு விபத்தில் உயிரிழந்த 11 பேர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய 8

தொடர்ச்சி: பக்கம் 21

# ஐ.தே.கட்சிக்கு தயாசிறி துரோகம் இழைத்துவிட்டார்

## சக உறுப்பினர்கள் குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூலை 26
ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஓர் துரோகி. அவர் கட்சிக்குசெய்த துரோகத்துக்காக இயற்கையால் தண்டிக்கப்படுவார் என சக உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.
தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார்.
இந்த நிலையில் கட்சியின் சக உறுப்பினர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.


**திஸ்ஸ அத்தநாயக்க**
தயாசிறி ஜயசேகர அரசின் கைப்பொம்மையாக செயற்பட ஆரம்பித்துள்ளார். கட்சிக்கு இழைத்த துரோகத்திற்காக அவர் இயற்கையாகவும், அரசியல் ரீதியாகவும் தண்டிக்கப்படுவார். வரப்பிரசாதங்கள் மற்றும் பணத்திற்காக வாக்காளர்களையும், கட்சியையும் தயாசிறி ஏமாற்றியதே உண்மை என திஸ்ஸஅத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

**ரஞ்சன் ராமநாயக்க**
தயாசிறி ஜயசேகரவை விடவும் சிறந்த நடிகர்கள் இந்த நாட்டில் இருக்க முடியாது. அவர் அனைவரையும் முட்டாளாக்கி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளார். தயாசிறி திறமையானவர் என்பதில் சந்தேகமில்லை என்ற போதிலும், நேர்மைத் தன்மையே திறமைக்கு வலு சேர்க்கும் என் பதனை அவர் புரிந்துகொள்ளவில்லை என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

**அஜித் பெரேரா**
ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து விலகப் போவதில்லை என சத்தியம் செய்து, சில மணிநேரம் செல்வதற்குள், கட்சியை விட்டுச் செல்ல தயாசிறி ஜயசேகர எடுத்த தீர்மானம் அருவருக்கத்தக்கது. தனது சுகபோகங்களுக்காக் கட்சியையும், வாக்காளர்களையும் அவர் காட்டிக் கொடுத்துள்ளார். தயாசிறி ஜயசேகரவின் இந்த தீர்மானம் தற்கொலைக்கு ஈடானது எனவும் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

**சஜித்**
தயாசிறி ஜயசேகர அவசரப்பட்டு முடிவெடுத்துவிட்டார். அரசியலில் பொறுமையாக இருந்துதான் தமது பயணங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பொறுமையுடன் இருந்து அனைத்தையும் அனுபவித்து செல்லும் அரசியல் பயணமே வெற்றிப்பெறும். ஐக்கிய தேசியக் கட்சியில் தயாசிறி ஜயசேகரவுக்கு சிறந்ததொரு எதிர்காலம் காத்திருந்தது எனவும் சஜித் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

## சீனாவுக்கு மஹிந்த அனுதாபம்



கொழும்பு,ஜூலை.26
சீனாவின் கென்சு மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்த,பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுதாபம் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சீன ஜனாதிபதி ஜின்பிங்கிக்கு தனது அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.
அதில் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலங்கை அரசின் சார்பாகவும் மக்களின் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் தலைமையில், சீன மக்கள் இத்துயரத்திலிருந்து தன்னம்பிக்கையுடன் மீள்வார்கள் என நான் நம்புகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## சிவில் விமான சேவைகள் அமைச்சு பத்தரமுல்லவுக்கு மாற்றம்

கொழும்பு,ஜூலை.26
கொழும்பு கோட்டை யோக் வீதியில் இயங்கி வந்த சிவில் விமான சேவைகள் அமைச்சு அலுவலகம் பத்தரமுல்லைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
பத்தரமுல்லை செத்சிறி பாயாவின் இரண்டாம் கட்ட, கட்டத்தொகுதியின் 7ஆம் மாடியில் இந்த அமைச்சு நேற்றிலிருந்து இயங்க ஆரம்பித்துள்ளது.
இதன் ஆரம்ப வைபவம் நேற்று முற்பகல் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தலைமையில் நடைபெற்றுள்ளது. (ஜ)

## வாக்களிக்கும் உரிமை உண்டா? 1919 அழைத்து அறியலாம்




கொழும்பு,ஜூலை.26
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை விசேட தொடர்பு இலக்கமான 1919க்கு அழைப்பை ஏற்படுத்தி அறிய முடியும் என அரச தகவல் மத்திய நிலையம் அறிவித்துள்ளது.
வட, வட மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள வாக்காளர்கள் இவ்வாறு தகவல் அறிந்து கொள்ள முடியும்.
அழைப்பை ஏற்படுத்துபவர்கள், வதியும் மாவட்டம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முழு பெயர் என்பவற்றைத் தெரிவித்து, தேர்தல் தொகுதி இலக்கம் மற்றும் பதிவு இலக்கம் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.
இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனம் மற்றும் தேர்தல் திணைக்களம் என்பன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. (ஜ)

## முள்ளிவாய்க்காலுக்கு சென்றது பிரி.குழு

யாழ்ப்பாணம், ஜூலை 26
உண்மையைக் கண்டறியும் பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவினர் இறுதிப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைப் பார்வையிட்டதுடன், மீளக்குடியமர்ந்துள்ள கேப்பாபிலவு மக்களையும் சந்தித்துள்ளனர்.
இலங்கைக்கு ஐந்து நாள் பயணமாக கடந்த திங்கட்கிழமை வருகை தந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் கொண்ட குழுவினர், பல்வேறு தரப்பினரையும் சந்தித்ததுடன் பல்வேறு இடங்களுக்கும் சென்றனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை வடபகுதிக்கு வருகை தந்த பிரிட்டன் குழுவினர் கிளிநொச்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரைச் சந்தித்தனர்.
தொடர்ந்து முகமாலையில் ஹலோட்ரஸ்டினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணி வெடி அகற்றல் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.
அதன் பின்னர் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை முல்லைத்தீவுக்குச் சென்றனர். இதன்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் சென்றனர்.
அதன் பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள கேப்பாபிலவு பகுதிக்கும் சென்றுள்ளனர். இதன் போது அங்குள்ள மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னரான தமது வாழ்வாதார நிலைமைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளனர்.
ஹம்பாந்தோட்டைக்கும்சென்ற மேற்படி குழுவினர் நாளை பிரிட்டன் திரும்புவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## கறுப்பு ஜூலை என்று மறக்க முடியாத கரும்புள்ளி

### ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச



கொழும்பு,ஜூலை.26
நாட்டின் இனப்பிச்சினை பற்றி பேசும் போது மறைக்க முடியாத கரும்புள்ளியாக இருப்பது 83 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை நாள்தான். இந்த கரும்புள்ளினை நீக்க எந்த ஆட்சியாளரும் முயற்சிக்கவில்லை.
இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க.
கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கான பிரவேசம் என்ற ஜே.வி.பியின் தீர்வு யோசனைகளை வெளியிடும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிதததாவது:
இலங்கையில் மீண்டும் இனவாதம் தலைத்தூக்க இடமளிக்கக்கூடாது. சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாதத்தை தூண்டும் அரசியல்வாதிகள் அன்றுமட்டுமல்ல இன்றும் இருக்கின்றனர்.
இதன் காரணமாகவே நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் என அனைத்து மக்களது பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை. இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டே, எமது கட்சி புதிய யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. இது நாட்டில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த வழி வகுக்கும் என நம்புகிறோம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஜ)

## ரணிலின் தலைமை காலத்தில் அரசுடன் 100 பேர் இணைவு

கொழும்பு,ஜூலை.26
ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து இன்று வரையான காலத்தில் கட்சியில் இருந்து 62 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்டவர்கள் அரசுடன் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண, மாநகர, நகர, பிரதேச சபைகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், ரணில் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாக கட்சித்தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஐக்கிய தேசியக்கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு,நேற்றுமுன்தினம் ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## போலி தாலிக்கொடியை அடகு வைக்க முயற்சி

### பிடிபட்டனர் இளைஞனும், யுவதியும்

யாழ்ப்பாணம்,ஜூலை 26
12.5 பவுண் நிறையுடைய போலி தாலிக் கொடியை அடகு வைக்க முற்பட்டனர் எனக்கூறப்படும் இளைஞனும், யுவதியும் வங்கி அலுவலரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நெல்லியடியில் உள்ள அரச வங்கி ஒன்றில் நேற்று இடம்பெற்றது.
கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன்ஒருவருமே குறித்த போலி நகையை அடகு வைக்கும் நோக்கில் வங்கிக்குக் கொண்டு சென்றுள்ளனர். அதனைப் பரிசோதித்த போதே அது போலி என்பது தெரியவந்துள்ளது. உடனடியாக நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் பறந்தது. வங்கிக்குச் சென்ற பொலிஸார் இருவரையும் கைது செய்து கொண்டு சென்றனர்.
இவர்கள் ஏற்கெனவே யாழ். நகரிலுள்ள வங்கிகள் சிலவற்றிலும்போலிநகைகளை அடகு வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஓ-4-14)

## வாகனங்களை வாடகைக்குப் பெற்று விற்ற தென்பகுதி நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 26
வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அவற்றின் ஆவணங்களில் மாற்றம் செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென்பகுதி நபர் யாழ். நீதிமன்றினால் 10 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு நீதிவான் பொ.சிவகுமார் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.
சுமார் 30 சொகுசு வாகனங்களைச் சந்தேகநபர் வாடகைக்குப் பெற்றுக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர் குறித்த வாகனங்களை திரும்ப ஒப்படைக்காது இருந்த நிலையில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சந்தேக நபர் சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதுவரை 13 சொகுசு வாகனங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
இந்த நிலையிலேயே சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்கும் படி சட்டத்தரணியூடாக பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.
அதன்படி பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் மீதான வழக்கு செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. தவிர சந்தேக நபர் எட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கையொப்பமிட வேண்டும் என்றும் மன்று நிபந்தனை விதித்தது. (ஓ-4)


# குறைகேள் இடம்பெயர் சேவை தென்மராட்சியில் இரு நாள்கள்

### அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்காக

தென்மராட்சி, ஜூலை 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோரின் பிரச்சினைகள் தொடர்பான குறைகேள் இடம்பெயர் சேவை எதிர்வரும் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் பிற்பகல் 2 மணி தொடக் கம் மாலை 5 மணி வரை வலயக் கல்வி அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.
பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர், கல்வி சாரா ஊழியர்கள் தாபன விடயங்கள் (சுயவிவரக் கோவை, பதவியுயர்வு, சம்பளம்) உட்பட தமக்கான தேவைகள் தொடர்பான கோரிக்கையை இடம்பெயர் சேவையில் சமர்ப்பித்து தீர்வைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
இடம்பெயர் சேவைக்கு இணைப்பாளராக வலய நிர்வாகப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் கடமையாற்றவுள்ளார். எதிர்வரும் 29 ஆம் திகதி சாவகச்சேரி, கைதடி, மட்டுவில், சரசாலை, தனங்களப்பு, மீசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளிலும் 30 ஆம் திகதி கொடிகாமம், வரணி, மிருசுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளிலும் கடமையாற்றுவோர் இதில் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாமெனவும் அறிவித்துள்ளார். (வ)

# 26 மில்.செலவில் நிர்வாக நிலையம்

## அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் பணிகள் துரித கதியில்



அச்சுவேலி, ஜூலை 26
அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் அமையவிருக்கும் தொழிற்சாலைகள் தொடர்பான நிர்வாக நிலையம் 26 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுகிறது. கட்டடங்களுடன் 60 ஆயிரம் லீற்றர் நீர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தாங்கியும் நிர்மாணிக்கப்படுகின்றது.
இந்திய அரசின் நிதி உதவியுடன் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை புனரமைப்பு செய்யப்பட்டு ஐயாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கக் கூடிய நிலையில் தொழிற்சாலைகள் செயற்படவுள்ளன.
அங்கு தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு முன் வந்திருப்பவர்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலம் மற்றும் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.
தொழிற்சாலைகள் செயற்படும் காலப் பகுதியில் அவற்றுக்கான நீர்வழங்கல், மின்சார விநியோக செயற்பாடு உள்ளக போக்குவரத்து வசதி, உள்ளிட்ட வசதிகளை வழங்கி அவற்றை கண்காணிப்பதற்கு மத்திய நிர்வாக மையம் ஒன்று [illegible]ற்பட விருப்பதால் [illegible]கான கட்டுமானப் பண[illegible]ீவிரமாக மேற்கொள்[illegible]ட்டு வருகின்றன.
மத்திய நிர்வாக நி[illegible]த்துக்கான கட்டடங்க[illegible] மற்றும் தொழிற்சாலைகளுக்கான குடிதண்ணீர் வசதியை மேற்கொள்வதற்காக 60 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த் தாங்கி, உள்ளக வீதி, குடிதண்ணீர் விநியோகத்துக்கான குழாய் இணைப்புக்கள் அதனுடன் தொடர்பான வேலைகள் நடைபெற்று வருகின்றன.
ஏழு கட்டங்களாக மேற்கொள்ளப்படும் இவ் வேலைத் திட்டங்களில் முதற்கட்டப் பணிகளுக்கு 26 மில்லியன் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. முதலாம் கட்ட வேலைகள் மும்முரமாக இடம்பெறுகின்றன.
ஏழு வேலைத்திட்டங்களில் முதலாவது வேலைத்திட்ட பணிகளூடாக கைத் தொழில் பேட்டைக்கான அடிப் படை வழங்கல்கள் சேவை கள் மேற்கொள்ளு வதற் கான கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. (வ-11)

## கிராம அலுவலருக்கு நிரந்தரக் கட்டடம்

தென்மராட்சி, ஜூலை 26
முதன்முறையாக கிராம அலுவலருக்கான நிரந்தர அலுவலக் கட்டடம் பொது மக்களால் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது. இதைக் கையளிக்கும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.
தென்மராட்சி பிரதேச செய லக பிரிவைச் சேர்ந்த மிரு சுவில் தெற்குப் பிரிவு கிராம அலுவலரின் பயன்பாட்டுக் கென 6 லட்சம் ரூபா செலவில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பகுதியைச் சேர்ந்த பொன்னையா தியாகராஜாவின் நினைவாக அன்னாரது குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் வெளிநாட்டில் வதியும் திருவருட்செல்வன் என்பவரின் நிதியுதவியுடன் கட்டடம்அமைக் கப்பட்டுள்ளது. குறித்த காணியில் நிர்மாணிக்கப்பட்ட 'நேயம் சமூக நிலையம்' என்னும் பொது நோக்கு மண்டபமும் அன்றைய தினம் திறந்து வைக் கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விழிப்புலனற்றோர் சங்கத்தின் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம்



யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வருடாந்த உற்சவ காலத்தையொட்டி யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றை ஆலயச் சூழலில் அமைக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.

> உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றை ஆலயச் சூழலில் அமைக் கவுள்ளது

இந்த விற்பனை நிலையத்தில் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பூங்கா மற்றும் அங்கத்தவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும், பனம் பொருள்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப் பொருள்களும் விற்பனைக்கு வைக்கப் படவுள்ளதாக தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-17)

# ஜோசப்வாஸ் நகர் கிராம மக்களின் அவலத்தைப் போக்குமாறு மனுக் கையளிப்பு

### பெண்கள் தலைமைத்துவ அமைப்பினால்

மன்னார், ஜூலை 26
மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராம மக்களின் அவல நிலையைப் போக்குமாறு கோரும் மனுவொன்றை அங் குள்ள அணையாத தீபங்கள் பெண்கள் தலைமைத்துவ அமைப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் பிரதேச சபைத் தலைவரிடம் கையளித்துள்ளது.
மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர் தலைமையில் இந்த மனு கையளிக்கப்பட்டது.
அந்த மனுவில்;
ஜோசப்வாஸ் நகர் மக்களாகிய நாம் போர் காரணமாக எமது உயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் விடத்தல் தீவிலிருந்து இடம் பெயர்ந்து கடல் மார்க்கமாக பள்ளிமுனைக் கிராமத்தின் கடற்பகுதியை வந்தடைந் தோம். பின்னர் நாம் பேசாலை நலன்புரி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு 2 வருடங்களாக அங்கு அகதி வாழ்க்கை வாழ்ந்து வந்தோம்.
இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை எங்களை நேரில் வந்து சந்தித்து எமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார்.
இதன் பின்னர் தோட்டவெளிக் கிராமத்துக்கு அண்மையில் காட்டுப் பகுதியாகக் காணப்பட்ட இடத்தைத் துப்புரவு செய்து தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டோம்.
அன்றிலிருந்து இன்று வரைக்கும் நாம் ஓலைக் குடிசையில் தான் வாழ்ந்து வருகின்றோம். ஆண்டுதோறும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றோம்.
ஓலையால் வேயப் பட்டுள்ள எமது வீடுகள் தற்போது வீசுகின்ற கடும் காற்றுக் காரணமாகத் தூக்கி எறியப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் நாமும் உள்வாங்கப்பட வேண்டும்.
மலசலகூடம் இல்லாதவர்களுக்கு அவற்றை அமைத்துத் தரவேண்டும். இங்குள்ள வீதிகளுக்கு விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். மின்சார வசதி கிடையாதவர்களுக்கு அதனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ் வாதார உதவித் திட் டங்கள் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.(க-12)

# மீண்டும் செயற்படும் 321 பாடசாலைகள்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
மூன்று தசாப்தகாலப் போரால் வடக்கில் பாதிப்புக்குள்ளான 321 பாடசாலைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
தென்மாகாண மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் ''வடக்குத் தெற்கு அன்பின் சங்கமம்'' என்ற தொனிப்பொருளில், ஆனையிறவில் நவீன வசதிகளுடனும் கூடிய ரயில் நிலையம் அமைக்கப்படவுள்ளது.
இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
போரினால் சேதமடைந்த வட பகுதிக்கான ரயில் பாதையை அரசு புதிதாக அமைத்து வருகின்றது. 23 வருடங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக ஆனையிறவுக்கான ரயில் நிலையம், பழைய இடத்தில் மீளவும் நிர்மாணிக்கப்படவுள்ளது.
தெற்குப் பிரதேச மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும், வடபகுதி மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.
வடக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள், ஆசிரியர்களிடமிருந்து கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இரண்டு ரூபா வீதம் சேகரிக்கப்பட்ட 15 மில்லியன் ரூபா நிதியிலேயே இந்த ரயில் நிலையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## விதவைகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டம்

தென்மராட்சி, ஜூலை 26
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட பெண்களுக்கு சுயதொழில் உதவி மற்றும் வேலைவாய்ப்புக்கள் வழங்குவது தொடர்பான கூட்டம் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.
523 ஆவது படையணியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் (விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர்) கலந்து கொண்டனர்.
கலந்து கொண்ட பெண்கள் மத்தியிலிருந்து நிர்வாகக் குழுத் தெரிவு செய்யப்பட்டது. (வ-9)

# நடமாடும் சேவை நல்லூரில் இறுதிநாள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26
கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நேற்று வியாழக்கிழமை வரை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை நல்லூர் பிரதேச செயல[illegible] இன்று காலை 9 மணி முதல் பி.ப. [illegible] மணிவரையும் நடைபெறும்.
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழ்வரும் 40 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் கடந்த மூன்று தினங்கள் இடம்பெற்ற நடமாடும் சேவையில் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கையளிக்கத் தவறியிருந்தால் இன்று நடைபெறும் நடமாடும் சேவையில் அவற்றுக்கான விண்ணப்பங்களைச் [illegible] பிரதேச செயலர் பா.செந்தில் [illegible]த்துள்ளார். (வ-7)

# ஈ.பி.டி.பி. விஜயகாந் பிணையில் விடுவிப்பு

## கொள்ளையடித்த நகைகளை அடகு வைத்த வழக்கிலிருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 26

திருட்டு நகைகளை வங்கியில் அடகு வைத்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் விஜயகாந் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார். பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்காததனால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர் இதுவரை ஓடித்திரிந்த வாடகைக் காரும் பிணையில் விடுவிக்கப்பட்டு அதன் உரிமையாளரால் எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொக்குவில் பகுதியில் உள்ள வங்கி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் குறித்த நகைகள் திருடப்பட்டிருந்தன. அந்த நகைகளையே அடகு வைத்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் விஜயகாந் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 9 ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்று முன்தினம் இந்த வழக்கு யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் நீடிக்கப்பட்டது.

நேற்றைய தினம் இவர்கள் தொடர்பான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிணையில் விடுவிக்குமாறு விண் ணப்பம் செய்தனர்.

ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் விஜயகாந் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் சர்மினி விக்னேஸ்வரன், கணாதீபன் ஆகியோரின் அனுசரணையில் முடியப்பு றெமீடியஸ் சந்தேகநபரான விஜயகாந் நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கே வங்கிக்குச் சென்றிருந்தார் என்றும் அங்கு அடகு வைக்க நின்றிருந்தவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

மேலும், நேற்றுமுன்தினம் சந்தேக நபரான விஜயகாந் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது சந்தேகநபர் தொடர்பான விசாரணை முடிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். தவிர



விஜயகாந் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டால் அவருக்கு சமூகத்தில் உரிய இடம் கிடைக்காது. அவர் சமூகத்தில் நல்லதொரு பிரசையாக வாழ்ந்து வந்துள்ளார். எதிர்காலத்தில் இன்னொரு நிலைக்கு முன்னேற வேண்டியவர். எனவேபிணையில் விடுவிக்கக் வேண்டும் என்று கோரினார். (ஐ-4)

### வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு

# பல்கலை சமூகத்துக்கு இடமளிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 26

பல்வேறு நெருக்கடிகளுக்குமத்தியிலும் தமிழ்த் தேசியத்துக்கு குரல் கொடுத்து வரும் யாழ். பல்கலைக்கழக கல்விச் சமூகத்தில் இருந்து ஒருவர் வட மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்படுதல் வேண்டும். இதனை தமிழ்த் தேசியத்துக்காக மக்களால் ஒருங்கிணைக்கப்பட்டகட்சி கருத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கேட்டுள்ளனர் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்களால் பெரிதும் நேசிக்கப்படுவதும் மிக நம்பிக்கைக்குரியதுமான- தமிழ் தேசியத்திற்கான குரலாக மக்களால் ஒருங்கிணைக்கப்பட்ட கட்சியானது தனது வேட்பாளர் தெரிவில் தற்போது இழுபறிப்படுகிறது. கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுத்தவர்கள் வேட்பாளர் தெரிவில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.இந்தச் செயற்பாடு வருத்தமளிப்பதாக உள்ளது.

தேசியப் பிரச்சினையில் மாறாத கொள்கையுடன் செயற்பட்டு வருவது யாழ். பல்கலைக்கழக சமூகம்.

இந்த நிலையில் தேசியத்திற்காகக் குரல் கொடுக்கும் யாழ். பல்கலைக்கழக கல்விச் சமூகத்தில் ஒருவரை தனது தெரிவில் உள்ளடக்க வேண்டியது குறித்த கட்சியின் தலையாய கடமையாகும்.

உண்மையில் தமிழ் மக்களின் பிரதான குரல்களாக இருக்கும் இரு பெரும் அமைப்புக்களாக, மக்களால் ஒருங்கமைக்கப்பட்ட அரசில் கட்சியும் யாழ். பல்கலைக் கழக சமூகமும் உள்ளன.

இந்த வகையில் சர்வதேசத்தால் உற்று நோக்கப்படும் வடமாகாண சபைத் தேர்தலில் தொடர்ந்தும் பழுத்த பழங்களுக்கே முன்னுரிமை கொடுப்பதை விடுத்து, பல்கலைக்கழக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்க வேண்டியது அந்தக் கட்சியின் தலையாய கடமையாகும்- என்றுள்ளது. (ஐ-5)

## தண்ணீர் இன்றி தவித்தனர் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதான நீர் வழங்கும் குழாயில் நேற்று வெடிப்பு ஏற்றபட்டதனால் காலையிலிருந்து மதியம் வரை விடுதி மலசல கூடங்களுக்கு தண்ணீர் கிடைக்கப்ப பெறாததனால் இதனால் நோயாளர்களும் பணியாளர்களும் சிரமப்பட்டனர்.

வைத்தியசாலைப் பின்புறமாகவுள்ள பகுதியல் ஏற்பட்ட நீர் கசிவு தொடர்பில் பரிசோதித்து அதனைத் திருத்த முற்பட்ட போதே குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டு குழாய் சீரமைக்கும் பணி இடம் பெற்றது.

குழாய் புனரமைக்கப்பட்டதும் பின்னர் பிற்பகலுக்குப் பின்னர் தண்ணீர் விநியோகம் வழமைக்குத் திரும்பியது. (ஐ-4-78)

### வட மாகாண சபைத் தேர்தல்;

# அலுவலர்களை நியமித்தது தேர்தல்கள் திணைக்களம்

கொழும்பு, ஜூலை 26

வடமாகாண சபைத் தேர்தலுக்குப் பொறுப்பாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக (நிர்வாகம்) எம்.எம். மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளதுடன், வடமாகாண உதவித் தேர்தல்கள் ஆணையாளர் க. அச்சுதனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதன்முறையாக இடம் பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்கள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

இந்த நிலையில் வடமாகாண சபைத் தேர்தலுக்குப் பொறுப்பாக தேர்தல்கள திணைக்கள நிர்வாகத்துக்கான பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு அடுத்தபடியாக வடமாகாண உதவித் தேர்தல்கள் ஆணையாளராக க.அச்சுதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலராகமாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகமும், உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக க.அச்சுதனும் கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலராக திருமதி றூபாவதி கேதீஸ்வரனும், உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக கபீரும், முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலு வலராக நா.வேதநாயகனும், உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நாலகவும்-

மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலராக தேசப்பிரியவும், உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக தர்சன பிரவீணவும்,வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலராக பந்துல ஹரிச் சந்திரவும், உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக ஆ.சு. கருணாநிதியும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியம ணங்களை தேர்தல்கள் ஆணையாளர் வழங்கியுள்ளார். (ஐ-5)

# 13 சிறிய இராணுவ முகாம்களை பலாலிக்கு மாற்றுகிறது இராணுவம்

## உரிமையாளர்களிடம் காணியும் ஒப்படைப்பு?

கொழும்பு, ஜூலை 26

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள 13 சிறிய இராணுவ முகாம்களை பலாலிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறித்த 13 முகாம் காணிகளும் காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் இராணுவக் குறைப்பின் ஒரு கட்டமாக வலிகாமத்திலுள்ள 13 சிறு இராணுவ முகாம்களை அகற்றி, அந்தக் காணிகளை உரிமையாளர்களிடம் வழங்க இராணுவத் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

போர் முடிவடைந்த பின்னர் தற்போது இயல்பு நிலை திரும்புவதையடுத்து சிறிய இராணுவ முகாம்களை அகற்றுவதற்குப் படைத்தரப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய தற்போது வலிகாமம் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள 13 சிறிய முகாம்கள் பலாலி பிரதான இராணுவ முகாமுக்கு மாற்றப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

## தாலி அறுத்த திருடர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வீதிக்கு அருகே வீதியால் சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த சுமார் ஏழரைப் பவுண் தாலிக் கொடியை மோட்டார் சைக்கிளில் சென்றோர் அறுத்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் யாழ். பிரதான வீதியில் பஸ்ரியன் சந்தியை அண்மித்துள்ள குருசோ வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர் (ஐ-4)

# நடமாடும் சேவை பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கான தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

ஜே/401 தொடக்கம் ஜே/412 வரையான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி குறித்த பிரதேச செயலகத்திலும், ஜே/401 தொடக்கம் ஜே/417 வரையான கிராம அலுவலர் பிரிவுக ளுக்கு எதிர்வரும் [illegible] ஆம் திகதி அல்வாய், திக்கம் சனசமூக நிலையத்திலும், ஜே/383 தொடக்கம் ஜே/[illegible] வரையான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வட்வெட்டித்துறை பழைய நகர சபை மேல் மண்டபத்திலும் காலை 9 மணிமுதல் பி.ப. 4 மணிவரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையினூடாக புதிய, தொலைந்த மற்றும் திருத்தத்துக்கான தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆவணங்கள் மற்றும் புகைப் படத்துடன் வருகை தருமாறும் மேலதிக விவரங்களை தங்கள் பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றக் கொள்ளலாம் என்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (வ-8)

## மகேஸ்வரனின் சகோதரர்கள் தேர்தலில் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான அமரர் தியாகராசா மகேஸ்வரனின் இரண்டு சகோதரர்களும் வடமாகாண சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர்.

இரு சகோதரர்களில் ஒருவரான தியாகராசா துவாரகன் யாழ். மாவட்டத்திலும், மற்றையவரான தியாகராசா பரமேஸ்வரன் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது (400)

# கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 26


கிளிநொச்சி கோரக்கன்கட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை ஆயுதங்களும் சீருடைகளும் மீட்கப்பட்டிப்பதாக கிளிநொச்சி விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கோரக்கன்கட்டுப் பகுதியில் குறித்த ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக தமக்குக் கிடைத்த விசேட தகவல்களின் அடிப்படையில் அவை மீட்கப்பட்டதாக கிளிநொச்சிப் பிராந்திய விசேட குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி சரத் தெனியகே தெரிவித்தார்.

ஆட்லறி எறிகணைகள், துப்பாக்கிகள், அவற்றுக்குரிய ரவைகள், கிளைமோர் குண்டுகள், கைக்குண்டுகள் மற்றும் தொலைத்தொடர்பு கருவிகள் ஆகியவற்றுடன் விடுதலைப் புலிகளின் சீருடைகளும் மீட்கப்பட்டதாகவும்- அவையாவும் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-400-6)

# ஆபத்தை ஏற்படுத்தும் 'கொலைக்கள பள்ளம்'

## அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்



அச்சுவேலி, ஜூலை 26
கோப்பாய் சந்தி வீதி மருங்கில் அமைந்துள்ள 'கொலைக்கள பள்ளம்' எந்த நேரத்திலும் உயிர் ஆபத்தை விளைவிக்கக் கூடிய நிலையில் உள்ளது.

இதற்கான பாதுகாப்பு வசதியை செய்வதற்கு வீதி அமைப்புவேலையை பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் இதுவரையும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முன்வரவில்லை என பொதுமக்கள் மற்றும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கோப்பாய் நாற்சந்தியில் 4 அடிக்கு மேற்பட்ட ஆழம் கொண்ட குழிகள் வடமேற்கு மூலையிலும், வடகிழக்கு மூலையிலும் திறந்த நிலையில் பிரதான வீதிக்கு மிக அருகில் அமைந்துள்ளன.

வெள்ளவாய்க்கால் பள்ளங்களை உரிய முறையில் கட்டி மூடிபோட்டு மறைக்கவோ அல்லது அவற்றுக்கான பாதுகாப்புக் கட்டைகளை நிறுவவோ எதுவித ஏற்பாடுகளும் செய்யப்படாமல் உள்ளன.

இந்த நிலையில் ஆபத்தான குழி திறந்த நிலையில் உள்ளது என்பதை வாகனச் சாரதிகள் மற்றும் பயணிகள் கண்டு கொள்வதற்கு ஏற்ற குறியீட்டு அடையாளங்கள் கூட காட்சிக்கு வைக்கப்படவில்லை.

இவ்வாறு காணப்படும் குழிகளில் தவறி விழும் சந்தர்ப்பத்தில் உயிரிழப்பு ஏற்படக் கூடிய நிலை உள்ளதால் அவற்றை 'கொலைக்கள பள்ளங்கள்' எனப் பொதுமக்கள் கூறிக் கொள்கின்றனர்.

இதேவேளை நாற்சந்தியில் இரு மருங்கிலும் பெரிய பள்ளங்களும் தென்மேற்கு மூலையில் மின்சாரக் கம்பமும் தபாற் பெட்டியும் உள்ளன. குறித்த வீதி, அகலிப்புப் பிரமாணத்துக்கு ஏற்ப விஸ்தரிப்புச் செய்யப்படாமல் உள்ளது.

இவ்வாறு பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் விடயங்கள் தொடர்பாக வீதி அமைப்பு ஒப்பந்தக்காரர் மற்றும் பிரதேச செயலகம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

# இரவு, பகலாக கல் அகழ்வு சுற்றுச்சூழல் பெரும் பாதிப்பு

## ஈவினைப் பகுதி மக்கள் கவலை

வலி.தென்மேற்கு, ஜூலை 26
புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதியில் இயந்திரங்களைப் பயன்படுத்தி இரவு, பகலாக கல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறுவதால் சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் சுற்றாடலில் வசிக்கும் ஏழை மக்கள் இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க யாருமில்லாத நிலையில் துயரத்தின் மத்தியில் வாழ்கின்றனர்.

ஈவினைப் பகுதியில் இயங்கி வரும் கல்லுடைக்கும் தொழிற்சாலைக்குத் தேவையான கல் கடந்த காலங்களில் அந்தப் பகுதியிலேயே மனித வளத்தைப் பயன்படுத்திப் பெறப்பட்டது. இதனால் சுற்றாடலில் வசிக்கும் மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

தற்பொழுது மனித வளத்துக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தி இரவு, பகலாகக் கல் அகழ்வு இடம்பெறுகின்றது. இதனால் ஏற்படும் பெரிய சத்தத்தால் சுற்றாடலில் வசிக்கும் மக்கள் நிம்மதியாகத் தூங்க முடியாமல் திண்டாடுவதுடன் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. கல் அகழ்வின் போது வெளியேறும் தூசுப்படலம் ஒரு கிலோமீற்றர் வரை பரந்து செல்வதால் அந்தப் பகுதியிலுள்ள வீடுகள்; மரங்கள் அனைத்தும் செந்நிறமாகக் காட்சியளிக்கின்றன.

> சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த கல் அகழ்வு உள்ளூர் அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இந்த அவலநிலை குறித்துப் பாதிக்கப்பட்ட மக்களால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகள் கல் அகழ்வு நடைபெறும் இடத்துக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்தனர். அதனை அடுத்து இயந்திரம் மூலம் கல் அகழ்வு செய்வதைத் தடை செய்திருந்தனர்.

சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த கல் அகழ்வு உள்ளூர் அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள குறித்த பகுதி மக்கள் சுகாதார விதிமுறைகளுக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் கல் அகழ்வு நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (வ-115)

# பாலியல் குற்றச்சாட்டில் 4 வயோதிபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 26
பத்து வயதுச் சிறுமிக்கு ஆசை காட்டி வீட்டிலிருந்து வெளியே அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நான்கு வயோதிபர்கள் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் வெளியே தெரியவந்ததையடுத்து குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுமி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

சிறுமியை நீண்ட நாள்களாக துஷ்பிரயோகம் செய்து வந்த நிலையிலேயே சிலநாள்களுக்கு முன்னர் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (வ-4)

# முப்பெரும் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முப்பெரும் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கத்தின் 65 ஆண்டு கால சமூக மேம்பாட்டுச் சேவை நலனைப் பாராட்டும் பெருவிழாவுடன் ''எழுச்சிப் பாதை'' நூல் வெளியீட்டுப் பெருவிழாவும், சாதனையாளர்களுக்கு விருதுப் பெருவிழாவும் இடம் பெறவுள்ளன.

விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர் சி.செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள் பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் நா.சண்முகலிங்கம் ஆகியோரும் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கல்விப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா, சைவப்புலவர் சு.செல்லத்துரை, அரச பொதுசேவை ஆணைக்குழு அங்கத்தவர் எஸ்.தில்லைநடராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

காலை அரங்கில் சேவை நலன் பாராட்டும் நூல்வெளியீடும் மாலை அரங்கில் சாதனையாளர்களுக்கு விருது வழங்கலும் இடம் பெறும். (வ-14)

# ஒளியின்றி சைக்கிளில் பயணிப்பதைத் தவிர்க்குக

## சுன்னாகம் பொலிஸார் அறிவுறுத்து

வலி.வடக்கு, ஜூலை 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவில் வாகன விபத்துக்களை குறைக்கும் வகையில் சைக்கிளில் பயணிப்போர் இரவு நேரத்தில் சைக்கிளின் முன்புறத்தில் மின்குமிழ்கள் ஒளிர விட வேண்டும் என்ற ஆலோசனைகள் அறிவுறுத்தல்கள் பொலிஸாரால் வழங்கப்பட்டு வருவதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எல்.துஸ்மந்த தெரிவித்தார்.

குறிப்பாக இரவு நேரத்தில் சைக்கிள்களின் பின்புறத்தில் கூட ஒளித் தெறிப்பு உபகரணம் பொருத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது.

சைக்கிள்களில் முன்னோக்கிச் செல்வது தெரியாத நிலையில் கூட வாகன விபத்துக்கள் இடம்பெறுவதால் சைக்கிள்களின் பின்புறத்தில் ஒளித் தெறிப்பு ஸ்ரிக்கர்கள் இரண்டாயிரத்துக்கும் மேல் சுன்னாகம் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸாரால் ஒட்டப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-86)

# நெடுந்தீவில் இடம்பெற்ற கற்றல், கற்பித்தல் கண்காட்சி





கற்றல் கற்பித்தல் சாதனைக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியில் மாணவர்களின் விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றலை எடுத்துக்காட்டும் வகையில் பல்துறைசார்ந்த ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன. கண்காட்சியை பாடசாலை மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு பார்வையிட்டனர். சிறந்த ஆக்கங்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-7)

# சுன்னாகம் பகுதியில் பொலிஸார் இரவில் ரோந்து

## மதுப்பிரியர்களின் அட்டகாசத்தை ஒழிக்க

வலி.வடக்கு, ஜூலை 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவில் மதுப்பிரியர்களின் அட்டகாசத்தை கட்டுப்படுத்தும் வகையில் இரவு நேரங்களில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இரவு நேரங்களில் இத்தகைய ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் கடந்த ஒரு மாத காலத்தில் போதையில் பொதுமக்களுக்குப் பொது இடங்களில் இடையூறு விளைவித்தமை தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இரவு நேர ரோந்து நடவடிக்கைகள் மூலம் திருட்டுச் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்படுவதுடன் பொதுமக்களுக்கு இடையூறாக நடப்பவர்களும் கூட கண்காணிக்கப்பட்டு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-86)

## மன்மோகனுக்கு உடல்நல குறைவு பிற்போடப்பட்ட கூட்டம்

டெல்லி, ஜூலை 26
பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து நடைபெற இருந்த மந்திரி சபை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

வாரந்தோறும் வியாழக்கிழமை பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் மத்திய மந்திரி சபை கூட்டம் நடைபெறுவது வழக்கம். இதேபோல் நேற்றும் மந்திரி சபை கூட்டம் நடைபெறுவதாக இருந்தது.

எனினும் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து நடைபெற இருந்த மந்திரி சபைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. (ற)

## நட்டஈடாக 2 ரூபாய்

### விவசாயிகள் அதிர்ச்சி

ஹரியானா, ஜூலை 22
மழை வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்காக ஹரியானா அரசு 2 ரூபாய், 3 ரூபாய் என இழப்பீடு வழங்கியிருப்பது விவசாயிகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. காசோலை மூலம் வழங்கப்பட்டிருக்கும் இந்த நட்டஈட்டைப் பெற தாம் 2 ஆயிரம் ரூபா பணம் கட்டி வங்கிக் கணக்கு ஆரம்பிக்க வேண்டியுள்ளது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். இது குறித்து பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ற)

### கூடங்குளம் அணுமின் நிலையம்

# ஆதரிக்கும் கட்சிகள் தேர்தலில் புறக்கணிப்பு

### முடிவெடுத்தது அணு உலை எதிர்ப்பு போராட்டக் குழு

தூத்துக்குடி, ஜூலை 26
கூடங்குளம் அணுமின் நிலையத்தை ஆதரிக்கும் கட்சிகளை நாடாளுமன்ற தேர்தலில் புறக்கணிப்பது என்று தூத்துக்குடியில் நடந்த கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.



கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக போராட்டக்குழுவினர் அடுத்த கட்ட போராட்டம் குறித்து தூத்துக்குடியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

அந்தக் கூட்டத்தில் நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்ட மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் போராட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டதால் தூத்துக்குடியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

வெளியூர்களில் உள்ள மீனவர்கள் யாரும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்பதற்காக மாவட்ட எல்லையில் 10 இடங்களில் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டது. அதே போன்று வெளியூர்களில் இருந்த வந்த சில மீனவர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடை பெற்ற கூட்டத்தில், கூடங் குளம் அணு மின் உலைக்கு ஆதரவு தெரி விக்கும் அனைத்துக் கட்சிகளையும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டது டன், இதுகுறித்த பரப் புரைகளை பல்வேறு மட்டங்களிலும் மேற் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ற)




இந்தியா எல்லைக்குள் சீன ராணுவம் ஊடுருவியதை கண்டித்து காஷ்மீரில் ஜம்மு மேற்கு சட்டமன்ற இயக்கத்தினர் போராட்டம் நடத்தினர்.

## கூடங்குளம் மின் நிலைய 2ஆவது உலையும் தயார்

### இனி முழுவீச்சில் உற்பத்தி

சென்னை, ஜூலை 26
கூடங்குளம் 2 ஆவது அணுஉலையில் மாதிரி எரிபொருள் நிரப்பும் பணி முடிவடைந்துள்ளதை அடுத்து விரைவில் வெப்பநீர் சோதனை ஓட்டம் தொடங்கப்படும் என அணுமின் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. கூடங்குளத்தில் 1000 மெகாவாட் மின்உற்பத்தித் திறனுள்ள இரு அணுஉலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் முதல் அணுஉலையில் கடந்த 13ஆம் திகதி இரவு முதல் மின்உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. அதையடுத்து இரண்டாவது அணு உலையில் மாதிரி எரிபொருள் நிரப்பும் பணி நடைபெற்று வந்தது.

இந்தப் பணி இப்போது நிறைவு பெற்றுள்ளதை அடுத்து மின் உற்பத்தி முழுவேகத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## உத்தரகாண்ட் மாநிலத்தில் தொடர்ந்தும் கடும் மழை

உத்தரகாசி, ஜூலை 26
உத்தரகாண்ட் மாநிலத்தில் முன்னர் பெய்த தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்துள்ள நிலையில், அம்மாநிலத்தில் மீண்டும் தொடர் மழை நீடித்து வருகிறது. தொடர் மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவினால் உத்தரகாசியில் 30க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. சேதம் குறித்த உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை.

அவற்றில் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழையினால் கங்கா, யமுனா, சர்தா, கோரி, காளி மற்றும் கோலா ஆறுகளில் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. (ற)

## விண்ணுக்கு செலுத்தப்படுகிறது நவீன செயற்கைக் கோள்

புதுடில்லி, ஜூலை 26
இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ, நவீன தொழில்நுட்பத்தின் மூலமாக வானிலையை அறிந்து கொள்வதற்காக 'இன்சாட் 3 டி' என்ற செயற்கைக் கோளை விண்ணுக்கு அனுப்பவுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ, பருவநிலை வானியல் குறித்து ஆய்வு செய்வதற்காக பல்வேறு செயற்கைக்கோள்களை தொடர்ந்து விண்ணில் செலுத்தி வருகிறது. அந்த வரிசையில் இன்சாட் – 3 டி என்ற நவீன செயற்கைக் கோளானது பூமியிலிருந்து சுமார் 36 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டு 26 நிமிடங்களுக்கு ஒரு முறை வானிலையை துல்லியமாக அளவிட்டு தகவல்களை வழங்கும். (ற)

## மோடிக்கு எதிராக கையெழுத்திட்டிருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் – கருணாநிதி

சென்னை, ஜூலை 26
குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு விசா வழங்க எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு அனுப்பப்படும் கடிதத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சித் தலைவர் கருணாநிதி எச்சரித்துள்ளார்.

குஜராத் கலவரங்களைத் தொடர்ந்து நரேந்திர மோடிக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்து வருகிறது. அதையடுத்து பா.ஜ.க. கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் மோடிக்கு அமெரிக்க விசா வழங்குவது குறித்து அந்நாட்டு அரசுடன் பேசி வருகின்றார்

இந்தநிலையில் மோடிக்கு விசா வழங்கக் கூடாது என்று கோரி 12 கட்சிகளை சேர்ந்த 65 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதம் தற்போது இந்திய அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி,

"குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி அவர்களுக்கு அமெரிக்கா செல்ல விசா அளிக்கக் கூடாது என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கையெழுத்திட்டு அமெரிக்கக் குடியரசு தலைவருக்குக் கடிதம் எழுதினர் என்று தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் அந்தக் கையெழுத்தினை தாங்கள் போடவில்லை என்றும், இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டு தங்களிடம் யாரும் கையெழுத்து பெறவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் தொடர்பு கொண்டு கேட்ட போது தாங்கள் அவ்வாறு கையெழுத்திடவில்லை என்று மறுக்கிறார்கள். தி.மு. கழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசின் எந்தவொரு வெளிநாட்டுக் கொள்கையிலும் அதன் உள்விவகாரங்களில் குறுக்கிடுவதில்லை என்பதை பல முறை நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப் போல இந்த விசா பிரச்சினையிலும் தி.மு.கழகம் குறுக்கிடுவதை நாங்கள் ஏற்கவில்லை. தலைமைக் கழகத்தைக் கலந்து பேசாமல் எவரேனும் அவ்வாறு கையெழுத்திட்டிருந்தால் அவர்கள் மீது கழகம் நடவடிக்கை எடுக்கும்" என்று தெரிவித்தார். (ற)

## மஞ்சுளாவை இழந்து வாடும் குடும்பத்தவர்களுக்கு நன்றி

### மரண வீட்டில் உளறிய விஜயகாந்த்

சென்னை, ஜூலை 26
மஞ்சுளாவின் மறைவுக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்திய தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும்போது வார்த்தை தடுமாறி நன்றி என்று கூறிவிட்டார்.

அதனால் சுற்றியிருந்தவர்கள் சங்கடத்தில் நெளிய நேர்ந்தது. விஜயகுமார் – மஞ்சுளா தம்பதிகளுக்கு மிக வேண்டிய நெருக்கமானவர்களில் ஒருவர் விஜயகாந்த். இந்தநிலையில் மஞ்சுளா மறைந்த செய்தி அறிந்ததுமே மனைவியுடன் விஜயகுமாரின் ஆலப்பாக்கம் வீட்டுக்கு விரைந்து வந்தார் விஜயகாந்த். விஜயகுமாரை கட்டிப்பிடித்து அழுதார். அவருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் விஜயகாந்தை தொலைக்காட்சி செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்டு ஏகப்பட்ட மைக்குகளை முகத்துக்கு நேரே நீட்டினர்.

அப்போது அவர் பேசுகையில்,

"நடிகை மஞ்சுளா எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்ற முன்னணி கலைஞர்களோடு பணியாற்றினாலும் கொஞ்சம் கூட பந்தா இல்லாமல் பழகினார்.

அவர் குடும்பத்தில் ஒருவராக இருந்தோம். எப்போது அவரது வீட்டுக்கு வந்தாலும் மோர், நல்ல உணவு தந்து உபசரிப்பார்."

இப்படிசொல்லிக்கொண்டே வந்த விஜயகாந்த், "என்ன சொல்றதுன்னே தெரியல... மஞ்சுளாவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த நன்றி.." என்றவர் சட்டென சுதாகரித்து "நன்றிங்கறேன்.. என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். (ற)



## கதவைத் திறந்தது ரஷ்யா

### ஸ்நோடன் வெளியேற அனுமதி

மொஸ்கோ, ஜூலை 26
அமெரிக்காவின் உளவுத் திட்டங்களை அம்பலப்படுத்திய எட்வர்ட் ஸ்நோடன் மொஸ்கோ விமான நிலையத்திலிருந்து வெளியேற ரஷ்யாவின் குடிபெயர்வுசேவைத் துறை அனுமதி. அளித்துள்ளது.

மொஸ்கோவில் உள்ள ஷெரிமெட்யெவோ விமான நிலையத்தில் கடந்த ஒரு மாத காலமாகத் தங்கியிருந்த ஸ்நோடன் பல்வேறு நாடுகளுக்கு புகலிடக் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தநிலையிலேயே ரஷ்யக் குடிபெயர்வு சேவைத்துறை ஸ்நோடனுக்கு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.


ஸ்நோடனுக்கு குடிபெயர்வு சேவைத்துறை அனுமதி வழங்கியுள்ளபோதும், எல்லைப் பாதுகாப்புபடையினரின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றோம் என்று ஸ்நோடன் தரப்பில் கருத்துத் தெரிவித்த அவரது சட்டத்தரணி கூறியுள்ளார்.

ஸ்நோடனின் புகலிடக் கோரிக்கையை சாதகமாக பரிசீலித்த வெனிசுவேலா அவருக்கு புகலிடம் வழங்க சம்மதித்துள்ளது. (ற)

> “ ஸ்நோடனுக்கு அமெரிக்க அரசு பிடிவிறாந்து பிறப்பித்துள்ளதுடன், அவரது கடவுச் சீட்டையும் முடக்கி வைத்துள்ளது. இந்தநிலையில் ரஷ்யா இந்த முடிவை எடுத்துள்ளது.

# தடம்புரண்டது ரயில்

### ஸ்பெயினில் 69 பேர் சாவு; 100க்கும் மேற்பட்டோர் காயம்



ஸ்பெயினில் நேற்று இயேசு கிறிஸ்துவின் 12 சீடர்களில் ஒருவரான புனித [illegible]க்கு அஞ்சலி செலுத்தும் திருநாள் கொண்டாடப்பட்டது. விபத்தில் சிக்கியவர்களில் பலர் அதில் கலந்துகொள்ளச் சென்றவர்களாவர்.

பேர்லின், ஜூலை 26
ஸ்பெயினின் வடக்குப் பகுதியில் உள்ள சாண்டியாகோ டி கம்போஸ்டெலா என்ற இடத்தில் ரயில் ஒன்று தடம் புரண்டதில் 69 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மிக வேகமாகப் பயணித்த ரயில் வளைவு ஒன்றில் திரும்பியபோது தண்டவாளத்தில் இருந்து விலகியுள்ளது. ரயில் பெட்டிகள் ஒன்றன்பின்ஒன்றாகமோதியதுடன் ஒருகட்டத்தில் ரயில் பெட்டிகள் மேலெழும்பி மற்றைய பெட்டிகள் மீது விழுந்தன என்று அதில் பயணித்த ஒருவர் தெரிவித்தார்.

தற்போது மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றபோதிலும் உருக்குலைந்த பெட்டிகளுக்குள் சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என மீட்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

நிறையப் பயணிகள் ரயில் பெட்டிகளுக்குக் கீழேசிக்கிக்கொண்டுள்ளனர். விபத்தை அடுத்து ரயில் பெட்டிகள் தீப்பற்றிக் கொண்டதாலும் பலர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த அனர்த்தம் ஒரு விபத்தே என்று அந்தப் பிராந்திய அதிகாரிகள் கூறுகின்றனர். எனினும் விபத்து இடம்பெறுவதற்கு சற்றுமுன்னர் தாம் ஒரு வெடிச் சத்தத்தைக் கேட்டதாக அந்த ரயிலில் பயணித்த பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுவதால் உயிரிழப்புகளின் தொகை அதிகரிக்கும் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஸ்பெயினில் 2004-ஆம் ஆண்டு பயங்கரவாதச் செயற்பாட்டால் ஏற்பட்ட ரயில் விபத்தில் 191 உயிரிழந்தனர். (ற)



## குட்டிப் பையனின் நீளப் பெயர்

லண்டன், ஜூலை 26
பிரிட்டனின் குட்டி இளவரனுக்கு ஜோர்ஜ் அலெக்ஸாண்டர் லூயிஸ் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிரிட்டன் இளவரசர் வில்லியம் மற்றும் கேட் மிடில்டன் ஆகியோரும் தங்கள் குழந்தைக்கு பெயர் சூட்டப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளனர். ஜோர்ஜ் அலெக்ஸாண்டர் லூயிஸ் என்று இந்தக் குழந்தைக்கு பெயரிடப்படும் என பிரிட்டனின் பெரும்பாலான பந்தய நிறுவனங்கள் ஏற்கனவே கணித்திருந்தன. (ற)

## அரசியலில் குதித்தார் அசாஞ்சே

மெல்பேர்ன், ஜூலை 26
விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆஸ்திரேலியாவில் ஆரம்பித்துள்ளார்.

இவ்வாண்டு ஆஸியில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலிலும் அவர் போட்டியுடவுள்ளார் என்றும் அறிவித்துள்ளார். (ற)

## பொலிஸ் நாயைப் பார்த்து குரைத்தவர் கூண்டுக்குள்

லண்டன், ஜூலை 26
பிரிட்டனில் பொலிஸ் நாயைப் பார்த்துக் குரைத்தவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்தவர் அண்டொனியா மாரிசன். இவர் ஒரு கால்பந்தாட்ட வீரர். இவர் விளையாட்டுப் போட்டி ஒன்றில் கலந்து கொள்வதற்காக பிரிட்டனுக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் வீதி வழியாகச் செல்லும்போது பொலிஸ் நாய் ஒன்று பொலிஸ்காருக்குள்தூங்கிக் கொண்டிருந்தது. அதைப்பார்த்ததும் மாரிசனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. நாயைப் பார்த்துக் குரைத்துள்ளார். திடுக்கிட்டு விழித்த நாயும் பயந்துபோய் பதிலுக்குக் குரைத்துள்ளது. உற்சாகம் கொண்ட மாரிசன் தொடர்ந்து குரைக்க, நாயும் குரைக்க இவர்களின் போட்டி, மாரிசனின் பின்னால் வந்து பொலிஸார் தட்டும் வரை நடந்துள்ளது. பின்னால் வந்து தட்டிய பொலிஸார் தற்போது மாரிசனை பொலிஸ் கூண்டுக்குள் வைத்துள்ளனர். “தன்பாட்டில் தூங்கிக் கொண்டிருந்த பொலிஸ் நாயை மாரிசன் தொந்தரவு செய்துள்ளார். சத்தம் கேட்டு வந்த பொலிஸாருடனும் முரண்பட்டுள்ளார். தற்போது அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது” என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

## வீட்டுக்குச் செல்ல முடியாது குண்டு மனிதர் அவஸ்தை



படத்தில் இருப்பவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ரிட்சி போயில். இவர் தனது அபரிமிதமான உடல் எடையால் பெரும் அவஸ்தைப் படுகின்றாராம். மேற்தளத்தில் உள்ள தனது வீட்டுக்குச் செல்ல முடியாது மாடிப்படியிலேயே தற்போது காலத்தைக் கழித்து வருகின்றார். சிறிது தூரம் நடந்தாலே ஒக்ஸிஜன் ஏற்ற வேண்டியுள்ள்து என்று கவலைப்படும் போயில் கீழ் தளத்தில் உள்ள வீடொன்றைத் தேடி வருகின்றார். எனினும் அவரைக் கண்டதுமே வீட்டுக்காரர்கள் கதவை மூடுகின்றனராம். (ற)


## வருத்தப்படும் சிறுவனுக்காக மொட்டையடித்தார் புஷ்



நியூயோர்க், ஜூலை 26
புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யு. புஷ் மொட்டைஅடித்துக் கொண்டுள்ளார்.

ரகசிய உளவு அமைப்பை சேர்ந்த அதிகாரி ஒருவரின் 2 வயது மகன், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறான். சிகிச்சையின் காரணமாக சிறுவனின் தலை முடி கொட்டி வருகிறது.

அதனால் சிறுவன் வருத்தப்படுவதை போக்க புஷ் தானும் மொட்டையடித்துக்கொண்டுள்ளார். 60ஆண்டுகளுக்குமுன்னர் புஷ்ஷினுடைய 4 வயது குழந்தை இதே நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தது. (ற)



## அரசுக்கு கட்டடங்கள் வேண்டாம்

பீஜிங், ஜூலை 26
சீனாவில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவைக் கருத்தில் கொண்டு அரச கட்டடங்கள் எதனையும் எதிர்வரும் 5 ஆண்டு காலத்துக்கு கட்டுவதற்கோ அல்லது புனரமைப்புச் செய்வதற்கோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த உத்தரவை சீன அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. சீனாவின் பொருளாதாரம் தொடர்ச்சியாக சரிந்து வருவதை அடுத்து அந்நாட்டு அரசு பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (ற)

## எகிப்துக்குப் போர் விமானம்

### பின்னடிக்கிறது அமெரிக்கா

நியூயோர்க், ஜூலை 26
எகிப்துக்குப் போர் விமானங்களை வழங்கும் நடவடிக்கைகள் தாமதப் படுத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எகிப்தில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப் பட்டுள்ளது என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மேலும் விளக்கமளித் துள்ளது.

ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளுக்கு அமைவாக எப்-16 ரக போர் விமானங்களை எகிப்துக்கு வழங்க அமெரிக்கா தீர்மானித்திருந்தது. எனினும் ஜனாதிபதி முஹமட் முர்சி இராணுவத்தால் பதவி கவிழ்க்கப்பட்டதன் பின்னர், ஆர்ப்பாட்டங்களும் போராட்டங் களும் இடம்பெற்று வருவதை அடுத்து எகிப்தில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

அதையடுத்தே அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளது. (ற)



சிரிய உள்நாட்டுப் போரால் இடம்பெயர்ந்து அயல்நாடான ஜோர்தானில் தஞ்சம் புகுந்துள்ள சிரியர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் ஸர்தாரி முகாமே இது. ஜோர்தானில் சுமார் 18 இலட்சத்துக்கும் அதிகமான சிரியர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களுக்கான அவசர உதவிகளை மேற்கொள்வதில் ஜோர்தான் அரசு பெரும் நிதி நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. (ற)

# வன்னிப் பகுதியில் இறை தியான குணமாக்கல் வழிபாடு

கொழும்புத்துறை, ஜூலை 26
கிளிநொச்சி-முல்லைத்தீவு மறைக் கோட்டத்தின் ஏற்பாட்டில் வன்னிப் பகுதியின் பல இடங்களிலும் இறை தியான குணமாக்கல் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.
கொழும்பில் இருந்து வருகைதரும் உயிர்த்த ஆண்டவர் சமூகத்தைச் சேர்ந்த சகோ.லலித்பெரேரா குழுவினரால் இந்த வழிபாட்டு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.
இன்று பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்திலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை முல்லைத்தீவு புனித பேதுரு ஆலயத்திலும் இடம்பெறும்.
28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இரணை மாதா நகர் புனித செபமாலை அன்னை ஆலயத்திலும் இறைதியான வழிபாடு நடைபெறவுள்ளதாக மறைக் கோட்ட குரு முதல்வர் அருட்திரு ஏ.ஜே. ஜாவிஸ் அடிகள் தெரிவித்தார். (ஒ-135)

# பரிசில் நாள் நிகழ்வும் மணி விழாவும்

தென்மராட்சி, , ஜூலை 26
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வும், வித்தியாலயத்தில் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் அதிபர் சு.தர்மலிங்கத்துக்கு பாடசாலை சமூகத்தினர் ஏற்பாடு செய்த மணி விழா நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரையாளர் சி.உதய குமாரும் கலந்து கொள்வர். (ந-9)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

வடமராட்சி, ஜூலை 26
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலைபண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகை யின் ஆடி மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சஞ்சிகையின் வெளியீட்டுரையை சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜனும், மதிப்பீட்டுரையை ஆசிரியை திருமதி கௌரி சுரேசனும் நிகழ்த்துவார்கள்.
இம்மாதத்துக்கான இந்த இதழ் 187 ஆவது வெளியீடாகும். (ஐ-8)

## பிற்போடப்பட்டது

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை சனிக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த அதிபர்களுக்கான அவிவிருத்தித் திட்டச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இந்தச் செயலமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

★ ★ ★

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை நடைபெற விருந்த கலைமன்ற பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ந-9)




கொழும்புத்துறை, ஜூலை 26
சாவகச்சேரி புனித லிகோறி யார் ஆலய வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகும்.
28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைகாலை 7.30மணிக்கு முதல் நன்மை விழாத் திருப் பலியும் 3ஆம் திகதி சனிக் கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் இடம்பெறும்.
மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப் பலியும், திருச் சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ந-135)

★ ★ ★

மண்டைதீவு புனித பேதுரு வானவர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நவநாள் வழி பாடுகள் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெற்று வரு கின்றது.
31 ஆம் திகதி புதன்கிழமை மாலை நற்கருணை விழாவும், முதலாம் திகதி வியாழக் கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெற்று மாலை 5 மணிக்கு தேர்ப்பவனியும் நடைபெறும். (ந-135)

★ ★ ★

மன்னார் வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.
கடந்த 17 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நவநாள் திருப்பலி இடம்பெற்று வந்தது. இன்று காலை 6.15 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். (ந-12)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்ப்பாணம் கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும். எதிர் வரும் 8 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-7)

# மாவிட்டபுரக் கந்தனுக்கு கார்த்திகைத் திருவிழா

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் ஆடி மாத திருக் கார்த்திகைத் திருவிழா எதிர் வரும் 31 ஆம் திகதி புதன் கிழமை காலை 5 மணிக்கு உஷாக்கால பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
அதனைத் தொடர்ந்து முற் பகல் 11.30 மணிக்கு ஷண்முகார்ச்சனையும், பிற்பகல் 2.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், மாலை 7 மணிக்கு திருவருட் பிர சாதம் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.



ஆலயத்தின் காம்யோற்சவப் பெருவிழா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-14)

# செக். பல்கலையில் கலாநிதிப் பட்டம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சின்னத்துரை விஜயகுமார், பொருளியல் கலாநிதிப் பட்டத்தை செக் குடியரசின் தோமஸ்பாட்டா பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளார்.
இவர் கரவெட்டி மத்தொனியைச் சேர்ந்த சின்னத்துரை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வராவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றார்.
யாழ்.பல்கலைக்கழகத்தில் பொருளியல் இளமாணிப் பட்டத் தையும், மைசூர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுமாணிப் பட்டத்தையும், சென்னைப் பல்கலைக் கழகத் தில் முது தத்துவ மாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். தோமஸ்பாட்டா பல்கலைக்கழகத்தின் பகுதி ரீதியான புலமைப் பரிசிலையும் இலங்கையின் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தின் புலமைப் பரிசிலையும் பெற்று கலா நிதிப் பட்டத்தை நிறைவு செய்துள்ளார்.(ஐ-7)

# விபத்தில் இறந்தவர் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில்

புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் ஏ-9 பிரதான வீதியில் கனரக வாகன விபத்தில் பலியான 50 வயது மதிக்கத்தக்க நபர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள், வவு னியா பொது வைத்தியசாலை பொலிஸ் அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு புளியங்குளம் போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ரி.எம். எம். ஜமால் பொது மக்களைக் கேட்டுள்ளார். இறந்தவரின் உடல் வவுனியாபொது வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ-402)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் 'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு' என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் 'ஒறிஜினல்' என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.
*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

## வியாபார ஸ்தாபனம் வாடகைக்கு
யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியும் கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள கட்டடத் தொகுதியில் கடைக்கட்டடம் ஒன்று வாடகைக்கு உண்டு. வியாபாரத்திற்கு உகந்த முறையில் ஸ்ரான்லி வீதியை முன்புறமாகக் கொண்ட கடை.
**விவரங்களுக்கு - 021-3202474**


## சேவை நலன் பாராட்டு
உயர்திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
B.A. Dip in Edu, M.phil, SLEAS II
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி



இணுவிலில் உதித்து வந்தே
எம்பதி உயர வைத்தீர்
கலைகளில் உயரவைக்க
கலைமகள் சிலையும் தந்தீர்
அமைதியின் உருவமாகி
அரும்பணி பல புரிந்தே
குணமதில் கோபமில்லா
குலக்குன்றாய் மிளிர்ந்தீர் ஐயா!
பட படப்பில்லாப் பேச்சால்
பாதைகள் வகுத்துத் தந்தீர்
இடருறும் போதில் எம்மை
எவர் இனிக் கரைசேர்ப்பார்கள்

Best Wishes

| | |
|---|---|
| யா/சோரன்பற்று கணேசா வித்தியாசாலை-பளை | 05.06.1978 - 31.12.1979 |
| கிளி/பளை மகாவித்தியாலயம் | 01.01.1980 - 19.01.1991 |
| பலாலி ஆசிரியர் கலாசாலை (விரிவுரையாளர்) | [illegible]1991 - 20.09.2001 |
| கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (விரிவுரையாளர்) | [illegible]2001 - 31.12.2002 |
| கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் | 01.01.2003 - 14.12.2008 |
| தென்மராட்சிக் கல்வி வலயம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம்) | 15.12.2008 - 28.07.2013 |



ஊழியர் நலன்புரி கழகம்
வலயக் கல்வி [illegible]கம்
தென்மராட்சி, சாவகச்சேரி.

## விற்பனைக்கு
AAB-XXXX இலக்கமுடைய பஜாஜ் பச்சை நிற முச்சக்கர வண்டி 3200km ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு. (சொந்தப் பாவனையில் உள்ள)
தொடர்பு: 077 255 1785
(29886) (11.6.3)

## விற்பனைக்கு
அலுவலக மேசைகள், விரிவுரைக் கதிரைகள், Excecutive chairs நியாய விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 790 4941
(29882) (11.6.3)

## தேவை
யாழ். நகரிலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு Female Clerk தேவை
தொடர்பு: 078 528 5342
(29883) (11.6.3)

## அறை வாடகைக்கு
விஞ்ஞானபீடம் அல்லது மருத்துவபீட மாணவர் மூவருக்கு அறை வாடகைக்கு உண்டு. கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்
தொடர்பு: 075 664 9711

## காணி விற்பனைக்கு
நல்லூர் பருத்தித்துறை வீதியில் முத்திரைச் சந்திக்கும் சட்டநாதர்கோயிலுக்குமிடையில் நல்ல குடிதண்ணீர் வளமுள்ள 3 பரப்புச் சதுரக் காணி விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை
தொடர்பு: 071 847 5161

## வேலையாள்கள் தேவை
தாவடியில் அமைந்துள்ள எமது வேலைத் தளத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. தச்சு வேலையாள்கள், வெல்டிங் வேலை செய்பவர்கள் மற்றும் பயில விரும்புவோர்.
தொடர்பு: 077 712 0945
(3.6.11)

## தவறிவிட்டது
திருமதி வரதராஜா ரஞ்சிதமலர் என்பவரின் இராணுவ அடையாள அட்டையும், 230000/= காசும், 200 ஸ்ரேலிங் பவுண், Huawei கையடக்கத் தொலைபேசி, மூக்குக்கண்ணாடி, கொமர்ஷல் வங்கிப் புத்தகம் என்பன அடங்கிய கைப்பை கொழும்பிலிருந்து - யாழ்ப்பாணம் வந்த தனியார் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 021 222 7585

## துஷ்பிரயோக குற்றச்சாட்டில் ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 26
பாடசாலைச் சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் ஒருவர் காங்கேசன் துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
நீதிமன்றில் முற்படுத்தப் பட்ட அவர் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளார். அவர் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது. பாடசாலை மாணவி கள் இது தொடர்பில் தமது பெற்றோருக்கு தகவல் தெரிவித்து சமூகத்திலுள்ள வர்கள் ஊடாக காங்கேசன் துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதை அடுத்து குறித்த ஆசிரிய ரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
(வ-4)

# 'கொல்லைப்புற கோழி வளர்ப்பு'க்காக மாதாந்தம் 6,000 குஞ்சுகள் உற்பத்தி

### அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில்



அச்சுவேலி, ஜூலை 26
அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை கோழிக்குஞ்சு உற் பத்தி நிலையத்தில் ''கொல் லைப்புற கோழி வளர்ப்புக் கான'' கோழிக்குஞ்சுகள் மாதாந்தம் 6 ஆயிரம் வரை உற்பத்தி செய்யப்பட்டு பிராந் திய கால்நடை வைத்திய அதி காரி அலுவலகங்கள் ஊடாக குஞ்சு ஒன்று 80 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறது.
அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைக்கு அருகில் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது. அங்கு கொல்லைப்புறகோழி வளர்ப் புக்கான கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
பண்ணைக் கோழியும், நாட்டுப்புறக் கோழியும் கலப்பிறப்பாக்கம் செய் யப்பட்டு கொல்லைப்புற வளர்ப்புக்கான கோழி இனம் உருவாக்கப்பட்டுள்ளது.
கொல்லைப்புற கோழி இனம் நிறம் சார் நிலையில் நாட் டுப்புறக் கோழி போன்று பல்வேறு நிறங்களைக் கொண்டதாக இருக்கும். முட்டை இடும் வீத அளவில் நாட்டுப்புற கோழியிலும் அதிகமானதாக இருக்கும்.
கொல்லைப்புற கோழிகளைக் கொண்டு பெறப்படும் அடை முட்டைகள் அடை வைக்கும் பொறிகளில் வைக்கப்பட்டு 21 தினங்களில் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. வாரத்துக்கு ஒரு தடவைக்குக் குறை யாமல் மாதத்தில் ஐந்து தடவைகள், தடவைக்கு 1200 என்ற வீதத்தில் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.
கொல்லைப்புறக் கோழிக் குஞ்சுகள்தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்பட்டு இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களுக்கும் மற்றும் உதவி அடிப்படை யிலும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.
யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவல கங்கள் ஊடாக வாராந்தம் கோழிக்குஞ்சுகள் சந்தைப் படுத்தப்படுகின்றன.
ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் அமைந் துள்ளது. ஏழு கட்டடங்களில் அடை முட்டை பெறுவதற் கான தாய்க் கோழிகள் வளர்க் கப்படுகின்றன.
இதன்மூலம் கால்நடை உற் பத்தி சுகாதாரத் திணைக்களம் கணிசமான வருவாயை பெற் றுக்கொள்கின்றது. (வ-11)

## மாவிட்டபுரம் ஆலயத்தில் புதிதாக மின்குமிழ்கள்

வலி.வடக்கு, ஜூலை 26
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றுவரும் வருடாந்த உற்சவத்தை முன் னிட்டு ஆலய வீதிகளுக்கு வலி.வடக்கு பிரதேச சபை யால் புதிய மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.
ஆலயத்துக்கு இந்தமுறை அதிக எண்ணிக்கையான அடியவர்கள் வருகை தரக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள் ளமை மற்றும் ஆலய சுற்றா டலில் மக்கள் மீளக்குடிய மர்ந்தமை போன்ற கார ணங்களால் மக்களின் நன்மை கருதி பிரதேச சபை இந்த நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.
இதேவேளை, நாளாந்தம் ஆலய சுற்றாடல் துப்புரவுப் பணிகள் பிரதேச சபை ஊழியர் களால் மேற்கொள்ளப்படுவ துடன் சுகாதார கண்காணிப்பு செயற்பாடுகளும் பிரதேச சபையின் பொது சுகாதார வைத்திய அதிகாரியால் மேற் கொள்ளப்பட்டு வருவதாக வும் பிரதேச சபையின் தவி சாளர் சோ.சுகிர்தன் தெரி வித்தார். (வ-86)

## வர்த்தக நிறுவனங்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 26
இலங்கை தொழில் வழங் குநர் சம்மேளனத்தின் ஏற் பாட்டில் யாழ். சிறிய மற்றும் மத்தியதர வர்த்தக நிறு வனங்களுக்கான செயல மர்வு நாளை யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற வுள்ளது. இந்தச் செயலமர் வில் சிறிய மற்றும் மத்திய தர நிறுவனங்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான விடயங் கள், வழிகாட்டல் ஆலோ சனைகளும் வழங்கப்பட வுள்ளன.
அத்துடன் யாழ்.பிராந்தி யத்தில் தற்போது 7 ஆயி ரத்து 800 மாற்றுத் திறனா ளிகள் உள்ள நிலையில் அவர்களுக்கான தொழில் வாய்ப்பின்மை கண்டறியப் பட்டமைக்கு அமைவாக அவர்களுக்குரிய தொழில் வாய்ப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள் ளது.
(வ-4-86)

# ரூ.700 மில்லியன் செலவில் வடக்கில் 150 குளங்கள் புனரமைக்கப்படும்





வடமராட்சி, ஜூலை 26
வடமாகாணத்தில் 150 சிறிய குளங்களையும் அவற்றுடன் ஒட்டிய வீதிகளையும் 700 மில் லியன் ரூபா செலவில் அபி விருத்தி செய்யும் பணிகள் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக் கப்படவுள்ளன.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் குறித்த அபிவி ருத்தித் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாக மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள் ளார்.
வடக்கில் மீள்குடியேற்றம் நடை பெற்ற பிரதேசங்களில் வாழும் மக்களின் நலன் கருதி அந்தப் பிரதேசங்களை அண்மித் துள்ள சிறுகுளங்கள் மற்றும் வீதிகளே அபிவிருத்தி செய்யப் படவுள்ளன.
அபிவிருத்தி செய்யப்படவுள்ள சிறுகுளங்கள் மற்றும் வீதி கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவு னியா ஆகிய 5 மாவட்டங் களிலிருந்து தெரிவு செய்யப் பட்டுள்ளன.
அடுத்த வாரம் ஆரம்பமாகும் அபிவிருத்தி வேலைத் திட்டங் கள் மூன்று மாத காலத்துக் குள் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(வ-8)

### பன்முகப்படுத்தப்பட்ட நிதியில்

## தென்மராட்சிப் பகுதியில் 76 வேலைத்திட்டங்கள்

தென்மராட்சி, ஜூலை 26
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 76 வேலைத் திட்டங்களை மேற் கொள்ள 37 லட்சத்து 66 ஆயிரத்து 140 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இவற்றில் 35 முன்பள்ளிகள் உட்பட 41 வேலைத்திட்டங்கள் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஊடாகவும் 19 வேலைத் திட்டங்கள் சாவகச்சேரி பிரதேச சபை ஊடாகவும் 16 வேலைத் திட்டங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தாலும் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய் யப்பட்ட வேலைத்திட்டங்களில் சாவகச்சேரி நகரசபை பிரிவுக்குள் எந்தவொரு வேலைத் திட்டத்துக்கும் நிதி ஒதுக்கப்படவில்லை எனத் தெரிய வந்துள்ளது. (வ-9)

## விவசாயக் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
'சூழலுடன் நட்புறவான விவசாயத் தில் புதுயுகம் நோக்கி'' என்னும் தொனிப்பொருளிலான 2013 வடமாகாண விவசாயக் கண்காட்சிக் கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை 5 தினங்கள் கண்காட்சி வட்டக் கச்சி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார். (வ-7)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் 16 வேலைத் திட்டங்கள்

### பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து

தென்மராட்சி,ஜூலை 26
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த வருடத் துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக் கீட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களில் 16 வேலைத் திட் டங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப் படவுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:
★ கொடிகாமம் தெற்கு தவசி குளம் கண்ணகை அம்பாள் ஆலய மண்டபப் புனரமைப்பும் மின்வசதி வழங்கலும் (1,47,000) ரூபா, ★ கொடிகாமம் தெற்கு தவசிகுளம் கண்ணகை அம்பாள் ஆலயக் கட்டட நிர்மாணம் (1,47,000) ரூபா, ★ நுணாவில் கிழக்கு சிவன், உசன் ஸ்ரீமுருகன், மட்டுவில் கிழக்கு வின்சன், மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணக் கொள் வனவு (தலா 24,500) ரூபா,★ கைதடி தென்கிழக்கு ஆத்திபுலம் கந்தசாமி ஆலய புனரமைப்பு வேலைகள் (49,000) ரூபா, ★ விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடப் புனரமைப்பு (49,000) ரூபா, ★ சாவகச்சேரி கோயில் குடியிருப்பு புனித லிகோரியார் தேவாலயத்துக்கு ஓடியோக் கருவிகள் வழங்கல் (29,400) ரூபா, ★ கொடி காமம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடப் புனரமைப்பு (49,000) ரூபா, ★ கைதடி கிழக்கு நவபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு மலசலகூடம் அமைத்தல் (98,000) ரூபா, ★ சரசாலை வடக்கு நித்தியா மகளிர் ஐக்கிய நாணய சங்க கட்டட வேலைகள் (196,000) ரூபா, ★ கைதடி தெற்கு வீரகத்திப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலைக் கட்டடம் அமைத்தல் (147,000) ரூபா, ★ மீசாலை வடக்கு தட்டான்குளம் நீலகண்ட பிள்ளையார் ஆலயக் கட்டடம் (49,000) ரூபா, ★ கச்சாய் தெற்கு விநோபா பாலர் பகல் பராமரிப்பு நிலையக் கட்டட அமைப்பு (196,000) ரூபா ஆகியவற்றுக்கான வேலைத்திட்டங்களே முன்னெடுக் கப்படவுள்ளன. (வ-9)

## சைவ சித்தாந்த செயலமர்வு

மட்டக்களப்பு,ஜூலை 26
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த செயலமர்வை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் புதன்கிழமை வழங்கப்பட்டன.
மட்டக்களப்பு, நாவற்குடா இந்து கலசார மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலர் வி.வாசுதேவன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## சிறுபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பம்



அம்பாறை,ஜூலை 26
அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தமுறை மாவட்டத்தில் 55,392 ஹெக்ரெயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் எம்.கலீஸ் தெரிவித்தார்.
சிறந்த காலநிலை மற்றும் நீர்ப்பாசன வசதி, உரமானிய விநியோகம், களைக் கட்டுப்பாடு, நோயின் தாக்கம் போன்றவை இந்த முறை விவசாயிகளுக்கு சாதகமான முறையில் அமைந்ததனால் நெற்செய்கையிலிருந்து உச்ச விளைச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது என்று அவர் கூறினார்.
அறுவடை இயந்திரம் மூலமே அதிகளவில் நெல் அறுவடை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கிழக்கு மாகாண சபைக்கு ஆபத்து; கலைப்பது தொடர்பில் ஆலோசனை?

திருகோணமலை,ஜூலை 26
கிழக்கு மாகாண சபையை கலைப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரச உயர் மட்டம் கேட்டுக் கொண்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
புதன் கிழமை நடைபெற்ற இரகசிய கூட்டமொன்றிலேயே இந்த ஆலோசனை வழங்கப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் 13 ஆவது திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் அரசின் நகர்வுக்கு எதிராக கிழக்கு மாகாணசபையில் கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்படும் தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.
13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு எதிராக கிழக்கில் விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன. கிழக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக மாகாண சபையை கலைத்து விட்டு மாகாணத்தின் நிர்வாகத்தை அரசு கைப்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதியின் ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

> 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு எதிராக கிழக்கில் விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை கடந்தவாரம் கல்முனை பிரதான வீதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசின் நகர்வு தொடர்பில் தனது ஏமாற்றத்தை வெளியிட்டிருந்தார்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்றி அரசு நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைத்துள்ளது. அத்தகைய தெரிவுக்குழுவினால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் குப்பைக் கூடையினுள் வீசப்படும் என்று அவர் கூறினார். (ச)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

மட்டக்களப்பு,ஜூலை 26
மட்டக்களப்பு,வெருகல் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.
டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய ஏதுவான சூழலைக் கொண்டுள்ள இடங்கள் மக்களின் பங்களிப்புடன் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.
டெங்கு நுளம்புத் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வுப் பிரசாரங்களும் கிராமங்கள் தோறும்



பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
வெருகல் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முதன் முறையாக டெங்கு நோயாளிகள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அட்டாளைச்சேனை வீதி புனரமைப்பில் மோசடி



அட்டாளைச்சேனைஜூலை 26
அட்டாளைச்சேனை, புறத்தோட்டம், வாய்க்கால் வீதி புனரமைப்பு நடவடிக்கையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று அப்பகுதி மக்கள் அந்தப் பிரதேச சபை செயலரிடம் மனு கையளித்துள்ளனர்.
இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :
அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், சமூக அமைப்பு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்த வீதிப் புனரமைப்பு நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை.
வாய்க்கால் வீதியில் கடந்த ஓரிரு நாள்களுக்கு முன்னர் கிறவல் தூவும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. வீதிப் புனரமைப்பு என்ற பெயரில் ஏற்கனவே இருந்த வீதி இவ்வாறு கிறவல் மண் தூவி நாசம் செய்யப்பட்டுள்ளது.
இந்த வீதியைப் புனரமைப்பதாயின், வீதிப்புனரமைப்பு நியமங்களின் அடிப்படையில் அதை மேற்கொள்ள வேண்டும்.
எனவே இந்த வீதிக்காக ஒதுக்கப்பட்ட 3லட்சம் ரூபா நிதியைச் செலவிட்டு,உரிய இயந்திரங்கள் மூலம் அதைச் செம்மைப்படுத்தித் தரவேண்டும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ரூ.12 மில்லியன் செலவில் மைதானங்கள் புனரமைப்பு

திருகோணமலை,ஜூலை 26
தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள ஹமீதியா மற்றும் கல்மெட்டியாவ தெற்கு ஆகிய பொது விளையாட்டு மைதானங்கள் 12 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன என்று தம்பலகாமம் பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.எம்.சுபியான் தெரிவித்தார்.
தம்பலகாமம் பிரதேச சபையில் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
தம்பலகாமம் பிரதேசத்தில் விளையாட்டுத் துறையில் மாகாண ரீதியாகவும் அகில இலங்கை ரீதியாகவும் சாதனையீட்டிய பல வீரர்கள் உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். (ச)



*திருகோணமலை கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த சிறுவர் ஆக்கத்திறன் கண்காட்சி வியாழக்கிழமை நடைபெற்றபோது மாணவர்களின் ஆக்கங்களை பெற்றோர்கள் பார்வையிடுகின்றனர்.* (ச-40)

# அக்மீர்வத்தை காணியில் முஸ்லிம்கள் மீள்குடியேறத் தடை

## உரிமையாளர்கள் முறைப்பாடு

மட்டக்களப்பு,ஜூலை 26
முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் 1979 ஆண்டு வழங்கப்பட்ட ஏறாவூர், அக்மீர்வத்தை காணிகளில் முஸ்லிம்கள் மீளக்குடியேறுவதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன என்று குடியிருப்பாளர்கள் முறையிடுகின்றனர்.
1973 ஆம் ஆண்டு காணிக் கச்சேரி நடத்தப்பட்டு ஏறாவூர் அக்மீர்வத்தை எனுமிடத்தில் ஏறாவூரைச் சேர்ந்த 21 முஸ்லிம் வறிய குடும்பங்களுக்கு சுமார் 30 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.
மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் கையொப்பமிடப்பட்ட காணி உறுதிப்பத்திரமும் அப்போதே வழங்கப்பட்டிருந்தது.
வன்முறைகள் காரணமாக 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறித்த காணித் துண்டுகளைப் பராமரிக்கக் கூடிய சூழல் இல்லாததினால் குடியிருப்பாளர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள்.
எனினும் கிழக்கில் அமைதிச் சூழ்நிலை திரும்பியதன் பின்னர் அக்மீர்வத்தை கிராமத்தவர்கள் மீண்டும் தங்களது பழைய இடங்களுக்குத் திரும்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது நிர்வாக ரீதியில் பல்வேறு தடைகள் அவர்களுக்கு விதிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

> நிர்வாக ரீதியில் பல்வேறு தடைகள் தங்களுக்கு விதிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணித்துண்டுகள் 1993 ஆம் ஆண்டு வேறு 19 பேருக்கு மிகவும் இரகசியமான முறையில் வழங்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கின்றது.
எனவே இந்தக் காணிப் பிரச்சினையானது சமூகங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கிறது என்று மக்கள் கூறுகின்றனர்.
இந்த விடயம் குறித்து மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு, மாகாணக் காணி ஆணையாளர், ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலர், பொலிஸார் ஆகிய தரப்பினரிடம் முறையிட்டுள்ளதாக ஏறாவூர் முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மனநிலையில் மாற்றமில்லை

மட்டக்களப்பு,ஜூலை 26
போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலையில் இன்னும் மாற்றம் தென்படவில்லை.
அதனை மாற்றுவதற்கு அரசு இதுவரை காலமும் முன்வராமை மக்கள் மனங்களை மேலும் கஷ்ட நிலைக்கு உள்ளாக்கியுள்ளது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.
இதுவரைகாலமும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கும் நாவிதன்வெளி பிரதேச சபைக்கு உட்பட்ட மத்தியமுகாம், சவளக்கடை, நான்காம் கொலனி 1,2,3,4 பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்குச் சென்ற அவர் அங்குள்ள மக்களின் குறைநிறைகளை கேட்டறிந்த பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தப் பிரதேசம் போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறி தங்களது உற்றார், உறவினர் வீடுகளில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். என்றார். (ச)

## ரணிலுடன் பேசத் தயார் கரு தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 26
எனக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவித முரண்பாடுகள் இருந்தாலும் அதனை நீக்கிக் கொள்ளும் வகையில் பேச்சுக்குத் தயாராக உள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.
எமது ஒரே நோக்கம் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதே என்று அவர் கூறினார்.
பேச்சு நடத்துவதற்காக கரு ஜெயசூரிய,சஜித் பிரேமதாஸ ஆகியோரை ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர்



தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகிய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தபோது...

## மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கவின் தோல்வி உறுதி

### கட்சி தாவிய தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 26
நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைவது உறுதி என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியில் பழிவாங்கும் படலம் தொடர்கின்றது. பழிவாங்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன். ஏகாதிபத்திய ஆட்சி, ஜனநாயகம் நாட்டில் இல்லை என்று அரசை விமர்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் தலைமைத்துவத்திடம் ஜனநாயக நடைமுறை கிடையாது.தலைமையின் தன்னிச்சையான போக்கே மேலாதிக்கம் செலுத்துகின்றது. சபையில் விசேட அறிவிப்பொன்றை விடுத்து உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
சஜித் பிரேமதாஸவின் தலைமையின்கீழ் கட்சியைப் பாதுகாக்க நாம் போராடினோம். எனினும், கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு தமக்கு விசுவாசமானவர்களையே தலைமை நியமித்தது. சுதந்திரமான முறையில் செயற்குழுவில் வாக்களிக்க முடியாதவாறு திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவ்வாறான சூழ்நிலையில் தலைமைப் பதவி மேலும் 6 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது. மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக நாம் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தோம். அதைப் பயனுள்ளதாக மாற்றியமைக்க தலைமை அக்கறை காட்டவில்லை. -என்றார். (ச-சி)

**ஐக்கிய தேசியக் கட்சியில் பழிவாங்கும் படலம் தொடர்கின்றது. பழிவாங்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன்.**

# நாடு கடத்தக் கோரியவரே நீலிக் கண்ணீர் வடிக்கிறார்

### மனோ கணேசன் கிண்டல்

கொழும்பு, ஜூலை 26
மாவை. சேனாதிராசாவை நாடு கடத்த வேண்டும் என்று கூறிய விமல் வீரவன்ச, இன்று அவரை முதலமைச்சராக்கவில்லை என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறார். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:-
இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க கச்சதீவை மீட்பதே ஒரே வழி என்று தமிழ் நாட்டுத் தலைவர்கள் எண்ணியுள்ளனர்.
இது தொடர்பில் இந்திய உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கச்சதீவு ஒப்பந்தத்தை இந்திய மத்திய அரசு ரத்துச் செய்தால் அதனைக் காரணம் காட்டி 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.
தமிழர்களுக்கு பிரிக்கப்படாத இலங்கைக்குள் அதிக பட்ச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பது இன்று ஐ.நா. பிரச்சினையாகி விட்டதை இலங்கை இனவாதிகள் உணர வேண்டும்.



சிரேஷ்ட அரசியல் தலைவரான மாவையை ஒதுக்கி விட்டு எங்கோ ஒரு மூலையில் வழக்குப் பேசிக்கொண்டிருந்த விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நியமித்தது நியாயமா என்று விமல் வீரவன்ச கண்ணீர் வடிக்கின்றார்.
அண்ணன் மாவையை நினைத்து தம்பி வீரவன்ச அழுகின்றார் என்று சொல்கின்றார்.
இவர்தான் சில நாள்களுக்கு முன்னர் மாவையை கடுமையாக தாக்கிப் பேசிய தோடு நாடு கடத்த வேண்டும் என்றும் சொன்னவர்.
ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரி செல்பவர்களை தடுத்து நிறுத்த இந்த நாட்டு கடற்படை முழு மனதுடன் செயற்படகின்றதா? போகின்றவர்கள் தமிழர்கள் என்பதால் இவர்கள் பேசாமல் இருக்கின்றனரா?
சட்ட விரோதப் பணத்தை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். நாட்டு நிலைமை இன்னமும் சீரவில்லை. ஆனால் அதற்காக சட்ட விரோத பயணம் வேண்டாம்-என்கிறேன் என்றார். (ஐ-5)

## 10,000 இலங்கையர் தற்போது சவூதியில்

### சட்டவிரோதமாகத் தங்கியுள்ளனர்

கொழும்பு,ஜூலை 26
சுமார் பத்தாயிரம் இலங்கை பணியாளர்கள் சவூதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.



சவூதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 16,000 இலங்கை பணியாளர்களில் 6000 பேர் நாடு திரும்பியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.
சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கு நாடு திரும்பிச் செல்ல பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி வரை பொது மன்னிப்பு காலம் நடைமுறையில் இருக்கும் என்று அவர் கூறினார்.
இந்தக் காலத்தில் சட்ட விரோதமாக சவுதியில் தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு திரும்ப முடியும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

## ஹிங்குராங்கொட பிரதேச சபை உறுப்பினர் சாவு

கொழும்பு,ஜூலை 26
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஹிங்குராங்கொட பிரதேச சபை உறுப்பினர் ஆர்.பி. ரத்நாயக்க விபத்தில் உயிரிழந்துள்ளார்.
மின்னேரியாவிலுள்ள பாலமொன்றில் பயணித்தவேளை வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
புதன்கிழமை இரவு இவர் ஹிங்குராங்கொடவிலிருந்து தனது வீட்டுக்குச் செல்லும் வழியிலேயே வாகனம் விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் கூறினர். (ச)

## வருடாந்தம் 10 லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டைகள்

### ஆள்பதிவுத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை 26
இலங்கையில் வருடாந்தம் 10 லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் 5 லட்சம் பேர் வரையில் முதன் முறையாக தேசிய அடையாள அட்டை பெறுபவர்களாக உள்ளனர்.
இந்தத் தகவலை ஆள்பதிவுத் திணைக்கள செயல்திட்ட உதவி முகாமையாளர் எச்.எம்.ஜே.கே. ஹேரத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் பல பாகங்களிலிருந்தும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு கிடைத்த வண்ணமுள்ளன.
அவற்றைப் பரிசீலித்து அடையாள அட்டை வழங்குவதற்கான பதிவுகளைச் செய்து, தரவேற்றம் செய்து அடையாள அட்டைகள் தயாரிக்கப்படுகின்றன.



அவ்வாறு தயாரிக்கப்பட்டு நாளாந்தம் சுமார் 4 ஆயிரம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன. வரு டாந்தம் சுமார் 10 லட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் 5 லட்சம் பேர் புதிதாக அடையாள அட்டை யைப் பெறுபவர்களாக உள்ளனர்.
ஏனையவை ஏற்கனவே அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களின் விண் ணப்பங்கள், அடையாள அட்டை பழுதாகிய நிலையில் அதனைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்த வர்களது விண்ணப்பங்களின் அடிப்படையில் வழங்கப்படு பவை ஆகும்.
நாடளாவிய ரீதியில் 332 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் இந்த வகையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன.
ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கம் பலருக்கு வழங்கப்பட்டுள்ள சம்பவங்களும், ஒருவருக்கு பல தேசிய அடையாள அட்டைகளினது இலக்கங்கள் வழங்கப்பட்ட சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன. மீள் விண்ணப்பத்தின்போது, இந்தநிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தவறுகளைத் தவிர்க்கவே இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.- என்றார். (ச-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒடுக்கு முறையும் மேலாதிக்கமும் நீண்டு தொடர முடியுமா...?

இந்த நாட்டின் அரசமைப்பு முழுவதுமாக இனவாதம் செறிவானது. அதனை அனைத்துலகமும் அறிந்துள்ளது, புரிந்து கொண்டும் உள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் சிங்களம் அரச மொழி என்றும் இரண்டாவது வரியிலேயே தமிழும் அரச கரும மொழி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இந்த நாடு, இனவாத நாடு என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், உண்மையைக் கூறுவதாயின், இப்போது சிங்களம் அரச கரும மொழி அல்ல. ஏனெனில், தேசிய முக்கி யத்துவம் வாய்ந்த அனைத்து நடவடிக்கைகளும், பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன.

ஜனாதிபதி கூறுவது போன்று, இனப் பிரச்சினைக்கான தீர்வு கொடுக்கல் வாங்கல் அல்ல. நாட்டுக்கு, குறிப்பாக தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்காத காரணம் கருதியே, இந்தியா உட்பட அனைத்துலக நாடுகள், இலங்கை விவகாரங்களில் தலையிடுகின்றன; மூக்கை நுழைக்கின்றன.

மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருப்பவர் ஜனதா விமுக்தி பெரமுனவின்(ஜே.வி.பியின்)தலைவர்சோமவன்சஅமரசிங்க.

தமக்குரிய உரிமைகள் உள்நாட்டில் வழங்கப்படாத நிலையிலேயே, தமிழ் மக்கள் இந்தியாவிடமும் ஏனைய அனைத்துலக நாடுகளிடமும் உதவிகோரிச் செல்கின்றனர். அதனைக் குறை கூற முடியாது.

இலங்கை அரசுகளின் ஒவ்வாத போக்குகளினாலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளது; உருவாகி உள்ளது. என்றும் ஜே.வி.பியின் தலைவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அத்தோடு தரிக்காமல்-

இலங்கை-இந்திய ஒப்பந்தம் உட்பட இந்தியாவின் தலையீடுகளையும் அழுத்தங்களையும் தவிர்க்க-வென் றெடுக்க-தேசியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்ப தற்கு, தமிழ் மக்களுக்கு அதிக உரிமைகளை வழங்க வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டிருக்கிறார் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) தலைவர் சோமவன்ச அமரசிங்க.

''தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான அணுகுமுறை முன் மொழிவுகள்'' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் ஆற்றிய தலைமை உரையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

தேசிய இனப்பிரச்சினை குறித்துப் பேசும் போது, கறுப்பு ஜூலையை, அதன் கொடூரங்களை மறக்க முடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ள, அதன் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பிய்த்து எடுப்பதற்கு அரசுக்கு ஆதரவான ஜாதிக ஹெல உறுமயவினரும், அமைச்சர் வீரவன்சவும் சன்னதம் ஆடுகிறார்கள். அரசின் தலையாரியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்வரிசைப் பிரதானிகளும் அமர்க்களம் போடுகிறார்கள்.

கச்சதீவை இந்தியாவிடம் திரும்பக் கொடுத்துவிட்டு, அதன் அழுத்தங்களில் இருந்து விடுபட்டு, தமிழ் மக்களுக்கு தாம் நினைத்தவாறு அற்ப சொற்பங்களைக் கொடுத்து, அவர்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதே இப்போதைய அரசின் உள்ளார்ந்த நோக்கம் என்ற தகவல்களும் வெளிப்படுகின்றன.

மாகாண சபைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, காணி பொலிஸ் அதிகாரங்களைப் பறித்துவிடும் செயற்பாடு ஒத்திப் போடப்பட்டுள்ளது. தெற்கில் தேர்தல் நடைபெற உள்ள இரண்டு சபைகளிலும் வென்ற பின்னர் தனது உத்தேச திட்டத்தை அரசு கைவிடமாட்டாது என்று கருதலாம்.

தமிழர் விரோத மற்றும் இனவாதத் தரப்புக்களைக் கிளப்பிவிட்டு, மீண்டும் ஆவேசப்படுத்தி, தான் நினைத்ததைச் செய்து முடிப்பது, அரச தரப்பின் உள்ளார்ந்த செயல் திட்டமாக அமையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இப்போது இந்தியா வலியுறுத்துவதைவிட ஒருபடி மேற் சென்று தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கு வதற்கு அரசு ஓர் அரிசி அளவேனும் இறங்கி வராது என்று நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் எதிர்பார்க்கலாம்.

இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை (அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை) இலங்கை அரசு நீர்க்கச் செய்தாலும்-

தமிழ் மக்களுக்குரிய ஜனநாயகம் சார் ஆட்சி உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற அனைத்துலகத்தின், கருத்துக்களை நீண்ட காலத்துக்கு அலட்சியம் செய்வது-

''பூமராங்'' போன்று திரும்ப வந்து தன்னையே தாக்கும் என்ற நியதியை பதவியில் உள்ள அரசாங்கமும், அதற்கு முண்டு கொடுக்கும் இனவாதிகளும், மிதவாதிகளும் உணரத் தலைப்படுவது எப்போது?

எண்ணிக்கையில், சனத்தொகையில் அதிகமானவர்கள் என்ற ஒரே ஒரு காரணத்தால் சிறுபான்மை இனங்கள் மீது, மேலாதிக்கம் மற்றும் ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்து கட்டவிழ்த்துவிட முடியாது என்ற அரசியல் யதார்த்தத்தை-

பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களும், இனவாதிகளும் உணராதவரை இந்த நாடு ஏனைய தேசங்களைப் போன்று முன்னேற முடியாது. இந்த [illegible]மையை, யதார்த்தத்தை சம்பந் தப்பட்டவர்கள் எப்போது உணரத் தலைப்படுவார்கள்.....?

# மீண்டும் தமிழர்கள் பார்வையாளர்களாக

அசோக் குமார்

2009-இல் நடந்த இனப் படுகொலைக்குப் பிறகு போர்க்குற்றம், மனிதஉரிமை மீறல் போன்ற செயல்களுக்காக சர்வதேச சமூகத்தினால் இலங்கை நெருக்கடிக்குள்ளாகப்பட்டு வருகிறது. இலங்கையே தன் குற்றங்களை விசாரித்து, தனக்குத்தானே தண்டனை வழங்கிக் கொள்ள வேண்டும் என்ற வினோதமான தீர்மானத்தை அமெரிக்கா ஐ.நா. சபையில் கொண்டுவந்து நிறைவேற்றியது. இன்றுவரை இலங்கை அதைப்பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பூகோளரீதிஅமைப்பு காரணமாக இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் இலங்கை மீது கவனம் செலுத்தினாலும், எந்த நாடும் தமிழர் பிரச்சனையில் இலங்கையை கண்டுகொள்ளவில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்ட இலங்கை அரசு இலாப அரசியல் நடத்தி, தமிழர்களை அடியோடு ஒழித்துகட்டும் நடவடிக்கைகளில் இறங்கியது.

வடக்குப் பகுதியில் இராணுவமயமாக்கல், தமிழர் நிலங்களை கையகப்படுத்துதல், சிங்கள மக்கள் குடியேற்றம், சிங்களம் மற்றும் பௌத்த மத பரவலாக்கம் போன்றவை தடையில்லாமல் நடைபெற்று வந்தன. இந்தியாவும், சீனாவும் உதவி என்ற பெயரில் வீடு கட்டி தருகிறோம், ரயில் நிலையங்களையும், துறை முகங்களையும் செப்பனிடுகிறோம் என்று இலங்கைக்கு பணத்தை வாரி வழங்குகின்றன. இவ்விதம் தமிழர் பகுதிகளில் ஒடுக்குமுறைகள் நடைபெறும் நிலையில், கடந்த சில மாதங்களாக ஈழத்தமிழர் நலன் பற்றியும், அதைத்தொடர்ந்து வடக்கு மாகாணத் தேர்தல் அறிவிப்பும், 13-வது சட்டத்திருத்தம் மாற்றம் குறித்தான தகவல்களும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றன. இவை எல்லாவற்றுக்கும் காரணம் இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாடே.

### பொதுநலவாய மாநாடு

கடந்த 2009-ஆம் ஆண்டு டிரினிடாட் மற்றும் டொபாகோ நாட்டில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில், 2013-ஆம் ஆண்டுக்கான 23-வது பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இந்தியா தான் 2009 போரையும், அதன் பின்பு இலங்கையை தப்புவிப்பதற்கான திட்டத்தையும் வகுத்திருந்தது. இலங்கையில் பொதுநலவாய மாநாடு என்று அறிவிப்பு வெளியானது முதலே எதிர்ப்புகளும் தொடர்ந்து வந்துகொண்டு தான் இருந்தன. 2011-இல் கனடா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கையில் மாநாடு நடத்தப்படுவதைக் கடுமையாக எதிர்த்தன. ஆனாலும் இந்தியாவின் பலம்மிக்க செல்வாக்கால், அந்த எதிர்ப்புகள் அடக்கப்பட்டன. கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைமை நீதிபதிகள் கலந்து கொண்ட சட்டமாநாட்டிலும் கூட இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஐ.நாவில் அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வெற்றி பெற வைத்தது.சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், ஐ.நா. மனித உரிமை ஆணையம், கனடா போன்ற சில நாடுகளின் அழுத்தம் போன்றவை பொதுநலவாய அமைப்பை நெருக்கடிக்குள்ளாக்கின. ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருப்பது கூட இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கின. இந்நிலையில்இம்மாநாடு நடக்காமல் போனால் இலங்கை சர்வதேச சமூகத்தில் தனிமைப்படுத்தப்படும் நிலை ஏற்படும். இதனை ஈடுகட்டுவதற்கு என்ன செய்வது என்று சிந்தித்த இலங்கை, நீண்ட காலமாக தேர்தல் நடைபெறாமல் இருந்த வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என அறிவித்தது.

### வடக்கு மாகாணத் தேர்தல்

வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தப்போவதாக இலங்கை அறிவித்துள்ளது. இது 25 ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தப்படும் தேர்தல். இத்தேர்தலை வரும் நவம்பரில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டைக் கருத்தில் கொண்டு, அரசு சர்வதேச நாடுகளின் நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக நடத்தவிருப்பதாக அறியமுடிகிறது. இதே போல திருகோணமலை மாணவர் படுகொலைக்கு, 12 பொலிஸாரை ஒப்புக்காக கைது செய்து, தன்னை நல்லவன் போல காட்ட இலங்கை முயற்சிக்கிறது. மேலும் வடக்கில் இராணுவப் படைகளை குறைப்பதாகவும், வளர்ச்சி மற்றும் ஜனநாயகத் தன்மையில் கவனம் செலுத்தப் போவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இது போன்ற அறிவிப்புகள்அத்தனையும், பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு உலக நாட்டுத் தலைவர்கள் இலங்கை வரவிருக்கும் நிலையில், போருக்குப் பின்பு வடக்கு மாகாணம் எவ்வளவு அமைதியாகவும், வளர்ச்சிப் பாதையில் செல்வதைப் போலவும் ஒரு மாய பிம்பத்தை உருவாக்க அரசு நினைப்பதாகவே தெரிகிறது.

இதற்காகவே 13-வது சட்டத்திருத்தத்தால் தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்காதெனினும், அதில் திருத்தம் கொண்டு வந்து, தமிழர்கள் ஆட்சியில் அமர முடியாதவண்ணம் இச்சட்டத்தை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளும் நடந்து வருகின்றன.

### 13-வது சட்டத் திருத்தம்

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகள் சார்ந்த குறைகளைத் தீர்க்க 1987-இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை ஜனாதிதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா இடையே ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து தமிழர்களுக்கென ஒரு மாகாணமும், மற்றப்பகுதிகளை உள்ளடக்கி சிங்களவர்களுக்கென ஒரு மாகாணமும் என்று பிரித்து, இரண்டு மாகாணங்களுக்குத் தேவையானவற்றை தனித்தனியே மற்றொரு மாகாணம் பாதிக்கப்படாத வகையில், தனி மாகாண சட்டமன்றம் மூலம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அதனை சட்டமாக்க 1988-இல் இலங்கை அரசியலமைப்பில் அரசமைப்புக்கான 13 வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்திருத்தத்தில் எந்த ஒரு மாற்றம் தேவையென்றாலும், 1988 உடன்படிக்கையின்படி இலங்கை இந்தியாவுடன் கலந்தாலோசிக்க வேண்டும். இச்சட்டத்திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு ஆட்சி, காணி மற்றும் பொலிஸ் போன்ற முக்கிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், சில தமிழ் அமைப்புகளும், இந்தியாவும் மீண்டும் 13-வது சட்டத்திருத்தத்தை நடைமுறைபடுத்த கோரின. பொதுநலவாய மாநாடு நடக்கவிருக்கும் நிலையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டது. தமிழர்களுக்கு ஆட்சி அதிகாரம் வழங்க மனமற்ற நிலையில், தற்போது 13-வது சட்டத்திருத்தத்தை நீர்த்து போக செய்யும் செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. ஆனால் 1987 ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கையை சட்டப்பூர்வ வடிவமாகக் கொண்டுவரப்பட்ட சில சட்டங்கள், இந்த 13-வது திருத்தத்தை ஏற்கனவே நீர்த்துப்போகச் செய்துவிட்டன. தற்போதுள்ள நிலையிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டாலும், தமிழ் ஆட்சியாளர்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் முழுவதும் இலங்கையின் நாடாளுமன்றத்திற்கு உண்டு.

### சட்டத் திருத்தம் மாற்றங்கள் மீதான நிலை


இரு நாடுகளும் மாறி மாறி பேரம் பேசுவதற்கு யாரேனும் ஒருவரை அனுப்பிக்கொண்டிருந்தாலும், அப்பாவி மக்களுக்கு இந்தியா 13-வது சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்த கடுமையாக போராடுவதைப் போலவே தோற்றமளிக்கும். ஆனால் இச்சட்டத் திருத்தம் மீது இரு நாடுகள் கொண்ட நிலை இன்று வரை மாறிவிடவில்லை. 13-வது சட்டத்திருத்தத்தில் திருத்தம் மேற்கொள்ள இந்தியாவைக் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமில்லை என்று கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார். பின்னர் மன்மோகன்சிங் இச்சட்டத்தை மாற்றம் ஏதும் இல்லாமல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். பசில் மக்களின் விருப்பத்திற்கிணங்க கண்டிப்பாக மாற்றப்படும் என்றார். சிவ்சங்கர் மேனன் இந்தியாவின் நிலையை தெளிவுபடுத்திவிட்டோம் என்றார். பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவின் நிலைப்பாட்டை மீறி சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று கூறி அது குறித்து ஆராய எதிர்க்கட்சிகள் எதுவுமின்றி ஒரு நாடாளுமன்றக் குழுவை அமைக்கிறார். கோத்தப்பாய , தமிழர்களுக்கு காணி மற்றும் பொலிஸ் ஆகியவற்றில் அதிகாரம் வழங்குவது நாட்டின் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக அமையும் என்கிறார். ஆக மொத்தம் 13-வது சட்டத்திருத்தம் இன்றுவரை இந்தியா மற்றும் இலங்கை இடையே இழுபறியில் தான் உள்ளது.

இவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும், இலங்கை கண்டிப்பாக தான் நினைத்தபடி இச்சட்டத்தை வலுவிழக் கச் செய்து சட்டம் நிறைவேற்றும். தேர்தலை வெற்றிகரமாக நடத்தி பொதுநலவாய மாநாட்டில் பெருமை சேர்த்துக்கொள்ளும்.

இப்படி ஒருசேர 13-வது சட்டத்திருத்தம், வடக்கு மாகாணத் தேர்தல், பொதுநலவாய மாநாடு என்று அனைத்தையும் வெற்றிகரமாக நடத்திக்காட்டி, இலங்கை அரசு தமிழர் கள் மீண்டெழுவதை தடுப்பதுடன் இனப்படுகொலையையும் தமிழர் மனங்களில் இருந்து மறக்கடிக்கும். இதற்காக இலங்கை நிறைய விடயங் களை இந்தியாவுடன் சமரசம் செய்து கொள்ளும். இந்தியாவும் சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு தான் நினைத் ததை நிறைவேற்றிக் கொள்ளும். இப் படி இவ்விரு நாடுகளின் அரசியலுக் கிடையில், தமிழர்களின் நலன் நலிவு நிலை காண நேரிடும். தமிழர்கள் மீண்டும் பார்வையாளர்களாக மட்டுமே உள்ளனர். ★

# மனமிருந்தால் இடமுண்டு

சோபனா



இவனைப் போன்று எத்தனை பேர் ஏஜென்சிக் காரர்களை நம்பி வெளி நாடுகளுக்குப் போய் நிம்மதியான தூக்கம் கூட இல்லாமல், சரியான சாப்பாடு இல்லாமல், ஒழுங்கான வேலை இல்லாமல் நட்டாற்றில தவிச்சு நிற்கிறார்கள். அவர்களுடைய இந்த நிலைமையை பெற்றோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

அப்பா! நான் கட்டாயம் போகத்தான்வேணுமோ? நான் இங்கையே இருந்திடுறனே! என்னைக்கட்டாயப்படுத்தாதேங்கோ! எனக்கு இந்த ஊரை விட்டுப் போகவே பிடிக்கேல்லயப்பா''. கெஞ்சிக்கேட்ட மகனது வார்த்தைகளுக்கு கொஞ்சம்கூட மதிப்புத்தர மறுத்தது தந்தையின் பிடிவாதம்.

''நீ இஞ்ச இருந்தா பெடியளோட றோட்டிலை திரிந்து ஊர் வம்பைத் தான் விலைக்கு வாங்கிக்கொண்டு வருவாய். எங்காவது கண்காணாத தேசத்தில இருந்தாத்தான் நீ திருந்துவாய். அப்பதான் உனக்குப் பொறுப்பு வரும். குடும்பத்துக்காக உழைக்க வேணும் எண்ட எண்ணம் வரும். என்ரை முடிவை மாத்தேலாது. போறதுக்கு ஆயத்தப்படுத்து. ஏஜென்சி காறனிட்ட எல்லாம் கதைச்சு காசும் கட்டியாச்சு எல்லாம் உன்ரை நன்மைக்காகத்தான் செய்யிறன்'' அப்பா முடிவாகச் சொல்லி விட்டார்.

அப்பாவின் முடிவை அவனால் மாற்ற முடியவில்லை. தந்தையின் கட்டுப்பாட்டுக்குள் வாய்ப்பூச்சியாக இருந்த அவனது அம்மாவால் கணவரது முடிவுக்குத் தடைபோட்டு எந்த மறுப்பும் சொல்ல முடியவில்லை. ஊரையும், உறவுகளையும் விட்டுப்பிரிய முடியாத மனக்குமுறலுடன் அவன் மலேசியா பயணமானான். அங்கு நிறையப் பணம் சம்பாதிக்கலாம், சொத்துக்கள் சேர்க்கலாம், மற்றவர்களைப்போல் வசதியாக வாழலாம் என்பது பலருடைய எதிர்பார்ப்பு. ஒரு வகையில் இது வெளிநாட்டு மோகம்இந்த ஆசைகள் யாவும் நிறைவேற வேண்டுமானால் நாட்டை விட்டுக் கடல்தாண்டி கண்காணாத தேசத்துக்கு உறவுகளைப் பிரிந்து தனியாகப் போகவேண்டிய நிலை. இந்த நிலமைக்குத்தான் தற்போதைய யாழ்ப்பாணம் மாறிக்கொண்டிருக்கிறது. ஒருவரைப் பார்த்து ஒருவரென தொழில்வாய்ப்புத் தேடி இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் பயணமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்காத வெறுப்புணர்வுதான் வெளிநாட்டு வாழ்க்கையை நாட வைத்துள்ளது. இதனால் கிடைக்கக்கூடிய மன உளைச்சல்களை அவர்கள் இங்கிருந்து பயணமாகி வெளிநாடுகளை அடையும்போது மட்டுமே அவர்களால் உணரமுடிகிறது.

''நான் இஞ்ச வந்து ஒரு மாசம் தான் ஆகுது. நாய்படாதபாடு பட வேண்டியிருக்கு. ஊரோட இருந்திருந்தாலும் மேசன் வேலை செய்தாவது நிம்மதியாக சம்பாதித்து உறவுகளோட சந்தோசமாக இருந்திருக்கலாம். இப்ப ஒரு நாளைக்கு கிடைக்கிற இந்த நாட்டுக் காசைக் கொண்டு சாப்பிடுறதோ? றூம் காசு குடுக்கிறதோ? போன் கதைக்கிறதோ? மிச்சம் எண்டு சொல்ல ஒண்டுமில்ல. நான் என்ன வேலை செய்யிறன் எண்டு நினைக்கிறியள்? கொளுத்துற வெய்யிலில நடுக் காட்டில பெரிய பெரிய காட்டு மரங்களை வெட்டுற வேலை. சொல்லப்போனால் ஊரிலை கூலி வேலை செய்யிறதை இளக்காரமாய் நினைக்கிற என்னைப் போன்ற ஆக்களுக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும். ஒரு நாளைக்கு உடம்பில ஒரு காயம் என்டாலும் சரி வராமல் போகாது. அந்த அளவுக்குக் கஷ்டமான வேலை. என்ன செய்யிறது? என்ன கஷ்டமெண்டாலும் செய்து தானே ஆகவேணும். இதுதான் என்ர நிலைமை''

ஏஜென்சிக் காறருக்கு ரகசியமாகப் பணம் கொடுத்து களவாக மலேசியா போனவன் காந்தன். மலேசியாவுக்குப் போக காசு மூன்று லட்சத்துக்கு மேல தாரை வார்த்ததால அதை எப்படியும் திரும்பிச் சம்பாதித்தாத்தான் ஊருக்கு வரமுடியும். இல்லாமல், இடைநடுவிலை விட்டிட்டு ஊருக்கு வந்தால் கடன் காரன்கள் சுத்தி வளைச்சுப்போடுவான்கள். கடன்காரர்களுக்கு முன்னாலை அம்மா, அப்பா கையைப் பிசைஞ்சு கொண்டு நிற்க வேண்டி வரும். கடன் சுமையினுடைய தாக்கம் கஷ்டத்தின் மத்தியில் ஊருக்கு திரும்பிவரமுடியாமல் தடைபோடும் நிலை காந்தனுக்கு. இவனைப் போன்று எத்தனை பேர் ஏஜென்சிக்காரர்களை நம்பி வெளி நாடுகளுக்குப் போய் நிம்மதியான தூக்கம் கூட இல்லாமல், சரியான சாப்பாடு இல்லாமல், ஒழுங்கான வேலை இல்லாமல் நட்டாற்றில தவிச்சு நிற்கிறார்கள். அவர்களுடைய இந்த நிலைமையை பெற்றோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களுக்குத் தேவை தங்கடை பிள்ளைகள் வெளிநாட்டில் கைநிறையச் சம்பாதிச்சு தங்களையும் குடும்பத்தையும் முன்னேற்ற வேண்டும் என்பதே. ஆனால் இந்தப் பணத்தை சம்பாதிப்பவன் சந்திக்கின்ற மன உளைச்சல்கள், தொழில் கஷ்டங்கள் என்பவையெல்லாவற்றையும் அங்கு சென்று தவிப்பவர்களால் மட்டுமே உணரமுடியும்.

கடந்த காலங்களைப் போன்று யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு மோகம் மீண்டும் களை கட்டியுள்ளது. இதற்கு மூலகாரணம், இங்கு இளைஞர்கள் எதிர்பார்க்கக்கூடிய தொழில்வாய்ப்புகள் கிடைக்காத ஏமாற்றம், குடும்பத்தாரின் கடன் சுமை, நவநாகரிகமான வாழ்க்கை மோகம் என்று இன்னும் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

எனினும் யாழ்ப்பாணத்தில் ஒரு சாதாரண வேலை செய்வதால் கிடைக்கக்கூடிய திருப்தி, சந்தோசம் வெளிநாடு சென்ற பின்னர் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஏஜென்சிக்காரர்கள் தாம் பணம் சம்பாதிப்பதற்காக ஏசி றூமில வேலை, டபிள் காசு உழைக்கலாம், இரண்டு நாள் வாரத்தில லீவு தருவாங்கள், றூம் காசு, சாப்பாட்டுக் காசு எல்லாம் இலவசம். இங்க ஒரு வருஷத்தில உழைக்கிறதை அங்கை மூன்று மாதத்தில உழைத்துப்போடலாம்; என்றெல்லாம் ஆசை வார்த்தைகளைக் கூறி வெளிநாடு போய் உழைக்கும் மனநிலை உள்ளவர்களின் மனங்களில் கவனத்தை ஏற்படுத்தி விடுவார்கள். இதை நம்பி வேலை வாய்ப்புக்களுக்காக வெளிநாட்டில் காலடி வைத்த பின்னரே அவர்களால் உண்மை நிலையை உணரமுடிகிறது. அறிமுகமில்லாத பல முகவர் நிலையங்கள், தரகர்கள் என தமது சம்பாதிப்புக்காக யாழ்ப்பாணத்து இளைஞர்களை பலிக்கடாக்களாக்கிப் பணம் தேட நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகிறார்கள். எமது எதிர்கால சந்ததியை தவறான பாதைகளுக்கு கொண்டு செல்ல நினைக்கிறார்கள். இவற்றில் இருந்து எமது இளைய தலைமுறையினரை மீட்சி பெறவைத்து அவர்களுக்கு தகுதியுடைய தொழில் வாப்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எமது சமூகத்துக்கு உண்டு.

இங்கு கிடைக்கக்கூடிய தொழில் வாய்ப்புக்களுக்கு அவசியமான பயிற்சிகளை வழங்கி அதனூடாக அவர்கள் வருமானத்தைப் பெறுவதற்கு வழிகாட்ட வேண்டிய தலையாய கடமை எமக்கு உண்டு. இதனூடாக அவர்கள் எதிர்பார்க்கின்ற தேவைகள் நிறைவேற்றப்படுமானால் தாம் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு, கடல் தாண்டி உறவுகளைப்பிரிந்து அவர்கள் பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லைத்தானே? இதனை மனதிருத்தி எமது இளைஞர் சமுதாயத்துக்கு அவர்களது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுத்துதவ நாம் மனம் கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். அது குறித்து மனம் கொள்ள முன் வருவோமா?

# நல்ல விதை விதைத்தால்...

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பது தமிழ் முதுமொழி. குழந்தைகள் அனைவரும் ஒன்றுபோல் இருப்பதில்லை. முரட்டுத்தனம், அடுத்த குழந்தையை தாக்குதல் ஆகிய குணங்கள் சில குழந்தைகளிடம் இயல்பிலேயே இருப்பது உண்டு. பாடசாலைப் பருவத்தை எட்டும் முன்பாகவே குழந்தைகளின் கூட்டுணர்வுத்திறன் வெளிப்பட்டு விடுகிறது என்பது ஆராய்ச்சியின் முடிவு.

பாடசாலை செல்லும் வயது அடையாத குழந்தைகளுக்காக முன்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. மற்றக் குழந்தைகளுடன் கலந்து பழகும் வாய்ப்பு இந்த முன்பள்ளிகள் மூலம் கிடைக்கிறது. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்பழக்கங்கள் இந்தப் பள்ளிகள் மூலம் விதைக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு அவர்களுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் பயிற்சிகூட இங்குதான் கிடைக்கிறது. சில குழந்தைகள் இயல்பிலேயே முரட்டுத்தனம் வாய்ந்தவர்களாயும், மற்றக் குழந்தைகளைத் தாக்கும் குணமுடையவர்களாயும் இருப்பார்கள். அதே நேரம் முன் பள்ளியின் செயல்பாடுகளில் ஈடுபாடு இல்லாதவர்களாயும் இருப்பது இயல்பானதுதான். இப்படிப்பட்ட குழந்தைகளின் நட்புவட்டம் சிறியதாக இருக்கும். பிற்காலத்தில் வளர்ந்தபின்னரும் கூட சமூகத்தில் மற்றவர்களிடம் நல்ல உறவை இவர்கள் ஏற்படுத்திக்கொள்வதில்லை.

சிறுவர்களின் கூட்டுணர்வு குறித்த



ஆய்வு அரிசோனா பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஆறு முன்பருவ பள்ளிகளின் வகுப்பறைகளில் இருந்து 97 குழந்தைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். குழந்தைகளின் நடத்தைகளைப் பற்றிய தகவல்களை அவர்களது ஆசிரியர்கள் வழங்கினர். ஒரு குறித்த நேரத்தில் ஒவ்வொரு குழந்தையும் எத்தனை குழந்தைகளுடன் உறவாடியது, எத்தனை முறைகள் உறவாடியது, அவர்களின் முரட்டுத்தனத்தின் அளவு, வகுப்பில் ஈடுபாடு, இவையனைத்தும் சேகரிக்கப்பட்டு அலசி ஆராயப்பட்டன.

முரட்டுத்தனம், கோப உணர்வு, வகுப்பில் ஈடுபாடு காட்டாமை ஆகிய குணங்களைக் கொண்ட குழந்தைகளுக்கு மிகக்குறைவான நண்பர்கள் மட்டுமே இருந்தனர். மாறாக மென்மை, நன்கு பழகும் குணம் இவற்றுடன் வகுப்பில் ஈடுபாடு காட்டும் குழந்தைகளின் நட்புவட்டம் பெரியதாக இருந்தது. இந்த முடிவுகள் முன்பள்ளி வயதினருக்கு மட்டுமல்லாது வளர்ந்த பிள்ளைகளுக்கும் பொருந்துவதாக அமைந்திருந்தன. இந்த முடிவுகள் ஆண் பெண் குழந்தைகளுக்குப் பொதுவாக இருந்தன.

குழந்தைகளே இப்படியென்றால் சமூகமும் அப்படித்தானே இருக்கும். விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா என்ன?

## பறக்கும் சைக்கிள் வெற்றிகரமாக பரீட்சிப்பு

முதன் முறையாக பறக்கும் சைக்கிள் ஒன்று வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறான சைக்கிள்களை டிஸ்னி படங்களில் பார்த்திருந்த போதிலும் முதன் முறை அதனை நிஜத்தில் உருவாக்கியுள்ளதுடன் டம்மி பொம்மை ஒன்றைக் கொண்டு முதற்கட்ட பரிசோதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.
எவ்வாறாயினும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் இந்த சைக்கிள் தொடர்பான மேலதிக விபரங்கள் வெளியிடப்படவில்லை.

# எழுதும்போது ஏற்படும் தவறுகளை சுட்டிக் காட்டும் பேனா


ஆங்கில எழுத்துக்களை எழுதும் போதோ அல்லது அவற்றை பயன்படுத்தி சொற்களை உருவாக்கும்போதோ ஏற்படும் தவறுகளை அதிர்ச்சியின் மூலம் சுட்டிக்காட்டும் பேனா சில மாதங்களுக்கு முன்னர் அறிமுகமாகி இருந்தது.
இந்தநிலையில் மேலும் சில தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக மற்றுமொரு பேனா உருவாக்கப்பட்டுள்ளது.
இது பொருத்தமான அதிர்ச்சிகளின் மூலம் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
லேர்ண்ஸ்ரிவ்ற் (Lernstift) எனப்படும் இப்பேனா கற்றலில் ஈடுபடும் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் போன்றவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லேர்ண்ஸ்ரிவ்ற் எனப்படும் இப்பேனாவானது கற்றலில் ஈடுபடும் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் போன்றவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்




## அறிமுகமாகியது புதிய நெக்சஸ் (Nexus) 7 ரேப்லட்

கூகுள் அறிமுகப்படுத்திய நெக்சஸ் ரேப்லட்களின் வரிசையில் தற்போது புதிய நெக்சஸ் 7 ரேப்லட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 7 அங்குல அளவு மற்றும் 1980 X 1200 பிக்செல் பகுப்பை உடைய தொடுதிரையைக் கொண்ட இந்த ரேப்லட் 1.5GHz வேகத்தில் செயலாற்றவல்ல குவால் கொம் ஸ்நாப்டிராகன் புறெசெஸ்ஸர் பிரதான நினைவகமாக 2GB RAM ஆகிவற்றைக் கொண்டுள்ளது.
மேலும் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சாதனமானது 5 மெகா பிக்சல்கள் உடைய பிரதான கமரா, காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக 1.2 மெகாபிக்சல்களை உடைய கமரா போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
இவற்றுடன் சேமிப்பு நினைவகமாக 16GB மற்றும் 32GB கொள்ளளவு தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# வாட்டர் கலர் பொற் (Water Color Bot) சித்திர வேலைப்பாடுகளுக்கு உதவும் நவீன பிரிண்டர்

கல்வி கற்கும் குழந்தைகளுக்கு பயன்படக்கூடிய வகையில் சித்திர வேலைப்பாடுகளை வாட்டர் கலர் மூலம் பிரிண்ட் செய்யக்கூடிய புதிய பிரிண்டர் உருவாக்கப்பட்டுள்ளது.
மரப்பலகையினால் ஆன பிரேம்களால் உருவாக்கப்பட்டுள்ள வாட்டர் கலர் பொற் எனும் இந்தப் பிரிண்டர் மிகவும் எளிமையான தொழில்நுட்பத்தைக் கொண்ட போதிலும் கணினிகளின் உதவியுடன் வரையப்படும் ஓவியங்களை துல்லியமான முறையில் பிரிண்ட் செய்து தரவல்லது.
எவில் மாட் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் எனும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த சாதனத்தில் இணைக்கப்பட்டுள்ள தூரிகை தானாகவே உலரக்கூடிய வகையிலும் பொருத்தமான வர்ணத்தை தெரிந்தெடுக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



மரப்பலகையாலான பிரேம்களால் உருவாக்கப்பட்டுள்ள வாட்டர் கலர் பொற் என்ற இப் பிரிண்டர் மிகவும் எளிமையான தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள போதிலும் கணினிகளின் உதவியு டன் வரையப்படும் ஓவியங்களை துல்லியமான முறையில் பிரிண்ட் செய்து தரவல்லது.



## தொழில்நுட்ப உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்தவுள்ள அடுத்தகட்ட பயனர் இடைமுகம்

அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக நாளுக்குநாள் பல்வேறு புதிய தொழில்நுட்ப சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
இவற்றின் வரிசையில் தற்போது கணினிகளில் பயன் படுத்தப்படும் பயனர் இடைமுகத்தில் ஜபிறைற் என்ற புதிய தொழில்நுட்பம் உட்புகுத் தப்பட்டுள்ளது. இதுவரை பட உருக்களை (Icon) கொண்டும், தொடுதிரை தொழில்நுட்பத்தைக் கொண்டும் காணப்பட்ட பயனர் இடைமுகமானது தற்போது பயனர்கள் சிந்திப்பதை விசேட சென்சார்கள் மூலம் அறிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல் செயற்படக்கூடியதாகக் காணப்படும் இப்புதிய பயனர் இடைமுகமானது விரைவில் வரவேற் பைப் பெறவுள்ளது.

# விண்டோஸிற்காக கூகுள் அறிமுகப்படுத்தும் குரோம் அப் நிறுவி (Chrome App Launcher)

கூகுள் நிறுவனத்தால் வழங்கப்பட்டுவரும் பல்வேறு சேவைகளையும் விண்டோஸ் கணினிகள் மூலம் இலகுவாக பயன்படுத்துவற்கு Google Chrome App Launcher கூகுள் குரோம் அப் நிறுவி எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
முற்றிலும் இலவசமாக தரப்படும் இம்மென்பொருளானது விண்டோஸ் 7, விண்டோஸ் 8 இயங்குதளங்களில் நிறுவிப் பயன்படுத்தக்கூடியவாறு காணப்படுகின்றது.
இவ்வாறு நிறுவிய பின்னர் அதிகளவில் பயன்படுத்தப்படும் கூகுள் சேவைகளுக்கான பட உருக்களை டாக்ஸ் பாரில் அல்லது டெக்ஸ்டொப்பில் வைத்து இலகுவாகவும், விரைவாக வும் பயன்படுத்த முடியும்.
இந்த மென்பொருளானது குரோம் கணினிகளில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வீட்டில் திருடர்கள் தேடுதல் வேட்டை கைக்குக் கிட்டவில்லை பணம்

### கிழித்தெறிந்தனர் வங்கிப் புத்தகத்தை புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் சம்பவம்

முள்ளியவளை, ஜூலை 26
வீடொன்றில் பணத்தைத் தேடிய திருடர்கள் அது அங்கு இல்லாததால் சுவாமி அறையில் வைக்கப்பட்டிருந்த வங்கிப் புத்தகத்தை கிழித்தெறிந்துவிட்டுச் சென்ற சம்பவம் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.


கோம்பாவிலைச் சேர்ந்த ஒருவர் வங்கியொன்றுக்குச் சென்று தமது கணக்கிலிருந்து 6 லட்சம் ரூபாவை எடுத்துக்கொண்டு வீடு சென்றுள்ளார்.

வீட்டில் மனைவி மட்டுமே இருந்ததால் பாதுகாப்புக் கருதி பணத்தை எடுத்துச் சென்று தமது வீட்டுக்கு அருகிலுள்ள ஆலயமொன்றில் இருந்த தமது நண்பரிடம் கொடுத்துள்ளார். அந்த ஆலயத்தில் திருப்பணி வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் இவரும் அதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பொருட்டு அங்கேயே தங்கிவிட்டார்.

இதேவேளை வீட்டில் இருந்த அவரது மனைவியும் ஏதோ வேலை காரணமாக வெளியே சென்றுவிட்டார்.

வங்கியில் குறிப்பிட்ட நபர் பணத்தை எடுத்துச் சென்றதை அவதானித்த சிலர் இவரைப் பின்தொடர்ந்து வந்து வீட்டைக் கண்காணித்துள்ளனர். வீட்டில் எவரும் இல்லாததை அறிந்து கொண்ட அவர்கள் வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கியதுடன் வீடு முழுவதும் சல்லடை போட்டுப் பணத்தைத் தேடியுள்ளனர். ஆனால் அவர்கள் கைகளில் எதுவுமே கிட்டவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த திருடர்கள் சுவாமியறையின் படத்தட்டில் வைக்கப்பட்டிருந்த வங்கிப் புத்தகத்தை எடுத்துத் தாறுமாறாக கிழித்தெறிந்து விட்டுச் சென்றுள்ளனர். (க-433)



புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை, புதுக்குடியிருப்பு நகரில் முன்னர் அமைந்திருந்த இடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. (க-6)

## வீதியின் புனரமைப்பு

முல்லைத்தீவு யோகபுரத்திலுள்ள குஞ்சுக்குளம் கிராமத்தின் பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள குஞ்சுக்குளம் கிராமத்தின் பிரதான வீதி பல ஆண்டுகளாகப் புனரமைப்புப்பணிகள் இடம்பெறாத நிலையில் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைத் தினமும் பயன்படுத்திவரும் கிராம மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-6)



## மரங்களை கடத்தியவர்கள் பொலிஸாரிடம் மாட்டினர்

மரங்களைக் கடத்திச் சென்றவர்களை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

சிறிய வாகனம் ஒன்றில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மரத்துண்டுகளை அனுமதிபெறாது யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல முற்பட்டவர்களை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நெடுங்கேணிப் பகுதியிலிருந்து சிறிய வாகனம் ஒன்றில் அரிந்து எடுக்கப்பட்ட 63 மரத்துண்டுகள் ஏற்றப்பட்டு அவற்றின் மீது மறைப்பாக நெல் மற்றும் தளபாடப் பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் செல்ல முற்பட்டவேளையிலேயே ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.பி. தசநாயக்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது மரங்களைக் கடத்தியவர்கள் பிடிபட்டனர். இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் பொருட்டு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.தசநாயக்கா தெரிவித்தார். (க-500)



### பற்றைகள் மூடிய நிலையில்

# ஸ்கந்தபுரம் பொது மயானம்



கிளிநொச்சி, ஜூலை 26
கிளிநொச்சி அக்கராயனில் உள்ள ஸ்கந்தபுரம் கிராம மக்களின் பாவனையிலுள்ள மயானம் பற்றைகள் வளர்ந்து மோசமான நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபையினரே மயானத்தின் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ள நிலையில் இந்த மயானம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை- கிராம மக்கள் மயானத்தின் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளத்தக்க வகையில் சிரமதானப் பணியொன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டையாவது செய்து தருமாறு மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மயானத்தில் பூதவுடல்களை எரிக்கும் இடம் தவிர்ந்த ஏனைய இடங்கள் பற்றைகள் மற்றும் செடி, கொடிகள் நிறைந்து காணப்படுகின்றன. மேலும் இறந்தவர்களின் உடல்களைப் புதைத்த இடத்தில் அமைக்கப்பட்ட கல்லறைகளும் பற்றைகளால் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை அவற்றுடன் தொடர்புடைய மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## ஆலயத்தில் சங்கிலி அபகரிப்பு

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரர் ஆலய வேட்டைத் திருவிழாவின் போது பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

அர்ச்சனை செய்யும் வேளையில் மக்களோடு மக்களாக நின்ற பெண்ணொருவர் தனது கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அறுக்கும் போது தான் அவரை எட்டிப்பிடித்ததாகவும் ஆனால் அவர் விடுவித்துக் கொண்டு ஓடிவிட்டார் எனவும் சங்கிலியைப் பறிகொடுத்தவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக அறிந்ததும் பொலிஸார் தேடுதலை மேற்கொண்டபோதும் பயன் கிடைக்கவில்லை.

ஆலயங்களுக்கு நகைகளை அணிந்து செல்ல வேண்டாம் எனப் பொலிஸார் அறிவுறுத்திய போதிலும் அதனை மக்கள் அலட்சியம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## ஒட்டுசுட்டானில் முக்கிய கூட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 26
ஒட்டுசுட்டானில் விவசாயத்துக்குப் பயன்படும் இரசாயனப் பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கான முக்கிய கூட்டமொன்று கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேந்திரன் தலைமை வகித்தார்.

இதில் விவசாய இரசாயனப் பொருள்களை விற்பனை செய்யும் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

விவசாயப் போதனாசிரியர்கள், விவசாய இரசாயனங்களை விற்பனை செய்வோர், விவசாயிகள் எனப் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (க-500)

## நிரந்தர வீடுகள் கோருகின்றனர் சிவபுரம் பகுதி மக்கள்

கிளிநொச்சி, ஜூலை 26
தமக்கும் நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்க அரச அதிகாரிகள் உதவ வேண்டும் என்று, நீண்ட காலமாக தறப்பாள், தகரத்தால் அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகைகளில் வசித்து வரும் பரந்தன் சிவபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.


இந்தக் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் தற்காலிகக் கொட்டகைகளில் நீண்டகாலமாக அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றன.

இவர்கள் தமக்கும் அரசினால் வழங்கப்பட்டு வரும் நிரந்தர வீட்டுத் திட்டங்களை வழங்குமாறு ஏற்கனவே பலரிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் இவர்களுக்கு சொந்தக் காணி இல்லை என்பதைக் காரணம் காட்டி நிரந்தர வீட்டுத் திட்டங்களில் இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் இந்தக் கிராமத்திலிருந்து சிவில் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்து வருபவர்களின் குடும்பங்களுக்கு இராணுவத்தினரின் முயற்சியால் நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுகட்டுமாணப்பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

இதனைத் தெரிந்துகொண்ட ஏனைய கிராம மக்கள் தமக்கும் நிரந்தர வீட்டுத் திட்டங்களை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (க-426)



## பழம் வாங்கினால் குளவி கொட்டும்

வடமராட்சி, ஜூலை 26

நெல்லியடி பொதுச் சந்தையில் உள்ள பழக்கடைகளில் பழங்கள் வாங்கச் செல்வோரை அங்கு மறைந்திருக்கும் குளவிகள் கொட்டித் தீர்த்து விடுகின்றன.

கடந்த இரு தினங்களில் பழங்கள் வாங்கச் சென்ற மூவருக்கு குளவிகள் கொட் டியதால் மூவரும் ஓட்டம் பிடித்த சம்பவம் இடம்பெற் றுள்ளது.

பழக்கடையில் உள்ள மறைவிடங்களில் கூடு கட்டி இருக்கும் குளவிகள் பழங்கள் வாங்க வருவோரை இவ்வாறு அடிக்கடி கொட்டி வேதனைக் குள்ளாக்கி வருவதாக குளவிகளால் கடியுண்டோர் தெரிவித்தனர்.

சந்தைக் கட்டடத் தொகுதியை துப்புரவாக வைத்திருந்தால் இத்தகைய விளைவுகள் தமக்கு ஏற்படாதென குளவிகள் கொட்டியதால் பாதிக்கப் பட்டோர் தெரிவித்தனர். (ஐ-8)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

மானிப்பாய் சிற்றி அரிமாக் கழக இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் சனசமூக நிலையத்தில் கழகத் தலைவர் சி.நாகையா தலைமையில் நடைபெறவுள்ளது. (வ-14)

# தெற்கு பிரதேச சபைகளின் செயற்பாடுகளை சொல்லில் இலகுவாகக் கூறிவிட முடியாது

### மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

> “அகலவத்தை, யக்கலமுல, பசறை, பிரதேச சபைகளின் முன் மாதிரியான சகல செயற் பாடுகளையும் ஆராய்ந்தபோது மெய்சிலிர்க்க வைத்தது.

யாழ்ப்பாணம், ஜூலை 26

தெற்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் உட்கட்டுமானம் பொதுமக்கள் சேவை மற்றும் வருமானம் அதிகரிப்பு செயற்பாடுகளை சொல்லில் இலகுவாக கூறிவிட முடியாது என்று மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

வடக்கில் இருந்து தெற்குக்கான அனுபவப் பகிர்வு சுற்றுலாவில் கலந்து கொண்டே மகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிர்வாக நடவடிக்கைகள் வரவு-செலவுத் திட்ட செயற்பாடுகள், கூட்ட குறிப்பு நடைமுறைகளின் ஒழுங்கு விதிகள்தெற்கில் மிக வினைத்திறனாக இருக்கின்றன.

வடக்கில் இருந்து தெற்கிற்கான அனுபவ பகிர்வு சுற்றுலா பிரதேச சபையின் தவிசாளர், உப-தவிசாளர், உறுப்பினர்களுக்கு இது நல்ல பாடமாக, அனுபவமாக இருக்கும்.

பல லட்சம் ரூபா செல வில் முன்னெடுக்கப்பட்டது இந்தத் திட்டம். முக்கியமாக சபைகளின் தவிசாளர், உறுப் பினர்களுடன் சபைகளின் செயலாளர்களும் கலந்து கொண்டிருக்க வேண்டும்.

இதனைவிட உள்ளூராட்சியில் முக்கியம் வாய்ந்த அலுவலர்களும் கலந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் 13 பிரதேச சபைகள் உள்ள போதும் ஒரு சபையின் செயலாளர் மட்டுமே தவிசாளர், உப-தவிசாளருடன் கலந்து பயன்மிக்க நிகழ்ச்சிகளை வரையறை செய்ததைக் காணக் கூடியதாக இருந்தது.


அகலவத்தை, யக்கலமுல, பசறை, பிரதேச சபைகளின் முன்மாதிரியான சகல செயற்பாடுகளையும் ஆராய்ந்த போது மெய்சிலிர்க்க வைத்தது.

அந்தச் சபைகளின் நிர்வாக முறை உட்கட்டுமானம் என்பன ஒரு நாடாளுமன்றம் இயங்குவது போன்று இருந்தது.

நுவரெலியா மாநகர சபையின் பழைய கட்டடத் தொகுதியில் வைத்து எம்மை வரவேற்ற மாநகர பிரதி முதல்வர் மாநகர சபையின் சகலவருமான மூலங்கள், ஹோட்டல் முகாமைத்துவ வருமானம், உட்கட்டுமானம், திண்மக்கழிவு, உல்லாச பயணத்துறை வருமானம் என 32 துறைகள் குறித்து துல்லியமாக விளக் கினார்.

மேலும் 120 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும். நுவரெலியா மாந கர சபைக்கு மூன்று மாடி நவீன கட்டடத் தொகுதிகளை காண்பித்து திறப்பு விழாவில் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.-என்றார். (எ-50)

## பயிற்சிப் பட்டறை



யாழ். சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் அண்மையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சங்கீத பாட ஆசிரியர்கள் மற்றும் சமய பாட ஆசிரியர்களுக்கான பண்ணிசைப் பயிற்சிப்பட்டறை பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் நடைபெற்றது. (வ-14)

# இலகு கடன் திட்டம்

மன்னார், ஜூலை 26

'எகலப் லங்கா' நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் பெண் தலைமைக் குடும்பங்கள், மாதர் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் தாய்மார்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு இலகு கடன் வழங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மன்னார் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நடுக்குடா, பேசாலை, துள்ளுகுடியிருப்பு போன்ற இடங்களில் உள்ள 100 குடும்பங்கள் தெரிவு செய்யப் பட்டு 2 ஆம் கட்டத்தில் இலகு கடன் வழங்கப்படவுள்ளது.

முருங்கைக்காய் சேகரித்து விற்றல், பனங்கிழங்கு, ஒடியல், பணாட்டு விற்றல், பனை மட்டை, கிடுகு, சிறு வியாபாரம், ஆடைகள் தைத்து விற்றல், கோழிப் பண்ணை, ஆடு வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், சிற்றுண்டி வியாபாரம், சிறிய வலைகள் மூலம் மீன்பிடித்து விற்றல், குடிசைக் கைத்தொழில் போன்ற வாழ்வாதாரத் தொழில்களுக்கு இந்தக் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

ஒரு வருடத்தில் கடனை செலுத்துவதன் மூலம் குறித்த பயனாளி அடுத்த வருடத்தில் 40, 000 ரூபா கடனைப் பெறமுடியும் என 'எகலப்' அறிவித்துள்ளது. (ஐ)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், வெளி யூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மிதுனம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். வாழ்க்கைத்துணையின் ஒத்து ழைப்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**கடகம்:** வேலைச்சுமையால் சோர்வாகக் காணப்படுவீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்க ளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகளை ஆலோசித்து முடிவுகள் எடுப்பது நல்லது.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரிய மானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை பெருக்குவீர்கள்.

**நாளை**

ஆடி-11 சனிக்கிழமை 27.07.2013
திதி: பஞ்சமி பி.ப. 04.25 வரை
நட்சத்திரம்: உத்தராட்டாதி 04.02 வரை
சுபநேரம்: 03.02 - 04.32 வரை
இராகுகாலம்: 09.02 - 10.32 வரை

**துலாம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**விருச்சிகம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்ளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து ச்ந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**கும்பம்:** பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.

**மீனம்:** மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். வியாபாரத்தில் புதிய முடிவுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 3 | | 2 | | |
| | 1 | 2 | 5 | 4 | | | 6 | 8 |
| | 5 | | | 8 | | | | |
| 4 | 2 | | | | | 7 | | 3 |
| 5 | 8 | | | | | | 9 | 4 |
| 9 | | 3 | | | 4 | | 2 | 5 |
| | | | | 7 | | | 3 | |
| 2 | 4 | | | 9 | 1 | 8 | 7 | |
| | | 9 | | 6 | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 2 | 1 | 8 | 5 | 9 | 6 |
| 8 | 5 | 1 | 3 | 6 | 9 | 4 | 2 | 7 |
| 9 | 2 | 6 | 7 | 5 | 4 | 1 | 8 | 3 |
| 3 | 9 | 7 | 5 | 2 | 1 | 8 | 6 | 4 |
| 6 | 8 | 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 4 | 2 | 6 | 8 | 3 | 7 | 5 | 9 |
| 7 | 6 | 8 | 1 | 3 | 5 | 9 | 4 | 2 |
| 2 | 1 | 9 | 8 | 4 | 6 | 3 | 7 | 5 |
| 5 | 3 | 4 | 9 | 7 | 2 | 6 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, ஜூலை 26

''பட்டப்பின் கல்வி டிப்ளோமா'' முழு நேர பயிற்சி நெறிக்கு பட்டதாரி ஆசிரி யர்களிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரி வுக்கு ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும். பட்டதாரி ஆசிரியர் களுக் கான தொழில்சார் பயிற்சி நெறியான பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி, யாழ்ப் பாணம், கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களில் நடைபெறவுள்ளன. பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்று ஒருவருட சேவையை பூர்த்தி செய்த வர்கள் மற்றும் சேவையில் இருக்கும் போது பட்டம் பெற்று பட்டதாரி ஆசிரியராக உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட வர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். ஒரு வருடம் முழுச் சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறையில் பயிற்சியைத் தொடரலாம்.

போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட உயர் புள்ளி அடிப் படையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு தெரிவுகள் நடைபெற வுள்ளன.

(வ-11)

# நல்லூர் நடமாடும் சேவையில் 300 க்கு அதிகமானோர் பங்கேற்பு



யாழ்ப்பாணம், ஜூலை 26

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/97, ஜே/98, ஜே/100, ஜே/102, ஜே/103, ஜே/104, ஜே/105, ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114, ஜே/122, கிராம அலுவலர் பிரிவுகளுக்கான நடமாடும் சேவை வியாழக்கிழமை திருநெல்வேலி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந் தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் அடையாள அட் டைக்கான விண்ணப்பம், காலம் தாழ்த்திய பிறப்பு, இறப்பு பதிவுகள், திருமணப் பதிவு கள் என்பன இடம்பெற்றன. இந்தச் சேவை யில் 300 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

(ந-7)

# நல்லூரில் வாழும் கலைப் பயிற்சி

வாழும் கலை அமைப்பின் ஏற்பாட்டில் வாழ்க்கையை வளமாக்கும் வாழும் கலைப் பயிற்சியின் அடிப்படைப் பயிற்சியின் அறிமுக உரையும் பதிவு செய் தலும் இன்றும் நாளையும் மாலை 6 மணிக் கும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி முதல் ஒரு மணி வரை யும் நல்லூர் துர்க்கா மணி மண்டத்தில் பயிற்சி வகுப்புக்க ளும் இடம்பெறும்.

## தவறிவிட்டது

கனகலிங்கம் உதயராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (N.I.C- 871751510v), சாரதி அனுமதிப்பத்திரம், வாகனகாப்புறுதிப் பத்திரம் என்பன குரும்பசிட்டிக்கும் குப்பிளான் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது.

தொடர்பு:- 077 9297313

## மரண அறிவித்தல்

### சின்னம்மா குமாரசாமி



சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா குமாரசாமி நேற்றுமுன்தினம் (24.07.2013) புதன்கிழமை கொழும் பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா- காசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்) , சிவபாதம், தேவயோகினி, சிவலோகநாயகி, செல்வேந்திரன், பரிமளா காந்தி, சுகிதா ஆகியோரின் அன்புத் தாயும் நந்தினி, பூங்கோதை, பரம்சோதி, வைத்தீஸ்வரன், சறோஜினிதேவி, கேதீஸ்வரன், வயன், கோஷலா ஆகியோரின் அன்பு மாமியும் கனகேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும், நடராசா, (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), இராசதுரை ஞானாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்து னியும் எவில்வேள், அருள்வேள் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் தக்ஷாயினி, தக்ஷானந், சுபானந், கஜானந், சுபாசினி, ஷாமினி, நிக்ஷன், நிஷா, பகீரதன், ஜீவகன், அகிலா, ஜெகன், ஆர்த்திகா, கௌரீசன், பிரதீசன், சுஜன், அரவிந், கௌதமி, கோகுலன், ஆரணி, யஸ்மின், வயற், ரியானா, திருவேள், வேவினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்ஷியா, அமிர்தா, கவின், சோறா, கறீம், அயிம் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு கல்கிசை மஹிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 28.07.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(29937)

தகவல்: சுப்பிரமணியம் (மகன்)
0771263760

## மரண அறிவித்தல்

### செல்லையா இராசரத்தினம்



இருபாலையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசரத்தினம் நேற்று முன்தினம் (24. 07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் உருக்குமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல் லையா -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், கிருஸ்ணர்-நீலாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதம், காலஞ்சென்ற கமலாதேவி, இலங் கைநாதன், காலஞ்சென்ற வைத்தியநாதன்(முன்னாள் கிராம உத்தி யோகத்தர், சுன்னாகம் தெற்கு, J.P), ஞானதேவி(கனடா), ஜெய நாதன்(யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்), யோகாதேவி (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.07.2013) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு மு.ப. 10.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை.

தகவல்:
குடும்பத்தினர்.

# மெய்வன்மை போட்டி

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார் களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதி னம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடை பெறும் இந்தப் போட்டி களுக்கு முதன்மை விருந்தினராக தென் மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவ ரத்தினம் கலந்துகொள் வார். (வ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி திருநாவுக்கரசு



இல. 60, சேர்பொன் இராம நாதன் வீதி,யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் , 95, புதுசெட் டித்தெரு, கொழும்பு- 13, ஐ வதி விடமாகவும் கொண்ட திரு மதி இந்திராணி திருநாவுக்கரசு நேற்று (25.07.2013) வியா ழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை -இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான அப்புத்துரை- அன் னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின்(மீன் பிடி இலாக பரிசோதகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற றோசம்மா, இராசமலர் மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திர மோகன்(கனடா), சுமதி (கொழும்பு), காலஞ்சென்ற சுயந்தி(இலங்கை வங்கி, திருநெல்வேலி), வாசுகி (கனடா), குகன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜலயா, காலஞ்சென்ற முருகதாஸ், கணேசமூர்த்தி (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), செல்வநாயகம், விஜயந்தி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு 95, புதுசெட்டி தெரு, கொழும்பு-13 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

95, புதுச் செட்டித்தெரு,
கொழும்பு-13.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஈர விழிகளுடன் மூன்றாண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04-12-1992
மறைவு
26-07-2010

செல்வி
### சேவியர் சுபாஜனா

அன்பு மகளே! சுபாஜ்
மூன்று இமைப்பொழுது
-சென்றுவிட்டதே அம்மா
உன்னை நினைந்து கண்ணீர் விடாத
-நாள்களே இல்லை
மகளே நீ எழுந்து வரமாட்டாயா?
எமக்கு ஆறுதல் தரமாட்டாயா?
ஈரவிழிகளுடன் ஏங்கித் தவிக்கும்



குடும்பத்தினர்.

இல.07,
முதலாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

(கதிசன் ஹாட்வெயர்),
சின்னக்கடை, குருநகர், யாழ்ப்பாணம்.

(20837) (2-7-6)

## மரண அறிவித்தல்

### நடராஜா தேவராஜா



கொட்டடி, கற்குளத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தேவராஜா நேற்று (25.07.2013) வியாழக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் தங்க மணி தம்பதியரின் அன்பு மகனும், வனஜா, கமலேந் திரன் (உருளோஸ்), விஜயன், லதாநாயகி ஆகியோ ரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தர்மகுல சிங்கம் (பிள்ளையார்) மற்றும் சாந்தினிதேவி, பாகேசன், சந்திரமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15, கற்குளலேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
T.P- 021 222 6161

(29933)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## நீங்கா நினைவலைகள்

90ஆம் நாள் | 5ஆம் ஆண்டு





**அன் செபஸ்ரியான் அன்ரன் கிறேஷியன்**

மலர்வு 09.05.1986 உதிர்வு 28.04.2013

**அன் செபஸ்ரியான் டிலக்சனா**

தோற்றம் 24.12.1993 மறைவு 17.04.2008

உங்கள் நினைவுகள் என்றும் நிலையானவை
உங்களை மறப்பதென்பது கணமேனும் நடப்பதில்லை
உங்கள் பிரிவை என்றென்றும் நினைவு கூர்ந்து
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்.

மயிலிட்டி, 6ஆம் வட்டாரம்.

மந்தியாஸ் அன் செபஸ்ரியான் (தந்தை), டீன்ஸ், டினேஸ், டிலக்சன் (சகோதரர்கள்).

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21.01.1946

**திருமதி பத்மநாதன் பத்மராணி**

மறைவு 19.07.2011

திதி: சாங்கடகர சதுர்த்தி




ஆண்டுகள் இரண்டு சென்றதே அம்மா
ஆனாலும் எங்கள் ஈர விழிகள் காயவில்லையே
கல்வி தந்து உங்கள் செல்வமெல்லாம்
தந்து நாம் வல்லவராய் நல்லவராய்
வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் அன்பான திருமுகத்தை
என்று நாம் காண்போம் தாயே!

உசன், மிருசுவில்.

**குடும்பத்தினர்.**

## 45ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 31.12.1960



உதிர்வு 12.06.2013

**அமரர் கந்தசாமி லோகேஸ்வரன்**

முடமாவழயைப் பிறப்பிடமாகவும் கொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி லோகேஸ்வரன் கடந்த 12.06.2013 புதன்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி – திரவியம் தம்பதியரின் அன்பு மகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார். சபின், ஆர்த்திகா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பவளகாந்தன் (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (சுவிஸ்), லோகேஸ்வரி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நடனராசா (யாழ்ப்பாணம்), மல்லிகாதேவி (கொலண்ட்), காலஞ்சென்ற பொன்மலர் (யாழ்ப்பாணம்), வரதலட்சுமி (பிரான்ஸ்), குணலட்சுமி (ஜேர்மனி), விஜியலட்சுமி (கொலண்ட்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, சிலோன்மணி, சிவனேசன், ராஜேஸ்வரி, தியாகராசா, செல்வநாயகம், பிறேம்குமார், ஜெயகுமார், அருண்பிறேமாதேவி கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அவரின் சகோதரியின் இல்லத்தில் இன்று (26.07.2013) வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளதால் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**குடும்பத்தினர்.**

(31145) (45.6.3)

# போலி நாணயத்தாள்களுடன் சிக்கினர் ஆசாமிகள் நால்வர்



யாழ்ப்பாணம், ஜூலை 26

போலி நாணயத்தாள்களை அச்சிட்டமை மற்றும் வங்கியில் கொடுத்து மாற்றிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேரை வவுனியாவிலிருந்து வந்த விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

அவர்கள் வங்கி உத்தியோகத்தர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று தெரிவிக்கப் படுகிறது.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

கைதானவர்களில் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த ஒருவரும் அடங்கு கின்றார்.

அவர்களிடம் இருந்து அச்சிடப்பட்ட போலி நாணயத் தாள்கள் அவற்றை அச்சிடுவதற்கான தாள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அச்சிடப்பட்ட போலி நாணயத்தாள்களைக் கொடுத்து மாற்றமுற்பட்டபோது ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரது தகவலின் படியே ஏனையோரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் பிரதான சந்தேகநபர் அச்சு இயந்திரங்களை வைத்திருந்தார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் பொலிஸார் மேலதிக தகவல்களை வெளியிடவில்லை. (ஐ-4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

**முருகர் இராசையா**

(ஓய்வு பெற்ற தட்டெழுத்தாளர்)



காளி கோயிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் இராசையா கடந்த (19.07.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா-பூமணியின் அன்புக் கணவரும், பவானி (பிரான்ஸ்), தயாளினி, சாமினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்குமார் (பிரான்ஸ்), அரிமருகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, மரக்காலை இரத்தினம் மற்றும் இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருந்துஷன், அஸ்வினி, அஷ்விதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காளி கோயிலடி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
T.P- 003 365 215 2959
077 955 7411

தகவல்: குடும்பத்தினர்.

(c/10591)(3.6.11)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்லையா சண்முகநாதன்**
(முன்னைநாள் தபால் ஊழியர் – மானிப்பாய்)



தோற்றம் 29.07.1929

மறைவு 19.07.2011

திதி: தேய்பிறை சங்கடகர சதுர்த்தி

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தீரே!
கூறறிவு கொண்டவராய் எமையென்றும் வளர்த்தீரே!
பாரினிலே பண்புயர் தெய்வமாய் திகழ்ந்தீரே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோம் அப்பா!

மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

**பிள்ளைகள்.**

(29871) (3.5.6)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் **வேலுப்பிள்ளை குணரத்தினம்**

மண்ணில் 24.12.1936 | விண்ணில் 03.06.2013

அன்பின் உறைவிடமாய் அகிலத்தில் எமைக் காத்தீர்!
ஆற்றல் பெற்றிடவே வழிவகைகள் செய்து வைத்தீர்!
சொல்லாச் செய்தியினைச் சொல்லிட வாரீரோ!
சோகம் தாளாமல் துடிக்கின்றோம் நாம் இங்கு.

கடந்த 03.06.2013 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.07.2013) வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

சோலையம்மன் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு.

**குடும்பத்தினர்.**

(c/ 2724) (45.6.3)

## பாடசாலை மாணவருக்கு அடுத்த வருடம் காப்புறுதி

கொழும்பு,ஜூலை 26
நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் அடுத்த வருடம் முதல் காப்புறுதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான சகல திட்டங்களும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன என்று கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று சீதாஎலிய பகுதியில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், ஆசிரியர் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் பத்து மாணவர்கள் காயமடைந்தமை, தேசிய அருங்காட்சியகத்தின் படிக்கட்டு உடைந்து வீழ்ந்ததில் மாணவர்கள் சிலர் காயமடைந்தமை



போன்ற சம்பவங்களை ஆராய்ந்த பின்னரே மாணவர்களை காப்புறுதி செய்யும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதுவரை உரிய வேலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் புதிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தமிழருக்கு கூடிய உரிமையை வழங்க நடவடிக்கை எடுங்கள்

### சோமவன்ச அமரசிங்க வலியுறுத்து



கொழும்பு,ஜூலை 26
இந்தியாவுக்கு உரிய பாடம் புகட்ட வேண்டுமாயின் இந்தியா வலியுறுத்துவதை விட ஒருபடி மேல் சென்று தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அப்போது சர்ச்சைக்குரிய இலங்கை - இந்திய ஒப்பந்தமும் தானாக ரத்தாகி விடும் .

இவ்வாறு ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினை தீர்வுக்கான அணுகு முறை முன்மொழிவுகள் என்ற தலைப்பில் ஜே.வி.பி. வெளியிட்ட நூலின் அங்குரார்ப்பண நிகழ்வு புதன்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் அரசமைப்பு சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான, இனவாத அரசமைப்பாகும். இதனை தற்போதைய அரசு முழு உலகத்துக்கும் வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் பேசும்போது மறக்க முடியாத ஒரு விடயம் தான் கறுப்பு ஜூலை. இந்தக் கரும் புள்ளியை அளிக்க வரலாற்றில் வந்த எந்தவொரு அரசியல் தலைவரும் சாதாரண முயற்சியைக் கூட முன்னெடுக்கவில்லை.

ஆனால்,இனப் பிரச்சினைக்கான தீர்வை நாம்பலமுறை வலியுறுத்திய போதிலும் அதற்கு உரிய வகையில் ஆளும் தரப்புகள் செவிசாய்க்கவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படப்போகும் ஆபத்தை பலமுறை எடுத்துரைத்தும் பயனில்லாத நிலையே காணப் பட்டது.

> தேசியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டு தமிழர்களுக்கு கூடிய உரிமைகளை வழங்க வேண்டும்.

தற்போது தமிழர்களுக்கு என்ன பிரச்சினை என்று சில சிங்கள இனவாதிகள் கேட்கின்றனர். அரசமைப்பே இனவாதம் கொண்டது என்பதை முழு உலகமும் புரிந்து கொண்டுள்ளது.

தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். அதற்கு ஆதரவாகவும் அரசுக்குள் இருந்து குரல் எழும்புகின்றது.

மாகாண சபை முறைமை முழுமையாக ஒழிக்கப்பட்டு அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது கொடுக்கல்- வாங்கல் அல்ல. உரிய தீர்வை வழங்காமையினாலேயே இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையிடுகின்றன. எனவே தமிழ் மக்களை குறை கூறுவது முறையில்ல. இலங்கை - இந்திய ஒப்பந்தம் உட்பட இந்தியாவின் தலையீடுகளையும் அழுத்தங்களையும் வென்றெடுக்க தேசியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டு தமிழர்களுக்கு கூடிய உரிமைகளை வழங்க வேண்டும்.-என்றார். (ச)

## கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையில் 'நகர வளாகம்'

### இலங்கை அரசு சீனாவுடன் உடன்படிக்கை

கொழும்பு,ஜூலை 26
கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் உள்ள காணியில் 1.4 பில்லியன் டொலர் செலவில் 'நகர வளாகம்' ஒன்றை உருவாக்குவதற்கான உடன்படிக்கையில் இலங்கை அரசு சீன நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

கொழும்பு தெற்கு புதிய துறைமுகத்துக்கு அடுத்ததாக உள்ள 230 ஹெக்ரெயர் நிலப்பரப்பரப்பை துறைமுக அதிகாரசபை பெற்றுக்கொண்டு அதில் சீன நிறுவனத்துக்கு முதலீட்டு வாய்ப்பு வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரின் கரையோரத்தை நவீனமயப்படுத்தும் விதமாக சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனம் இந்த துறைமுக நகரை உருவாக்க ஒப்புக்கொண்டுள்ளது என்று துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரியாத் பண்டு விக்ரம தெரிவித்தார்.

> புதிய துறைமுக நகரத்தில் 22 மாடிகளைக் கொண்ட தலைமைப் பணியகங்கள், விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களை உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளன.

இது தொடர்பில் சீன நிறுவனத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். புதிய துறைமுக நகரத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிலத்தை மீள உரிமையாக்கும் நடவடிக்கை 39 மாதங்களுக்குள் நிறைவடைந்து விடும் என்று அவர் கூறினார்.

இந்தப் புதிய துறைமுக நகரத்தில் 22 மாடிகளைக் கொண்ட தலைமைப் பணியகங்கள், விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

## மலையகத்தில் தொடர்ந்து மழை



நுவரெலியா,ஜூலை26
மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்கள் பல்வேறு சௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மலையகத்தில் பெய்து வரும் மழையால் பாதைகள் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றன. மஸ்கெலியா , நல்ல தண்ணீர் பாதை கீழ் இறங்கி பெரும் குழி உருவாகியுள்ளது.

இந்தக் குழி ஆரம்பத்தில் சிறியதாகக் காணப்பட்ட போதும் தொடர்ந்து மழை பெய்வதால் தொடர்ந்தும் பாதை உடைந்து குழியின் அளவு விரிவடைகிறது என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் இரவில் அதிக பனி மூட்டம் காணப்படுவதுடன், மழையும் பெய்கின்றது. இந்தநிலையில் நல்லத்தண்ணீர் பாதையூடாகப் பயணம் செய்யும்போது அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் பாதையின் புனரமைப்புப் பணிகள் தாமதமடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கடைகளை அகற்ற கடிதங்கள்; முஸ்லிம் உரிமையை பறிக்கும் செயல்

### மேல் மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26
பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக தம்புள்ள பள்ளிவாசலை சூழவுள்ள கடைகளை அகற்றுமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

முழு உரிமையையும் பறிக்கும் செயல் இது என்று மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.



தம்புள்ள பள்ளிவாசலை சூழவுள்ள கட்டடங்களை ஏழு நாள்களுக்குள் அகற்ற அரசு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

2012 ஆம் ஆண்டு முதல் பள்ளிவாசலை அகற்றுவதற்கான திட்டம் தொடர்ச்சியாக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை தற்போது அம்பலமாகியள்ளது.

புனித பூமி திட்டத்தின் கீழ் பள்ளிவாசலை மூடத்திட்டமிட்டனர். எனினும் அந் தப் பகுதியில் உல்லாச விடுதிகளும், மதுபானசாலைகளும் இல்லாமல் இல்லை.

இந்தநிலையில் அரசு பேரினவாத சக்திகளின் ஊடாக பள்ளிவாசலை அகற்ற முனைகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்கள் தனக்கு தெரியப்படுத்தப்படுவதில்லை எனக் கூறி வரும் ஜனாதிபதி அவருக்கு கீழ் இயங்கும் அமைச்சினால் கட்டடங்களை அகற்றுவதற் கான கடிதங்களை அனுப்பியமைக்கு பொறுப்புக் கூற வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)

## குழுப்படம் எடுத்தல்

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்வி முதுமாணி கற்கை நெறியை யாழ். பிராந்திய நிலையத்தில் தொடரும் முதலாம் அணி (2012/2013) மாணவர்களை குழுப்படம் எடுக்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(ஜ-400)

# மகளிர் கூட்டம் திரண்டு வந்து ஒட்டினர் தேர்தல் சுவரொட்டிகளை

## நேற்று யாழ். நகரில் பல இடங்களிலும்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு மாகாண சபைக் கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் நேற்று ஆரம்பித்துள்ள நிலையில், சட்டவிரோதமாக தேர்தல் சுவ ரொட்டிகள் பட்டப்பகலில் யாழ். நகரில் பல இடங்களிலும் மகளிர் கூட்டத்தால் ஓடி ஓடி ஒட்டப்பட்டன.

வாகனத் தொடரணியுடன் வரும் மகளிர் கூட்டத்தினரே தேர்தல் பிரசார சுவரொட்டிகளை நகர் முழுவதும் நேற்று ஒட்டினர். இவர்களுடன் இரண்டொரு ஆண்களும் சிறுவர் ஒருவரும் காணப்பட்டனர்.

முதன் முறையாக வட மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதனால் வட மாகாண தேர்தல்களம் சூடு பிடித்துள்ளது. பல கட்சிகளும் இந்தத் தேர்தலில் போட்டி போட்டுக் கொண்டு குதிக்கத் தயாராகி வருகின்றனர்.

ஆளும் கட்சியின் சின்னத்துடன் கூடிய தேர்தல் சுவ ரொட்டிகள் நேற்றையதினம் யாழ். நகரின் பல வீட்டுமதில்கள், வர்த்தக நிலைய மதில்களை ஆக்கிரமித்தன.

ஆளும் கட்சியில் போட்டியிடு வார் என்று எதிர்பார்க்கப் படும் வேட்பாளர் ஒருவரே தனக்கு ஆதரவான இந்தச் சுவரொட்டிகளை ஒட்டும் பணியில் 'மகளிர் படையணியை களமிறக்கியுள்ளார்.



(ஒ-5-21)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

செல்வி தம்பிராசா கஜந்தினி

தமிழ் மொழித்தின தேசிய மட்டப் போட்டியில் (பிரிவு -05 இலக்கணப் போட்டி) தங்கப் பதக்கத்தை வென்ற யா/மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி மாணவி தம்பிராசா கஜந்தினி அவர்களை வாழ்த்துவதோடு. மேலும் கல்வியில் சிறப்புச் சித்திகள் பெற்று வாழ எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை வேண்டுகின்றோம். இவருக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திரு.க.சின்னத்துரை, ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) திருமதி க. ஸ்ரீதரன் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.



பாடசாலைச் சமூகம்.

(29606)(3.6.11)

**மணமகள் தேவை**

லண்டனில் வசிக்கும் பரணி நட்சத்திரம். பாவக் கிரகம் 40½ உள்ள அழகிய படித்த மணமகனுக்கு படித்த அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள் உள்நாடு அல்லது வெளிநாடு விரும்பப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 9687653

**வான் விற்பனைக்கு**

41 - xxxx தொடரிலக்கம் கொண்ட Isuzu வான் விற்பனைக்குண்டு.

"Full Aluminiyam Body"

தொடர்புகளுக்கு:- 077 6099071

309, K.K.S. Road, Jaffna.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.07.2013 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

**சோமசுந்தரம் சுப்பிரமணியம்**

அவர்களின் 16ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (26.07.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முருகன் கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/11048) குடும்பத்தினர்.

**After O/L** பரீட்சைப் பெறுபேறுகள் வெற்றியோ தோல்வியோ

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்களுடைய தனியார் வைத்தியத்துறையில் ஆய்வுகூடம் முதல் மற்றைய அனைத்து வைத்திய பணிகளிலும் வைத்திய அதிகாரிகளிற்கு உதவியாளராகச் செயற்படும் பதவிக்கான பயிற்சியினை இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அரச வைத்தியர்கள் மூலமாக நடாத்தி அவர்கள் கையொப்பமிட்ட சான்றிதழையும் வழங்கிப்பயிற்சி முடிவில் தொழில் வாய்ப்பையும் வழங்குகிறது கே.யு எடியுகேசன் நிறுவனம்.

உங்கள் O/L மற்றும் A/L கல்வித்தரம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடை அல்ல....

**KU EDUCATION**

Creating Employable Graduates

**CMA- மருத்துவ உதவியாளர் பயிற்சி**

செயல்முறைப்பயிற்சியுடன் கூடிய 6 மாதகாலப்பயிற்சி நெறி.

பயிற்சிக்கட்டணம் 12,500/=

KU Education

விபரங்களுக்கு - 0773164617/021-3208342

http://edu.kugroup.info

இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழப்பாணம்.

## யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்

அதிபர்

# சுப்பிரமணியம் தர்மலிங்கம் S.L.P.S.2I

அவர்களின்

# மணி விழா






அதிபர்:- சுப்பிரமணியம் தர்மலிங்கம்
பிறப்பு:- 29-07-1953
கல்வி:-
ஆரம்பக் கல்வி-யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.
இடைக்கல்வி-யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
உயர்கல்வி-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
பட்டப்பின் கல்வி டிப்ளோமா- யாழ். பல்கலைக்கழகம்.
சேவை விவரம்:-
ஆசிரியர் சேவை:-
★1984.08.11 நீர்கொழும்பு அல்ஹிலால் மத்திய மகா வித்தியாலயம்.
★1989- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
★1992-யா/மட்டுவில் சந்திர மௌலீசா வித்தியாலயம். ★1996-யா/வரணி மகா வித்தியாலயம்.
அதிபர் சேவை:- 1999-2002 யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்.
2002-2013 யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.

2013-07-29இல் அகவை அறுபதில் மணி விழாக்காணும் எமது வித்தியாலய அதிபர் அவர்கள் 16 வருடங்கள் ஆசிரியராகவும் 15 வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றியதன் மூலம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளார்.

எமது வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றத் தொடங்கி தற்போது ஓய்வு பெறும் காலம் வரையான 12 வருட காலப் பகுதியில் எமது வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பௌதீக வள வசதிகளின் விருத்திக்கும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிற்கு வேண்டிய பல உட்கட்டமைப்பு வசதிகளை தனது விடா முயற்சியினால் கல்வித்திணைக்களத்தினரிடம் இருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பெற்று பாடசாலையை வளம்படுத்திய ஒரு செயல் வீரராகத் திகழ்கின்றார்.

கல்விப் பணி மட்டுமன்றி பல்வேறு சமய, சமூகப் பணிகளிலும் அரும் பெரும் தொண்டாற்றி வருபவர் பல் வேறு தரப்பினருடனும் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தி சமய சமூகப் பணிகளை முன்னெடுக்கும் ஆற்றலும் சுறுசுறுப்பும் கொண்டவர். இவரது சேவை இவ் வித்தியாலயத்திற்கு கிடைத்தமை பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் பெற்ற பெரும் பாக்கியமே. இவரது சேவையை எம்மால் மறக்கமுடியாததொன்று மட்டுமின்றி வாழ்நாள் முழுவதும் போற்றப்பட வேண்டியதும் ஒன்றாகும்.

ஓய்வுபெற்றுச் செல்லும் எமது அதிபர் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம். அதற்காக எல்லாம் வல்ல சேவலப்பிட்டி கந்தசுவாமியார் அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழையமாணவர்கள், நலன்விரும்பிகள்.

(சி/11046) வரணி

முதலாம் பக்கத் தொடர்ச்சி

# வாதரவத்தையில் இளம் பெண்ணின் எலும்புக்கூடு, எச்சங்கள் நேற்று மீட்பு

கடற்கரை நோக்கிச் சுமார் 200 மீற்றல் தூரத்தில் ஒழுங்கையை அண்மித்துள்ள பற்றையிலிருந்தே எலும்புக்கூடு நேற்று மீட்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் குறித்த பெண்ணின் உள்ளாடை, மேலங்கி, கைக்குட்டை என்பனவும் அவரது தோடு, தலைக் கிளிப், கறுப்புநிற பாதணி அவரது தலைமுடி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. சுமார் 30 தொடக்கம் 35 சென்ரிமீற்றர் நீளமுடையதாகத் தலைமுடி காணப்படுகின்றது.

அந்த ஆடைகள் அணிகலன்கள் பழுதடையவில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு, அவர் சுமார் ஒரு மாதத்துக்கு முன்னரான காலப்பகுதியிலேயே கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அவரது செருப்பின் பின்புறம் செம்பாட்டு மண் ஒட்டிக் காணப்படுகின்றது. குறித்த பெண் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அங்கு மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிட்டு குறித்த பெண் யார் என்பது தொடர்பாகத் தகவல் தெரிந்தவர்கள் வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்தியசாலைத் தரப்புக் கேட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணை முன்னெடுத்துள்ளனர். (ஐ-4-5)

# ஆஸ்திரேலியப் படகு விபத்து; நேற்றுவரை 11 உடல்கள் மீட்பு

பேரைத் தேடும் பணி தொடர்வதாகவும், உயிரிழந்தவர்களில் 4 இலங்கைச் சிறுவர்கள் மற்றும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் உள்ளடங்குவதாகவும் இந்தோனேஷியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் 189 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 180 புகலிடக் கோரிக்கையாளர்கள் உட்பட 208 பேருடன் இந்தோனேஷியாவிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு படகு ஒன்று புறப்பட்டது; படகு புறப்பட்டு ஒன்பது மணி நேரத்தின் பின்பு, ஜாவாத் தீவுக் கூட்டத்துக்கு அருகில் கடல் அலையால் எத்துண்டு பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

படகில் 125 உயிர் காப்பு கவசங்கள் இருந்தமையால் அதனைப் பயன்படுத்தி புகலிடக் கோரிக்கையாளர்கள் தப்பிக்க முயற்சித்துள்ளனர். அந்த நேரத்தில் விபத்துக்குள்ளான பகுதியில் இந்தோனேஷிய மீனவர் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன.

மீனவர்களது உதவியோடு பெரும்பாலானவர்கள் தப்பித்துள்ளனர். இருந்த போதும் 28 குழந்தைகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

நேற்று மாலை வரையில் கிடைத்த தகவல்களின் பிரகாரம் 189 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். 11 பேரது சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. அவர்களில் 4 பேர் சிறுவர்கள் எனவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்ணின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

எஞ்சிய 8 பேரது நிலைமை என்னவென்று தெரியவில்லை என்று தேடுதல் பணி தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களின் மற்றொரு படகும் மாட்டியது

இதேவேளை, இலங்கையிலிருந்து கடந்த 6 ஆம் திகதி புறப்பட்ட படகு ஒன்று கொஸ்கோ தீவிலிருந்து 14 கடல் மைல் தொலைவில் கடல் சீற்றத் தில் மாட்டுப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த 60 பேர் பயணம் செய்வதுடன் அதில் 5 பேர் கர்ப்பிணிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## மருத்துவ பீட மாணவன்....

அவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடந்த வருடம் ஒக்ரோபர் 16 ஆம் திகதி குற்றப்பத்திரம் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

விசாரணைகளின் மூலமாக அவர் வழங்கியதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது. அவருக்கு எதிரான வேறு எந்த ஆதாரமும் இல்லை என்று கூறி விசாரணை நிறைவில் அவரை நிரபராதியாக இனங்கண்டு நேற்று விடுதலை செய்தது மேல் நீதிமன்று. (ஐ-4)

## ஈழத்தமிழர் தொடர்பான...

அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லிணக்க விடயத்தில், இந்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டில் நிச்சயமாக எந்த மாற்றமும் இல்லை.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் எல்லா சமூகத்தினரும் அதிலும் குறிப்பாக தமிழர்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிப்பதை உறுதிப்படுத்து வதற்கு புதுடில்லி நீண்டகாலமாக முயற்சித்து வருகின்றது.

இந்த நோக்கத்தை எட்டும் வரை நாம் தொடர்ந்தும் பணியாற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ-5)

# 13இற்கும் இந்தியாவுக்கும் எவ்வித தொடர்புமில்லை!

இலங்கை-இந்திய ஒப்பந்தம் வேறு; பஸில் கருத்து

கொழும்பு, ஜூலை 26

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து குறிப்பிடப்படவில்லை. சட்டம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் ஏனைய மாகாணங்களில் மத்திய அரசு எந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதோ அதையே வட, கிழக்கிலும் மேற்கொள்ள வேண்டும் என்றே 1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது- இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் என்பது இலங்கை அரசமைப்பின் ஒரு திருத்தம். காலத்தின் தேவைக்கேற்ப அதில் நாம் மாற்றங்களை மேற்கொள்ளலாம். இதில் குறைபாடுகள் இருக்கின்றன என்றுதான் நாமும் கூறுகின்றோம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை – இந்திய ஒப்பந்தம் இலங்கையின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், முன்செல்வதற்கும் தடையாக இருக்கின்றது என்று கூறமுடியாது. இந்த ஒப்பந்தம் பற்றி பலருக்குத் தெரியாது. இப்போது பிறக்கும் குழந்தைகளுக்கும் தெரியாது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறைபாடு இருக்கிறது என்றுதான் நாமும் கூறுகின்றோம். அதிகாரங்கள் குறைவு எனக் கூறப்படுகின்ற இந்தத் திருத்தச் சட்டத்தின்கீழ்தான் தமிழ்த் தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது. இந்த அபாயம் மறுபடியும் உருவாவதற்கு இடமளிக்க முடியுமா? இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி சட்டம் நடைமுறைப்படுத்தம் நிறுவனங்களை வடக்கு, கிழக்கில் நிறுவ முடியாது. நாட்டின் ஏனைய பகுதிகளில் சட்டம் மற்றும் பாதுகாப்பு என்பவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறதோ அதுபோலவே வடக்குக் கிழக்கிலும் இடம்பெற வேண்டும். மாகாண அரசால் அல்ல, மத்திய அரசால் மட்டுமே. இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது குறித்து குறிப்பிடப்படவில்லை – என்றார்.

# மரண அறிவித்தல்கள்



## கனகசபாபதி பரமேஸ்வரி

பூநாறிலேன், கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி பரமேஸ்வரி நேற்று(25.07.2013) வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசா-பொன்னம்மா தம் பதியரின் அன்பு மருமகளும், சாமுண்டீஸ்வரி, கமலலோஜினி, அருணகிரிநாதன் (ஜேர்மனி), விவேகாநந்தராசா(நியூ விவேகா ஜூவல்லர்ஸ்), திலகவதி (ஆசிரியை, யா/இணுவில் மத்திய கல்லூரி), சிவாநந்தன் (ஜேர்மனி), கயிலேயங்கிவாசன், குகதாஸ், நிஜிதா, இந்திரதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும், சிவராசா, வரதராஜா, கருணாகரன், ரவீந்திரராசா, விஜயா, அமுதவல்லி, தங்கராணி, சந்திரகுமாரி, விஜயா அகியோரின் அன்பு மாமியும், செந்தில்குமரன், கஜானனி, கஜாநந்தன், அபிராமி, அரவிந்தன், அஜித், சிந்துஜன், தினேஸ்ராஜ், தீபனா, விக்னா, விஸ்னா, விபுதீஸ், அபிராமி, டக்சிகா, சிவரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.07.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறிலேன், 20, கொக்குவில்மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## செபஸ்ரியன் சுவாம்பிள்ளை (சீமான்)



மன்னார் பெரியகடையைப் பிறப்பிடமாகவும் வளாகவீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் சுவாம்பிள்ளை (சீமான்) நேற்று (25.07.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புஸ்பத்தின் அன்புக் கணவரும் புனிதா, கீதா, கவிதா, இக்னேசியஸ் கிளனி (தேவா-சென் சாள்ஸ் மகா வித்தியாலய ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிறிஸ்ரி, கண்ணதாசன், உதயகுமார், பிரியந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் நிருக்சன், ஜனுசியா, மிலுக்சன், திவ்யா, தீபக், றிஜான், லக்ஷியா, ஆருணியா, பவிக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.07.2013) வெள்ளிக்கிழமை யாழ்.புனித சவேரியார் ஆலய வளாகத்தில் இடம்பெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
0718561553

(29943)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம்
05
09
1918

மறைவு
27
06
2013

அமரர் அ.நல்லதம்பி P.W.D. (ஓவசியர்)

எமது அன்புத் தெய்வம் முன்னாள் தலைவர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO LTD) அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (27.07.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்தப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"புனிதம் இல்லம்"
மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு.

(சி/11050)

குடும்பத்தினர்.

## கூட்டமைப்பு திங்களன்று வேட்புமனு

வடமாகாண சபைக்கான தேர்தல் சூடுபிடித்துள்ளது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் வேட்பாளர் பெயர்ப்பட்டியல்களை தயாரிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பெயர்ப்பட்டியல் நாளையதினம் தலைவர் இரா. சம்பந்தனால் இறுதி செய்யப்படவுள்ளது.

இதன் பின்னர் எதிர்வரும் திங்கள்கிழமை வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

# சென்.மேரிஸ் வி.க. சம்பியனாக தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 26
ஊழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் நடந்திய கழக கண்மணிகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரணைமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
கடந்த வாரம் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இரணைமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்டநேரமுடிவில் இரு அணியினரும் கோல் எதனையும் பெறாத நிலையில் வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் இரணைமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
(ற-23)

மஞ்சி வெற்றிக் கிண்ணம் – கோப்பாய் பிரிவு

# ஆவரங்கால் இந்து, மத்தி இறுதியாட்டத்துக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மஞ்சி வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் கோப்பாய் பிரிவு அணிகளுக்கிடையான இறுதியாட்டத்துக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் ஆகியன தகுதி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் ஆவரங்கால் மத்திய விளயாட்டுக் கழ கஅணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-23)

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மஞ்சி வெற்றிகிண்ண கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் யாழ்ப்பாணப் பிரிவு, தென்மராட்சிப் பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-23)

# கரம் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்.மாவட்ட கரம் சங்கம் நடந்தும் 14,.18 வயதுப் பிரிகளுக்கு இடையிலான அசோசியன் வெற்றிக் கிண்ண கரம் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.
அதில் கலந்துகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட கரம் சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 6ஆவது மெய்வன்மை போட்டிகளில், 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கள நிகழ்வில் சிறந்த வீராங்கனையாக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி மெற்றில்டா தெரிவு செய்யப்பட்டார். (ற-23)



# உதைபந்து சுற்றுப்போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்படும் 47 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை அரியாலை சனசமுக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.(ற-23)

# கடல்சார் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தும் கடல்சார் போட்டிகள் இன்று காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது அதில் ஆண்களுக்கான நீச்சல், கட்டுமரம் வலித்தல், படகு ஓட்டம் என்பன இடம் பெறவுள்ளன. (ற-23-34)


# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 26
தெல்விப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடந்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் அராலி பாரதி விளையாட்டுக் கழகம், செனிஸ்ரார் விளையாட்டுக் கழகம்ஆகியனவெற்றிபெற்றன.
முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி பாரதி வி.க. அணி மோதியது.
அதில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
செனிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும்அராலிமாவத்தை விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் செனிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# இந்தியப் பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

இந்திய பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹன்சி குரோஞேசியின் தந்தை தெரிவித்துள்ளார்.
மறைந்த ஹன்சி குரோஞ்ஞேக்கு எதிராக ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தியப் பொலிஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.
இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஹன்சி குரோஞ்ஞேயின் தந்தை சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.
2000 ஆம் ஆண்டு ஆட்ட நிர்ணயங்கள் இடம்பெற்றதாக தெரிவித்து, ஹன்சி குரோஞ்ஞே மற்றும் சர்வதேச தரகர்கள் 13 பேருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.
(ற)





# பிரபல குத்துச் சண்டை வீரர் காலமானார்

அமெரிக்காவை சேர்ந்த பிரபல குத்துச்சண்டை வீரர் இமைல் கிரிப்பித் 75 ஆவது வயதில் காலமானார். 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குத்துச்சண்டை போட்டிகளில் பெரும் புகழ்பெற்றவராக விளங்கியவர் இமைல் கிரிப்பித்.
1962ஆம் ஆண்டில் அவர் உலக சம்பியன் பட்டம் பெற்றார். இந்த போட்டியில் இவருடன் மோதிய பென்னி பாரெட், கடும் காயம் காரணமாக உயிரிழந்தார்.
ஞாபக மறதி உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த கிரிப்பித், கடந்த சில நாள்களாக அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (ற)

# கிரிக்கெட்டில் இருந்து வோர்ன் ஓய்வு



ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பிக் போஷ் '20/20' கிரிக்கெட் ஆட்டங் களில் இருந்து நட்சத்திர சூழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் ஓய்வுபெறவுள்ளார்.
இதன்மூலம் அவரின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
வர்த்தகம், குடும்பம் மற்றும் வர்ணனை போன்ற பொறுப்புக்கள் காரணமாக இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் கூறியுள்ளார்.
கிரிக்கெட்டை தாம் நேசிப்பதாக தெரிவித்த ஷேன் வோர்ன், அதனை தற்போது பார்வையிட நேரம் வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## அதிகமான பணமே தவறுகளுக்கு காரணம்



கிரிக்கெட்டில் அதிகளவு பணம் புரள்கின்றமையே வீரர்கள் தவறிழைப்பதற்கு காரணம் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

அதிகளவு பணத்தை சம்பாதிக்கும் எதிர்பார்ப்பில் அவர்கள் தவறிழைக்க முற்படுவதாக கபில்தேவ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் காரணமாக கிரிக்கெட் ஆட்டங்களின் மகத்துவத்துக்கு களங்கம் ஏற்படுவதாக கபில்தேவ் கூறியுள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளில் ஆட்ட நிர்ணயங்களில் ஈடுபட்டதாக தெரிவித்து இந்தியாவின் சில வீரர்களிடம் பொலிஸார் கடும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான வீரர்களுக்கு எந்தவித தயவுமின்றி தண்டனைகள் விதிக்கப்படவேண்டும் என கபில் தேவ் வலியுறுத்தியுள்ளார். (ற)

## '20/20' தரவரிசையில் இலங்கை முதலிடம்

சர்வதேச கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள ''20/20'' ஆட்டங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

நாளை பாகிஸ்தான்- மேற்கிந்திய தீவுகள் மோதும் இரண்டு '20/20' ஆட்டங்கள் நடைபெற உள்ளன.

அதற்கு முன்னதாக ஐசிசி '20/20' தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.


அதில், இலங்கை அணி 134 புள்ளிகள் எடுத்து முதலிடத்திலும், அதற்கு பின் 127 புள்ளிகளுடன் மேற்கிந்திய தீவுகள் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

இந்தியா 121 புள்ளிகளுடன் தொடர்ந்து மூன்றாவது இடத்திலேயே உள்ளது.

அதற்கு அடுத்தப்படியாக 118 புள்ளிகள் எடுத்து பாகிஸ்தான் நான்காவது இடத்திலும், 113 புள்ளிகள் எடுத்து இங்கிலாந்து ஐந்தாவது இடத்திலும், தென்னாபிரிக்கா 112 புள்ளிகள் எடுத்து ஆறாவது இடத்திலும் உள்ளன.

மொத்தம் 16 நாடுகளில் கனடாவும், ஆப்கானிஸ்தானும் போதுமான '20/20' போட்டிகளில் விளையாடவில்லை.

அதனால் மீதமுள்ள 14 அணிகளை வைத்தே தரவரைசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. (ற)



மீண்டும் வருவாரா லீமன்: ஆஸ்திரேலியாவின் பயிற்சியாளர் பதவியில் இருந்து திடீரென நீக்கப்பட்ட டெரன் லீமன் ஆஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்சி அக்கடமியில் வலைப் பயிற்சியில் ஈடுபடுகின்றார்.

## பாகிஸ்தானுக்கு எதிரான '20/20'

## மேற்கிந்தியத் தீவுகள் அணிவிவரம் அறிவிப்பு



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட '20/20' தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. 13 பேர் கொண்ட அணி விவரமே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

டெரன் சமி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியில், அண்மையில் நிறைவடைந்த சிம்பாப்வே அணிக்கெதிரான '20/20' தொடருக்கான அணியில் இடம்பெற்றிருக்காத கிறிஸ் கெய்ல், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் இடம்பெற்றுள்ளனர்.

அத்தோடு, அத்தொடரில் இடம்பெற்றிருந்த அன்ட்ரே ரசல், டினேஷ் ராம்டின் இருவரும் இந்தத் தெரிவில் சேர்க்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

டெரன் சமி, சாமுவேல் பத்ரி, கிறிஸ்தோபர் பார்ன்வெல், டீனோ பெஸ்ற், டெரன் பிராவோ, டுவைன் பிராவோ, ஜோன்சன் சார்ள்ஸ், ஷினொன் கப்றியல், கிறிஸ் கெய்ல், கெரான் பொலார்ட், சுனில் நரைன், மார்லன் சாமுவேல்ஸ், லென்டில் சிமன்ஸ். (ற)

### மாற்றுத் திறன் உள்ளோருக்கான செஸ்

## தமிழக வீராங்கனை சம்பியன்



மாற்றுத்திறனாளிகளுக்கான உலக செஸ் போட்டியில் தமிழக வீராங்கனை ஜெனிதா சம்பியன் பட்டம் வென்றுள்ளார். செக் குடியரசில் உள்ள வெல்கே லாசினி நகரில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற பெண்களுக்கான உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது. அதில் சம்பியன் பட்டம் வென்றதை அடுத்து தேசிய அளவில் நடக்கும் தொடர்களில் இவர் நேரடியாக பங்கேற்கும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. (ற)

# சாதித்தது பாகிஸ்தான் தொடரை இழந்தது தீவுகள்



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி, 5 ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் அபார வெற்றி பெற்றதை அடுத்து இத்தொடரை 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

சென்.லூசியாவில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்படுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.

2 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களுடன் தடுமாறிய அவ்வணி, மூன்றாவது இலக்குக்காக 54 ஓட்டங்களைப் பகிர்ந்தது. அத்துடன் ஆட்டத்தின் இறுதி நேரத்தில் அவ்வணி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டுவைன் பிராவோ 27 பந்துகளில் 48 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 89 பந்துகளில் 45 ஓட்டங்களையும், ஜோன்சன் சார்ள்ஸ் 71 பந்துகளில் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஜுனைட் கான் 48 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மொஹமட் இர்பான், சயீட் அஜ்மல் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

243 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49.5 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்குக்காக 51 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 3 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுச் சற்றுத் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. எனினும், தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இரு அணிகளினதும் ஓட்ட எண்ணிக்கை சமனாக இருந்தபோது, மிஸ்பா உல் ஹக் 49ஆவது ஓவரின் 2ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். 3ஆவது, 4ஆவது பந்துகளின் ஓட்டங்களைப் பெறத் தவறிய சயீட் அஜ்மல், 5 ஆவது பந்தில் ஓர் ஓட்டத்தைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 100 பந்துகளில் 64 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 93 பந்துகளில் 63 ஓட்டங்களையும், உமர் அக்மல் 28 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டீனோ பெஸ்ற் 3 இலக்குகளையும், ஜேசன் ஹோல்டர், டெரன் சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாகவும் தொடர் ஆட்ட நாயகனாகவும் பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவானார். (ற)

# அணியில் இடம்பெறாமைக்கு மிஸ்பாவே காரணம்

## அப்துல் ரஸாக் குற்றச்சாட்டு



பாகிஸ்தான் அணியில் இடம்பெறாமைக்கு அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக், அவ்வணியின் உப தலைவர் மொஹமட் ஹபீஸ் ஆகியோரே காரணம் என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரஸாக் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் இடம்பெறாத அப்துல் ரஸாக், இறுதியாக 2011ஆம் ஆண்டு ஒருநாள் சர்வதேச ஆட்டத்திலும், 2012ஆம் ஆண்டு '20/20' சர்வதேச ஆட்டத்திலும் பங்குபற்றியிருந்தார்.

இந்நிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ் ஆகியோரே தன்னை அணியிலிருந்து நீக்கினர் என்று தெரிவித்ததோடு, பாகிஸ்தானை சர்வதேச அரங்கில் மீண்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்பார்ப்பு இன்னமும் தன்னிடம் காணப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

வேறு சிலரின் அறிவுரையின் படி, முன்னர் காணப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸாகா அஷ்ரப் சிரேஷ்ட வீரர்கள் அனைவரையும் அணியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார் எனக் குறிப்பிட்ட அப்துல் ரஸாக், தற்போது புதிய கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவாகியுள்ளதை அடுத்து என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு ஆவலாக இருப்பதாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியின் அண்மைக்காலத் தோல்விகளுக்கு பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கே காரணம் எனக் குறிப்பிட்ட அப்துல் ரஸாக், அவர் மிக மெதுவாகத் துடுப்பெடுத்தாடுவதன் காரணமாக அணியிலுள்ள ஏனைய வீரர்களின் மீது அழுத்தம் ஏற்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு வைத்து ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை 3-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டதுடன், அத்தொடரின் நாயகனாக மிஸ்பா உல் ஹக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ற)

# தென்னாபிரிக்க பந்துவீச்சை துவம்சம் செய்யும் இந்திய அணி

## ஜொன்ட் ரோட்ஸ் ஆரூடம்



வேகப்பந்து வீச்சை கண்டு இந்திய வீரர்கள் பயப்படுவதே கிடையாது என்று புகழாரம் சூட்டியுள்ளார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன்ட் ரோட்ஸ்.

இந்திய அணி எதிர்வரும் டிசெம்பர் 26ஆம் திகதி முதல் ஜனவரி 19ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட உள்ளது.

இந்நிலையில் இந்திய அணி குறித்து முன்னாள் தென்னாபிரிக்க வீரர் ரோட்ஸ் கூறுகையில்,

''இந்திய அணி வீரர்கள் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சை சமாளிக்கும் திறமையுடன் உள்ளனர். குறிப்பாக டேல் ஸ்டெயின் பந்து வீச்சை அவர்கள் எளிதாக சமாளிக்க முடியும்.

ஐ.பி.எல் போட்டிகளில் இந்திய வீரர்கள், தென்னாபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய வீரர்களுடன் இணைந்தும், எதிராகவும் விளையாடியது நல்ல அனுபவம் கொடுக்கும்.

இந்திய வீரர்கள் தற்போதெல்லாம் வேகப் பந்து வீச்சைக் கண்டு பயப்படுவதாக தெரியவில்லை. அவர்களுக்குள் அதிக அளவில் நம்பிக்கை உள்ளது. அவர்களிடம் நல்ல திறமை உள்ளது.

தற்போதைய இந்திய வீரர்களைப் பார்க்கும்போது தென்னாபிரிக்க பந்து வீச்சை தவிடுபொடியாக்கி விடுவார்களோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது'' என்று புகழ்ந்து தள்ளியுள்ளார். (ற)

மலேசியாவில் ஹோட்டல் கற்கைநெறியில்
மாதாந்தம் 40000/= மேல் உழைக்கலாம்
எழுத்து மூலமான உறுதிப்பாட்டுடன்
உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்
350000/= மட்டும் செலுத்தினால் போதும்
Sal International College
சர்வதேச வேலை வாய்ப்புக்கு ஏற்ற சான்றிதழ்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 5689090

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச Certificates இனை பெறலாம்
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007)
இது வரைக்கும் 718 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 03.08.13 Sat at 10 am
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).
ஆரம்பம் 05.08.13 Mon at 3.30pm
No. 181, 1st Floor, Main Street,
Nelliady. (சோதி வீதி முன்பாக)
DELF பரீட்சையில் யாழில் எமது நிறுவனத்திலேயே அதிகமானோர் சித்தி
0779 789 456
DEUTSCH,IELTS,B1,ITALIAN, & SINHALA CLASSES

வடக்கின் இளைஞர் யுவதிகளுக்கோர் வரப்பிரசாதம்!!
தவறவிடாதீர்கள்!
ஜப்பான் வீசா
வயது எல்லை 18 - 35
- முதன் முறையாக ஜப்பான் நாட்டில் கல்விபயில, தொழில் ஒன்றைச் செய்வதற்கான அரிய வாய்ப்பு... மாதவருமானம் 250,000/= முதல் 300,000/= வரை
- ஜப்பான் நாட்டில் 50 கல்வி நிலையங்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு...
- 2 வருட கற்கை வீசா மற்றும் தொழில் வாய்ப்பு...
நவம்பர் மாத இறுதிக்குள் எல்லா ஆயத்தங்களும் பூர்த்தி
27.07.2013 அன்று காலை 09.00 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இலசவ கருத்தரங்கு
ஜப்பானிய கல்வி நிறுவக அதிகாரிகளுடனான நேரடி சந்திப்பு
27ஆம் திகதி அன்றே நுழைவுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
(Spot Admission & Enrolement)
AKIKO JAPANESE LANGUAGE & TRAINING CENTER (PVT) LTD.
No.51/2, Old Camp Road, Dalugama, Kelaniya.
Web: www.akiko.lk E-mail: akiko.shermila@gmail.com
தொடர்புகளுக்கு:
தர்ஷினி - 077 445 2087 (யாழ்ப்பாணம், வடமிராந்தியம்)
ஸ்ரீதரன் - 077 193 8290 (கொழும்பு)
அனுமதி இலவசம்
Entrance free

அதிபர் தரம் II,III
வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கான வகுப்புகள்
ஆரம்பம்:-
ஞாயிறு 9.00 மணி
ஒவ்வொரு ஞாயிறும் 9.00-5.00 மணிவரை
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்சியல் வங்கி யருகில்)
T.P: 0754164564

SLEAS வகுப்புகள்
தொடர்ச்சியாக துறைசார் விரிவுரையாளர்களால் வகுப்புகள் நடைபெறும் ஒரே இடம்
பிரிவு I
ஞாயிறு 1.00- 5.00 மணி
பிரிவு II
புதன் 4.30 மணி
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்சியல் வங்கி யருகில்)
T.P: 0754164564

கா.பொ.த. உயர்தர மாணவர்களின் கவனத்திற்கு !!!
உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவச் செல்வங்களே! எதிர்வரும் (27-07-2013) அன்று (சனிக்கிழமை) உயர்தர பரீட்சைக்குரிய சிறந்த வழி காட்டலும், முன் ஆயத்த ஆலோசனைகளையும் கொடுத்து மாணவர்களுடைய பரீட்சைக்காக விசேடமாக இறை பிரார்த்தனை செய்யவிருக்கிறோம். எனவே சகல மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இடம் :- இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை இல.673, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.
காலம் :- 27,07,2013 [ சனிக்கிழமை ]
நேரம் :- மு.ப 9.00 முதல் - 11.00 வரை
(பிரபலமான ஆசிரிய ஆலோசகர்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது)

கடை வாடகைக்குத் தேவை
ஆஸ்பத்திரி வீதியில் சத்திரச் சந்திக்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இடையில் கடை வாடகைக்குத் தேவை.
தொடர்பு
0776002611, 0778445431

கணினி வகுப்புகள்
GRAPHIC DESIGN
- Photoshop - Corel Draw
- Illustrator - In design
WEB DESIGN
- Photo Shop - HTML - CSS - Fir works
- Java Script - Flash - Dream weaver
Free website for students
Free Video Lectures & Fast-Track Course also available
ACTWARE
396 (570) K.K.S. ROAD JAFFNA
TP:0721596500 / 0212223359

இது உண்மை, யதார்த்தம், நடைமுறைச்சாத்தியம்...
ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க-
ஒரு இலட்சம் வரை உழைக்க
நேர்முகத் தேர்வும் - வழிகாட்டலும்
4 வருட விசா,
O/L தேவையில்லை
40 வயதுக்குட்பட்டவர்கள்
இடம் : திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
காலம் : 28.07.2013 (ஞாயிறு)
நேரம் தொலைபேசி மூலம் முற்பதிவின் போது தெரிவிக்கப்படும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 5689090

தொழில்நுட்பவியல் துறைசார்ந்த விரிவுரையாளர்களினால்
A/L 2015
தொழில்நுட்பவியல் பாடநெறிகள்
★ Science for Technology
★ Engineering Technology
★ Bio Systems Technology
புதிய பிரிவுகள் ஆரம்பம்
27.07.2013
சனி காலை 8 மணி
NEC மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயில் அருகாமை) 0774696695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.